கல்கி

KALKI 22.9.91 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு



உள்ளே...

- குடைகள் வந்த கதை
- வங்கிகளில் நடக்கும் மோசடிகள்
- சிறுமி அமீனாவின் சோகக் கதை
- இன்னும் ஏராளச் செய்திகள்

உங்கள் ஃபர்னிச்சரை பாலிஷ் செய்யும் நேரமா –

அதை டச்வுட் செய்யுங்கள்.



ஃபர்னிச்சருக்கு பேசத் தெரியாது. ஆனால் என்ன ? ஒரு முறை பார்த்தாலே, எந்த பாலிஷ் அவசியம் எந்த தேவையில்லை என்பது புரிந்துவிடும். மேலும் அழகான ஃபர்னிச்சர் உயிரற்றுக் கிடந்தால், அதன் மதிப்புதான் என்ன ? ஆனால் அடுத்த முறை உங்கள் இல்லத்தை பெயின்ட் செய்யும்போது ஃபர்னிச்சருக்கும் அவசியம் பாலிஷ் செய்யுங்கள் - டச்வுட் உபயோகித்து.

டச்வுட் உபயோகிப்பது மிகவும் எளிதானது. இதற்காக ஒரு பாலிஷ் செய்பவரை அழைக்கத் தேவையில்லை. உங்கள் பெயின்டரே இதை பிரஷ்ஷினால் பூச முடியும்.

தெரியுமா ? டச்வுட் பூசப்பட்ட ஃபர்னிச்சர் பல வருடங்களுக்கு புதியதுபோல் பொலிவுடன் இருக்கும் ! ஏனென்றால் டச்வுட்டில் பாலியூரிதேன் உள்ளது. அது ஃபர்னிச்சரை வலுவுடையச் செய்வதுடன், கறைகள், புள்ளிகள் மற்றும் கீறல்களிலிருந்து பாதுகாக்கிறது. ஆனால் ஃபர்னிச்சர் மீது சூடான நீர் விழுந்தாலோ அல்லது ஃபேனர் வாக் உராய்ந்தாலோ, நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

டச்வுட் க்ளாஸி ஃபினிஷின் பளபளப்பு எங்கிருந்தாலும் அறிய முடியும். ஆனால் நீங்கள் பளபளக்கும் ஃபினிஷை விரும்பாவிட்டால் உபயோகியுங்கள் டச்வுட் மேட் ஃபினிஷ். இனி டச்வுட் உங்களுடையது. நீங்கள் விரும்பினால் மேட் மற்றும் க்ளாஸி ஃபினிஷ்களை கலந்து உங்களுக்கு பிடித்த அளவு பளபளப்பை ஃபர்னிச்சரில் உண்டாக்கலாம். ஆனால் ஃபர்னிச்சரின் தேவையை உணர்ந்து இப்பொழுதே அதன் நன்மைக்காக கொண்டு வாருங்கள் டச்வுட்.



உங்கள் பெயிண்டரைப் பூசச் செய்யுங்கள்.

ஃபர்னிச்சருக்கு புத்துயிர் ஊட்டிடும், எழிலுடன்

தயவு செய்து, டச்வுட் இன் பல ஆண்டு காலம் நீடிக்கும் அழகினைப் பற்றிய இலவச சிறு புத்தகத்தை அனுப்பவும். K1

பெயர் ____________________


____

முகவரி ____________________

____

____

டச்வுட் இன் முகவர்: **ஏஷியன் பெயின்ட்ஸ்**
டச்வுட் பிரிவு, த.பெ. எண். 11701 மும்பை 400 021.



காத்திருத்தல்...

○ 'பாமாயில்
வாங்கித் தந்துவிட்டுப்
பாட்டைத் தொடங்குங்கள்' - என்றாள்
கம்பன் மனைவி!

காட்டுக்குப் போன இராமன்
நாட்டுக்குத்
திரும்பி விட்டான்.
பங்கீட்டுக் கடைக்குப் போன
கம்பன் - வீட்டுக்குத்
திரும்பவில்லை இன்னும்!

எழுதுவான்
கம்பன் என்று எதிர்பார்த்திருந்த
பாலகாண்டத்திற்கு
நரைத்துப் போனது தலை!

○ பையனைப்
பள்ளியில் சேர்த்துவிட்டு வரப்
புறப்பட்டுப் போனார்
திருவள்ளுவர்.

நன்கொடைப் பேரத்தில்
இரண்டடியார் காலடியாய்ச்
சுருங்கி...
மீளவில்லை இன்னும்..!

'அகர முதல'
என அவர் கையில்
ஆரம்பமாக அவாவியிருந்த
முதற் குறட்பாவுக்கே
பார்வை மங்கிக்
கண்ணாடி போட்டுக் கொண்டது.

○ அருகன்
திருக்கோயிலுக்கு
வரைபடம் சமர்ப்பித்துக்
கட்டுதற்கு
ஒப்புதல் கேட்க
அலுவலகம் சென்றார்
இளங்கோவடிகள்.

கண்ணகிக்குக்
கோயில் கட்டி முடித்து விட்டான்
செங்குட்டுவன்.

இளங்கோ, பாவம்!
மடியைத் தடவியபடி - அலுவலகப்
படியிலேயே இன்னும்!

'திங்களைப் போற்றுதும்'
என்ற முதல் தொடரில் -
திங்கள்,
படிந்த கறை முகத்தில்
மேலும்
பரவ
அடிகளாரை
எதிர்பார்த்து நின்றது!

- தமிழன்பன்

சமீபத்தில் நீடாமங்கலம் அருகே உள்ள ஒரத்தூர் அரசு விதைப் பண்ணையில் ஒரு விழா. அதிகாரிகள் விவசாய அமைச்சரிடம், ஐ. ஆர். - 36 நெல் விதையைக் கொடுத்து வயலில் தூவச் சொன்னார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் சொன்னபடி தூவாமல் வயலில் இறங்கி நாற்றங்காலில் முறைப்படி எப்படி விதையை விதைக்க வேண்டுமோ அப்படி விதைத்தார். சுற்றியிருந்தவர்களுக்கு ஒரே ஆச்சரியம். அதே போல் மதுரை அருகே சொட்டு நீர்ப்பாசனம் பெறும் கரும்புத் தோட்டத்தில் கடகடவென்று கரும்புத் தோகைகளை விலக்கிக் கொண்டு, உள்ளே சென்று பார்த்தார் அமைச்சர். வரப்பு மீது நின்று வேடிக்கை பார்த்து விட்டுப் போய் விடுவார் என்று எண்ணிய அதிகாரிகள் வியந்தபடி நின்றார்கள்.

களில் என்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன். தலைவர் (எம்.ஜி.ஆர்.) என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அந்த அடிப்படையில்தான், 1972-ல் தலைவர் கட்சியை ஆரம்பித்த போது என்னை இணைத்துக் கொண்டேன்'' என்கிறார் அமைச்சர்.

1980 - ஆம் ஆண்டில் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் கிருஷ்ணன். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு எந்தவிதச் சஞ்சலமும் இல்லாமல் ஜெ. பக்கம் ஒதுங்கியவர் இவர்.

''பட்ஜெட்டின் போது எங்கள் தலைவியைத் தாக்க முயன்றார்களே அப்போது திருச்சியில், மறியல் போராட்டம் நடத்திச் சிறை சென்றிருக்கிறேன். மேலும் கருணாநிதி முதல்வராக இருந்த போது திருச்சி வழியாகச் செல்கிறார் என்றால், என்னைப் போன்றவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்து விடுவார்கள். காரணம் கறுப்புக் கொடி காட்டி விடுவோமோ என்ற பயம்தான். அப்படி மூன்று முறை 'உள்ளே' போயிருக்கிறேன்'' என்கிறார் அமைச்சர்.

''விவசாயிகளைக் கௌரவப்படுத்தியிருக்கிறார் முதல்வர்!''

— அமைச்சர் கு. ப. கிருஷ்ணன்

''என்னைப் பற்றித் தெரியாதவர்கள், ஆச்சரியப்படுவதும், வியந்து நிற்பதும் சகஜம்தான். அடிப்படையிலேயே நான் ஒரு விவசாயி. ஏர் ஓட்டுவதிலிருந்து களத்து மேட்டுக்கு நெல்லைக் கொண்டு சேர்ப்பது வரை, விவசாயத்தில் எனக்குத் தெரியாத விஷயங்கள் ஒன்றும் இல்லை. ஒரு விவசாயிக்கு விவசாயத் துறையைக் கொடுத்து விவசாயிகளை கௌரவப்படுத்தி இருக்கிறார் புரட்சித் தலைவி'' என்கிறார் விவசாயத் துறை அமைச்சர் கு. ப. கிருஷ்ணன்.

அமைச்சரின் சொந்த ஊர், வளம் கொழிக்கும் காவிரிக் கரையில் உள்ள குழுமணி கிராமம். திருச்சியிலிருந்து எட்டு கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சியிலுள்ள பிஷப் ஹீபர் கல்லூரியில் பொருளாதாரத்தில் இளங்கலை பட்டம் பெற்றவர்.

''கல்லூரியில் படிக்கும் காலத்தில் அவ்வளவாக நான் அரசியலில் ஈடுபட்டதில்லை. ஆனால் இலக்கிய மன்றப் பணி

அமைச்சருக்கு வயது நாற்பது. இருபத்தேழு வயதிலேயே பெற்றோர் தேர்ந்தெடுத்த மல்லிகாவைக் கைப்பிடித்தார். தமிழ் மறைப்படி திருமணம். சுடர்க்கொடி, சிரஞ்சீவி என்று இரு வாரிசுகள்.

''பருவத்தே பயிர் செய்'' என்ற பழமொழிக்கு ஏற்ப, விவசாயிகளுக்குத் தகுந்த நேரத்தில் விதைகள், இடு பொருட்கள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவை கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். காலாவதியான பூச்சி மருந்துகளை விவசாயிகளின் தலையில் வலுக்கட்டாயமாகக் கட்டக்கூடாது என்று அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டிருக்கிறோம்'' என்று கடந்த இரண்டரை மாதத்தில் செய்ததைப்

பட்டியல் போடுகிறார் அமைச்சர்.

''விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதால், மாநில மின் வாரியத்துக்கு நஷ்டம் ஏற்பட்டு, அதைச் சரிக்கட்டத்தான் சமுதாயத்தில் மற்ற பிரிவினருக்கு மின் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று பரவலாகக் குற்றச்சாட்டு கூறப்படுகிறதே?''

''கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனாளியாகவே இறந்து போகிறவன் விவசாயி என்று சொன்னார் எங்கள் தாய் (ஜெ.). அப்படிப்பட்ட விவசாயிக்கு இலவச மின்சாரம் கொடுப்பதால் தவறேதுமில்லை. ஆனால், அதே சமயத்தில், மாநில மின்வாரியத்தின் நஷ்டத்தைக் குறைப்பதற்காகவும், இலவச மின் திட்டத்தின் பயன், முற்றிலும் விவசாயத்துக்குச் சரியான முறையில் போய்ச் சேருவதற்காகவும், ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது...'' என்று கூறும் அமைச்சர் காலை ஐந்து மணிக்கு எழுந்து விடுகிறார்.

வீட்டைச் சுற்றிப் போடப்பட்டுள்ள, கத்தரி, வெண்டை, கீரை, கடலை ஆகிய பயிர்களைப் பார்வையிட்டுக் களைகளை எடுத்துத் தண்ணீர் பாய்ச்சுகிறார். மீன் வளர்ப்புக்காக ஒரு சிறிய குளத்தையும் வெட்டியிருக்கிறார். இரவு எவ்வளவு நேரம் ஆனாலும் மக்களைச் சந்திக்கிறார். நேரம் கிடைத்தால் புதுக் கவிதை, இலக்கியங்கள் என்று படிக்கிறார்.

''விவசாயத்தின் ஒவ்வோர் அம்சமும் என் வீட்டில் பிரதிபலிக்க வேண்டும் என்பது என் ஆசை'' என்று சொல்லும் அமைச்சரின் இல்லத்தின் பெயர், ''பசுமை.''

கட்சித் தலைமையிடம் அசாத்திய பிடிப்புக்கொண்டவர் அமைச்சர். ஒருமுறை ஜெ. திருச்சி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்த போது ஒன்றியச் செயலாளர் என்ற முறையில் அமைச்சரும் அவருடன் செல்ல வேண்டியிருந்தது. ஆனால், அதற்கு முந்தைய நாள்தான் அவருடைய தாயார் இறந்து போயிருந்தார். தமது சோகத்தை அடக்கிக் கொண்டு, கொள்கைப் பிடிப்புள்ள கட்சித் தொண்டனாகத் தமது தலைவியுடன் பயணத்தில் கலந்து கொண்டார். முந்தைய தேர்தல்களில் கட்சி டிக்கெட் கிடைக்காமல், கடைசியில் 1989-ல்தான் கிருஷ்ணனுக்கு ஸீட் கிடைத்தது. ஆனால், அப்போது ஜெ. அணியின் சேவல் சின்னத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். பின்னர் சமீபத்தில் நடந்த தேர்தலில்தான் ஸ்ரீரங்கம் தொகுதியில்



நின்று வெற்றிக் கொடி நாட்டினார்.

''காவிரியில் தாராளமாகத் தண்ணீர் திறந்து விட்ட பிறகும், கடை மடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் போய்ச் சேரவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறதே!''

''பல வருடங்களாகக் காவிரியில் சரியாகத் தண்ணீர் வரத்து இல்லாததால், பல கால்வாய்கள் மராமத்து செய்யப்படவே இல்லை. குறிப்பாக இரண்டு வருட தி.மு.க. ஆட்சியில், கால்வாய் மராமத்து, குளம், ஏரி மராமத்து போன்ற வேலைகள் சரியாகவே நடைபெறவில்லை. அதன் விளைவாகத்தான் கால்வாய்கள் தூர்ந்து போய் இருக்கின்றன. ஆனால் தற்போது வேகமாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

''விளையாட்டு மற்றும் வேறு பல துறைகளில், சாதனையாளர்களுக்கு அரசு, கார், வீடு, ரொக்கப் பணம் பரிசளித்து கௌரவிக்கிறது. ஆனால் நமக்காகச் சேற்றில் இறங்கி வேலை செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு எந்தப் பரிசும் கொடுப்பதில்லை. இந்த அடிப்படையிலும், இதன் மூலம் உருவாகும், போட்டியால் விளைச்சல் அதிகமாகும் என்ற நம்பிக்கையிலும் சாதனை புரியும் விவசாயிக்கு இனி பரிசுகள் கொடுத்துக் கௌரவிக்க இருக்கிறது எங்கள் அரசு'' என்கிறார் அமைச்சர்.

அமைச்சர் வீட்டில் ஜெ. படம். அதன் கீழுள்ள பலகையில்,

''மங்கையரெல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால் மாநிலத்தில் சாக்காடுமில்லை; போருமில்லை'' என்ற பாரதிதாசனின் வரிகள் பளிச்சிடுகின்றன.

- ப்ரியன்.

படம் : ராதாகிருஷ்ணன்

வங்கிகளில் நடக்கும் மோசடிகள்!

வங்கிகளில் பல மோசடிகள் நடக்கின்றன; ஏமாற்று வேலைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன - உண்மைதான். ஆனால் பல மோசடிகள், வாடிக்கையாளரின் அசிரத்தை காரணமாகவே நடக்க வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன!

உதாரணமாக 'செக்' புத்தகத்தின் உட்புறம் அதனை எப்படிப் பயன்படுத்த வேண்டும், எவ்வாறு பத்திரப்படுத்த வேண்டும் என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதைப் பலர் படிப்பதே கிடையாது. படித்தாலும் அந்த யோசனைகளைப் பி ன் ப ற் று வ து கிடையாது. காசோலைகள் திருடப்படுவதே பல மோசடிகளுக்குக் காரணமாகக் கூடும்.

ஒரு காசோலை எழுதும் போது Rupees என்று அச்சிட்ட வார்த்தைக்கு மிக அருகே இடைவெளியின்றி எழுத ஆரம்பிக்க வேண்டும். Rupees Thousand only என்று எழுதக் கூடாது; One thousand only என்று எழுத வேண்டும். இல்லையெனில் Rupees என்ற சொல்லுக்கும் Thousand என்ற சொல்லுக்கும் இடையில்Seven என்ற வார்த்தையைச் சேர்ப்பது எளிதாகி விடும். 1000 என்பதை 7000 என்று மாற்றுவதும் எளிது. இதுபோன்ற அஜாக்கிரதையான காரியங்கள் நல்லவனைக் கூடக் குற்றம் புரியத் தூண்டும்! சுலபமாக ஏமாற்ற வாய்ப்பிருக்கிறதே என்ற எண்ணம் எழுவது இயல்பு. பம்பாயில் வங்கிக்குப் போய்ப் பணம் பெற்று வர மாதமொரு முறை அனுப்பப்பட்ட ஒரு வேலைக்காரி, இந்த விதமாகப் பல ஆயிரம் ரூபாய்களைச் சுருட்டிக் கொண்டாள். ஓராண்டுக்குப் பிறகுதான் ஏமாந்து விட்ட விஷயமே அந்த வீட்டின் தலைவிக்குத் தெரியவந்தது - அதுவும் அயல்நாடு சென்றிருந்த அவள் கணவன் திரும்பி வந்த பிறகுதான்!



நிர்வாகப் பொறுப்பில் உள்ள இயக்குனர்கள் அல்லது உயர் அதிகாரிகள் 'டூர்' போகும் போது 'செக்' புத்தகத்தில் சில காசோலைகளில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டுப் போகும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆபீஸிலும் கொடுப்பார்கள், வீட்டுச் செலவுக்கு மனைவியிடமும் தருவார்கள். இது ரொம்ப ஆபத்தான காரியம். மூன்றாவது நபர் கையில் காசோலை சிக்கினால், கோவிந்தாதான்! ஒரு அதிகாரி, மனைவியிடம் ஐந்து காசோலைகளில் கையெழுத்துப் போட்டுத் தந்தார். திரும்பி வந்த பிறகு, சிக்கனமாக இருந்ததால் இரண்டு காசோலைகளைத்தான் பயன்படுத்தியதாக மனைவி பெருமையோடு சொன்னாள். ஆனால் பாக்கி காசோலைகள் எங்கே? என்ன தேடியும் அகப்படவில்லை. ஓடோடிப் போய் வங்கியில் விசாரித்த போது, மீதம் மூன்று காசோலைகளையும் பயன்படுத்தி ஏகப்பட்ட பணம் 'அம்பேல்' ஆகியிருந்தது! வங்கி ஊழியர்கள் சொன்ன அடையாளங்களை வைத்துப் பார்த்த போது தமது மைத்துனனேதான் இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கிறான் என்று தெரிய வந்தது. ஆனால் வங்கி மீதோ மைத்துனன் மீதோ எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. எனவே இப்படி அடிக்கடி டூர் போகிறவர்கள், ''ஜாயிண்ட் அக்கவுண்ட்'' வைத்திருப்பது நல்லது. கணவன் அல்லது மனைவி கணக்கை இயக்கலாம். காரியாலயமானால் இயக்குனர் அல்லது உதவி இயக்குனர் கணக்கை இயக்கலாம் என்று ஏற்படுத்தலாம்.

மின் கட்டணம், வீட்டு வரி போன்றவற்றை இப்போது வங்கியிலேயே கட்டலாம் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். எனவே பல பேர் ''Pay Yourself'' என்று காசோலை எழுதுகிறார்கள். இது தவறு.

''Pay Yourself - A/c Property tax'' என்று எழுத வேண்டும். ''Pay your self'' என்று மட்டும் எழுதிக் கொடுத்த ஒருவருக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. சில காலம் சென்று வீட்டு வரி வசூலுக்கு அதிகாரி ஜப்தி நடவடிக்கையுடன் வந்து விட்டார்! 'கட்டி விட்டேனே' என்றால் ஒப்புக் கொள்ள மறுத்தார். பிறகு ஆராய்ந்து பார்த்ததில், ''Yourself'' என்ற சொல்லுக்குப் பக்கத்தில் ''A/C No 456 of XYZ'' என்று ஒருவர் பெயர் எழுதப்பட்டு, அந்த நபர் பணத்தை அபேஸ் பண்ணிப் போய் விட்டார் என்பது தெரிய வந்தது. வங்கியில் பணியாற்றும் யாரோ ஒரு நபருக்கும் அவருக்கும் கூட்டு! ஆனால் எதையும் குற்றமென நிரூபிக்க முடியவில்லை. பணம் இழந்தவர் கைகளைப் பிசைந்ததுதான் மிச்சம்.

ஒரு நாள் ஓர் இளைஞன் ஒரு வங்கிக்கு வந்து, ''கணக்கு ஆரம்பிக்க வேண்டும்'' என்றான். அவனிடம் 10,000 ரூபாய்க்கு ஒரு டிராஃப்ட் இருந்தது. சென்னைக் கிளைக்கு விசாகப்பட்டினத்தில் வ ா ங் க ப் ப ட் ட டிராஃப்ட்.

தான் விசாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர் என்றும், சென்னைக்கு மாற்றலாகி வந்திருப்பதாகவும், வீடு பார்த்திருப்பதாகவும், அவசரமாக அட்வான்ஸ் தர வேண்டியிருப்பதாகவும் அவன் கூறினான். பத்தாயிரம் ரூபாய் டிராஃப்ட்டைப் பார்த்த ஒரு நபர், வெகு சுலபமாக அவனை நம்பி, அவன் கணக்கு ஆரம்பிக்க சிபாரிசுக் கையெழுத்துப் போட்டார்.

பத்து ரூபாய் செலுத்தி அவன் கணக்கு ஆரம்பித்து, டிராஃப்டைக் கட்டினான். பிறகு மானேஜரிடம், வீட்டு வாடகை அட்வான்ஸ் கட்ட அவசரமாக மூவாயிரம் எடுத்துக் கொள்ள அனுமதி கோரினான். மானேஜர் முன்ஜாக்கிரதைப் பேர்வழி. மறுத்து விட்டார். மறுநாள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கூறி விட்டு, டிராஃப்டை வழக்கம் போலக் குறிப்பிட்ட வங்கிக்கு கிளியரிங்குக்கு அனுப்பினார்.

இதற்கிடையில் அந்த டிராஃப்டைத் தொலைத்தவர், விசாகப்பட்டினத்தில் புகார் செய்ய; அந்த வங்கி, சென்னைக் கிளையுடன் தொடர்பு கொள்ள; சென்னைக் கிளை, கிளியரன்ஸுக்கு டிராஃப்டை அனுப்பிய வங்கி மானேஜருடன் போனில் பேசியது. பிறகென்ன? மறுநாள் காலை அந்த இளைஞன் பணம் பெற வந்த போது, போலீஸ்காரர்கள் அவனுக்காகத் தயாராகக் காத்திருந்தனர்! இதிலிருந்து, டிராஃப்டுகளையும் கூட ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டும், தப்பித் தவறி காணாமல் போனால் உடனே வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று புரியும். மோசடி மன்னர்களுக்கு எதுவும் அசாத்தியமல்ல.

சீதாதேவியின் சகோதரன் இப்படிப்பட்ட ஒரு மோசடி மன்னன்தான்! சீதா தேவிக்கு கணவன் பாங்காக்கிலிருந்து மாதா மாதம் பணம், டிராஃப்ட் எடுத்து அனுப்பினான். அவள் சகோதரனோ, ''சீதா தேவி'' என்று தானே கையெழுத்துப் போட்டு, ''சீதா தேவி'' என்ற பெயரிலேயே ஒரு வங்கிக் கணக்கு ஆரம்பித்து விட்டான். இதற்கு அறிமுகக் கையெழுத்து வேண்டுமல்லவா? இதற்காக அதே வங்கியில் கணக்கு வைத்திருந்த ஒரு வியாபாரி நண்பனைப் பிடித்தான். ''சீதா தேவியால் நேரில் வர முடியவில்லை; கையெழுத்துப் போட்டிருக்கிறாள்; அருகில் நீ சாட்சிக் கையெழுத்துப் போட்டால் போதும்'' என்று இயல்பாகப் பேச, அந்த வியாபாரியும் ஒன்றும் சந்தேகிக்காமல் கையெழுத்துப் போட்டு விட்டான். அவ்வளவுதான், சீதா தேவியின் சகோதரன், அன்று முதல் மாதா மாதம் டிராஃப்டுகளை அவள் கணக்கில் கட்டுவதாகக் கூறிக் கொண்டு, அவள் பெயரில் தான் ஆரம்பித்திருந்த போலிக் கணக்கில் கட்டியும், தேவையானபோதெல்லாம் பணம் எடுத்துச் 'சுருட்டி'க் கொண்டும் இருந்தான்! சீதா தேவிக்கும் அவ்வப்போது அவளுக்குத் தேவைப்படும் சிறு தொகைகளைப் பெற்று வந்து கொடுப்பான். ஆனால் பெரும் பகுதி பணம் கபளீகரம் ஆகிக் கொண்டிருந்தது. கணவன் பாங்காக்கிலிருந்து ஓராண்டு சென்று திரும்பி வந்த பிறகுதான் உண்மை நிலவரம் தெரிய வந்தது. இம் மாதிரி சம்பவங்களில் வங்கி



மீது நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது. அறிமுகக் கையெழுத்து சரியாக இருந்தது. ''சீதாதேவி'' என்ற கையெழுத்து கடைசி வரை மாறாமலும் இருந்தது. ஆக, இந்த விவகாரத்தில் அசட்டுத்தனம் பண்ணியவர், சீதா தேவியை நேரில் பாராமலே அவள் கையெழுத்துக்குச் சாட்சிக் கையெழுத்துப் போட்ட அந்த வியாபாரி நண்பன்தான்.

செக் மாற்ற யாராவது உங்களை உதவி கோரினால் ஏற்கக் கூடாது. டில்லியில் இப்படித்தான் ஓர் இளைஞன் ஏமாந்து போனான். டாக்ஸியில் உட்கார்ந்திருந்த ஓர் ஆசாமி, தெருவோடு போன அவனை அழைத்து, ''உடம்பு சரியில்லை; அதோ அந்த வங்கிக்குப் போய்ப் பணம் வாங்கி வா; உன் சிரமத்துக்குப் பத்து இருபது தருகிறேன்'' என்றான். அந்த இளைஞனும் இவனைப் பெரிய மனிதர் என்று நம்பி, காசோலையுடன் வங்கிக்குப் போனான். 20,000 ரூபாய் செக்கைப் பார்த்ததும் கவுண்டரில் இருந்த வங்கி ஊழியருக்குச் சந்தேகம் வந்தது. ஒரு நிறுவனத்தின் 'செக்' அது. அந்த நிறுவனம் சாதாரணமாக இப்படி பெரிய தொகையை ''பேரர் செக்''காகக் கொடுப்பதில்லை. எனவே போன் செய்ய, மோசடி வெளிப்பட, இளைஞன், ''எனக்கு ஒன்றும் தெரியாது; வாசலில் டாக்ஸியில் காத்திருப்பவருக்கு உதவவே வந்தேன்'' என்றான். வாசலுக்குப் போனால், டாக்ஸியும் இல்லை; ஆசாமியும் இல்லை! கடைசியில் போலீஸ் விசாரணையிலிருந்து அந்த இளைஞன் தப்பித்து வருவதே பெரும் பாடாகி விட்டது!

வங்கி ஊழியர்கள் சிலரும் பணத் தாசைப் பட்டுக் குற்றம் புரிந்து விடுவது சகஜம்தான். குறிப்பாகக் கட்டுக் கட்டாக நோட்டுக்கள் தரப்படும் போது பலர் எண்ணிப் பார்ப்பதே இல்லை. கட்டுக்களை மட்டும் எண்ணி, ஒவ்வொரு கட்டிலும் நூறு நோட்டு இருக்கும் என்று நம்பி விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு வங்கி ஊழியர், இடையில் இரண்டு நோட்டு, நாலு நோட்டு என்று உருவி வந்தார். நாலைந்து முறை இப்படி நடந்த பிறகு, அந்த வாடிக்கையாளர் மானேஜரிடம் புகார் செய்ய, மானேஜர், ''இம் முறை எண்ணிப் பாருங்கள்'' என்று கூறி விட்டு, அவர் எண்ண ஆரம்பிக்கும் சமயம், அருகில் வந்து நின்று கொண்டார். இதைச் சற்றும் எதிர்பாராத வங்கி ஊழியர், ஒரு நாள் அகப் பட்டுக் கொண்ட பல நாள் திருடரானார்!

அப்பாவிப் பாமரரை ஏமாற்றும் வங்கி ஊழியரும் உண்டு. உதாரணமாகக் கேரளாவில் வளைகுடா நாடுகளிலிருந்து ஏராளமாகப் பணம் வரும். டிராஃப்ட்டுகளைப் பெற்றுக் கொள்ளும் பெற்றோர், வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப் போவார்கள். ஒரு வங்கி மேலாளர், இத்தகையவருக்கு உதவுமாறு ஓர் ஊழியரைக் கேட்டுக் கொண்டார். அவர், சேமிப்புக் கணக்குத் தொடங்கும் ஃபாரத்தில் கையெழுத்துப் பெற்றதுடன், கூடவே பணம் எடுக்கும் ஃபாரங்களிலும் சில கையெழுத்துக்களைப் பெற்றுக் கொண்டார். ஒரு கிழவர் இது பற்றிக் கேட்ட போது, ''ஏன், மறுபடி உன் மகன் துபாயிலிருந்து பணம் அனுப்ப மாட்டானா? டிராஃப்டை எடுத்துக்கிட்டு என்னிடம்தானே மறுபடி வருவே? அப்போ அதைக் கணக்கில் கட்டுவதற்குத்தான் இப்பவே கையெழுத்து வாங்கி வைக்கறேன்'' என்றார். அந்தப் பாமரரும் அவரை நம்பினார்கள். பல்லாயிரக்கணக்கில் அந்த ஊழியர் செய்த மோசடி வெகுகாலம் சென்றே தெரியவந்தது! ஆள் சிக்கினாலும், பணம் போனதுதான். அத்தனையையும் ஆசாமி 'ஜல்ஸா' பண்ணியே தீர்த்துக் கட்டி விட்டார்!

''இப்போதெல்லாம் கம்ப்யூட்டர் வந்து விட்டது; இனி மோசடிக்கு இடமில்லை'' என்று எண்ணாதீர்கள். நம்மிடையே கம்ப்யூட்டர் முழுங்கி ஆசாமிகளுக்குக் குறைச்சலே கிடையாது!

ஆதாரம் : P. B. ஸ்ரீனிவாசன்
Financial Express -ல் எழுதிய கட்டுரை

தமிழில் : ஜெயந்தி.



● டிசைன் டிசைனாகக் குடைகள்.....

மழைக் காலம் வருகிறது; குடைக் கூரை விரிகிறது!

"சில நூற்றாண்டுகளுக்கு முன்னால், ரோமானியப் பெண்கள் தங்கள் கூந்தலை அழகாக அலங்கரித்துக் கொண்டு வெளியே சென்ற போது, காற்றிலும் மழையிலும் கூந்தல் அலங்காரம் கலையாமல் இருக்க, அவர்களுடைய பணிப் பெண்கள் சிறு குடைகளை அவர்கள் கூடவே பிடித்துக் கொண்டு போனார்கள். மேலை நாடுகளில் முதல் முதலாகக் குடை இப்படித்தான் பயன்படுத்தப்பட்டது. அந்தக் குடைகள் தோல் அல்லது முரட்டுத் துணியினால் ஆனவை. பிறகு அதையே பெரிதாகச் செய்து, ரோமானியப் பிரபுக்கள் வெயிலுக்கும் மழைக்கும் பயன்படுத்தினார்கள். சேவகர்கள் பிரபுக்களின் பின்னே குடைபிடித்து வருவது வழக்கம்!" என்கிறார் கல்பாக்கம் வேணு சீனுவாசன்.

குடைகளின் வரலாற்றை அலசி வைத்திருக்கும் இவர், தந்த தகவல்கள் சுவாரசியமானவை.

"அப்போதெல்லாம் கீழை நாடுகளில் குடை பிடிப்பது அந்தஸ்தின் சின்னமாக இருந்தது. இந்தியா, பர்மா, சீனா முதலிய நாடுகளில் அரசர்களும், அரசப் பிரதானிகளும் மட்டுமே குடைகளைப் பயன்படுத்தினர். அந்தக் குடைகள் பட்டுத் துணியினால் ஆனவை. தமிழ் மன்னர்களின் அரியணைகளை, வெண்கொற்றக் குடைகள் அலங்கரித்தன. குடிமக்கள் உபயோகித்த குடைகள் ஓலையால் ஆனவை.

"துணியாலான சாதாரணக் குடைகளை மக்கள் பயன்படுத்த ஆரம்பித்தது பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான். அப்படி முதல் முதலாகத் துணிக் குடைகளைப் பயன்படுத்திய பெருமை இத்தாலியர்களுக்கே சேரும். அவர்களில் போப்பாண்டவருக்கும் மத குருக்களுக்கும் பின்னே குடை பிடித்துச் செல்லுவது மரியாதை மிகுந்த வழக்கமாக இருந்தது. ஃபிரான்ஸ் நாட்டில் பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்பு திமிங்கலத்தின் தோலையோ, எண்ணெய்த் துணியையோ வைத்து இணைத்துக் குடையாகப் பயன்படுத்தினர். இவை கனமாகவும், பார்க்க அசிங்கமாகவும் இருந்தன."

அப்படியானால் குடையின் சமீபத்திய சரித்திரம் என்ன?

"பதினெட்டாம் நூற்றாண்டில், லண்டன் உணவு விடுதிகளில் மழையின் போது வாடிக்கைக்காரர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கக் குடைகள் வைத்திருந்

தார்கள். பிரிட்டனில் சிலர் குடைகளைச் சொந்தமாகப் பயன்படுத்த ஆரம்பித்த போது, அதை இழிவாகக் கருதினார்கள். காரணம், எந்தவித வாகனமும் இல்லாமல் செல்லும் ஏழைகளின் சின்னமாக அது கருதப்பட்டது! 1750 - ல் லண்டனில் முதல் முதலாக, தமக்கென்று சொந்த மாகக் குடை வைத்திருந்தவர் ஜோனஸ் ஹான்வே. அவரைக் கண்டு பிறர் எள்ளி நகை யாடினர். இவர்களே நாளடைவில் நிரந்தரமாகக் குடையை உபயோகிக்கத் தொடங்கினர். இரும்புக் கம்பிகளாலும், கறுப்புத் துணி யாலும் ஆன குடைகள் 1850-க்குப் பிறகு தான் புழக்கத்துக்கு வந்தன. 1910-க்குப் பிறகே டஃபேட்டா சில்க், ரேயான் துணிகள் ஆகியவை குடைக்குப் பயன்படுத்தப் பட்டன'' - என்கிறார் வேணு சீனுவாசன்.

''இன்றைக்கு விற்ப னைக்கு வந்திருக்கும் குடை களை நாலாக மடித்து, கண் ணாடிக்கூடு மாதிரி இருக்கும் இந்தச் சிறு பையில் வைத்து, பாக்கெட்டில் செருகிக் கொண்டுவிடலாம்!'' என்கி றார் சுரேஷ் ஷா.

பிரபலமான 'மான்' மார்க் குடைத் தயா ரிப்பாளர்களான இப்ராஹீம் கரீம் அண்ட் சன்ஸ் நிறுவனத்தின் உதவி மேலா ளர், சுரேஷ். நிறுவனத்தின் வயது 131. அதாவது 1860-ல் தொடங்கப்பட்டது! இப்ர ஹீம் கரீம் சேட்டின் நான்கா வது தலைமுறை, இப்போது இந்தக் குடை வியாபாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருக் கிறது. ஆரம்பித்தது பம்பா யில்தான். ஆனாலும் சென்னைக் கடைக்கே வயது நூறைத் தாண்டி விட்டது!

''எப்படிக் குடையின் கறுப்புச் சாயம் குடை பிடிப்பவர் மீது படியாமல், தண் ணீரை உறிஞ்சிக்கொள்கிறது?'' என்று விசா ரித்தோம்.

சொன்னார் சுரேஷ் ஷா :

''துணி, பம்பாய் செஞ்சுரி மில்லில் தயாரிக்கப்பட்டு இங்கே அனுப்பிவைக்கப் படுகிறது. அங்கேயே கெமிகல் பிராசஸ் முறைப்படி வர்ணம், வாட்டர்-ப்ரூஃபிங், காலண்டரிங் எல்லாம் முடிந்து, குடைத் துணியாகத்தான் இங்கே வருகிறது. நாங்கள் செய்வதெல்லாம் தேவையான பாகங்களை முறையாக இணைத்து, குடையாகத் தயா ரிப்பதுதான்.''

முன்பு, குடையின் நடுவில் முது கெலும்பாக மரக் கம்பு வந்து கொண்டிருந்த தல்லவா? இப்போது அது கேரளத்திலிருந்து வருவது தடை செய்யப் பட்டிருப்பதால், மரத்துக்குப் பதில் குரோமியம் பூசிய இரும்புக் கம்பிகளைத் தண்டாக உபயோ கிக்கிறார்கள்.

அப்படித் தடை செய்யத் தந்தமா என்ன அது? இல்லையாது. 'மலபார் மூங்கில்' தானாம். இப்போதும் வைதிகத் திருமணங் களில் 'காசியாத்திரை' சம்பிரதாயத்துக்கு மிகவும் வற்புறுத்திக் கேட்பவர்களுக்கு மட்டும் இந்தப் புராதனக் குடையை விற்கிறார்களாம்!

குடை எப்படித் தயாராகிறது?

முதலில் குடைத்துணியை வெட்டிக் கொள்ளுகிறார்கள். ஃபிரேம் டிபார்ட்மென் டில் நடுத் தண்டும், நம் விலா எலும்பு மாதிரிக் கம்பிகளும் பொருத்தி, குடையின் கூடாரப்பகுதியை அலுமினியக் கம்பியால்



◆ எல்லாமே கைகளால்தான் செய்யப்படுகின்றன.....

இணைத்து உருவாக்குகிறார்கள். பிறகு கைப்பிடியை (அட்ஹெஸிவ் பேஸ்ட் எனும்) பசையால் சேர்த்து, விடுகிறார்கள். குடைத்துணியின் ஓரம் தைக்கப்பட்டு, துணியின் தரம் பரிசோதிக்கப்பட்டு, கம்பிக் கூட்டின் மேல் வைத்து, எட்டு 'கன்னி'க ளாகப் பிரிக்கப்பட்ட கம்பிகளுடன் சேர்த்துத் தைக்கப்படுகின்றது. தைக்கப் படும் எட்டு முக்கிய இடங்களையும் 'கப்பி' என்கிறார்கள். திறந்து மூட வசதியாக கிளிப் பொருத்தப்படுகிறது. பிராண்ட் பெயர் ஸ்க்ரீன் பிரிண்டிங் முறை யில் அச்சிடப்பட்ட வுடன், மேலே உச்சி யில் வாஷர் பொருத்தி, குடையைச் சுருட் டியவுடன் 'இணைக்கும் பட்டை'யைத் தைத்துவிடுகிறார்கள். பிறகு 'டக்காய்' பகுதியில், விலா எலும்பு போன்ற கம்பி களுடன் துணியைச் சுருக்கம் விழாமல் பிணைத்துத் தைக்கிறார்கள்.

இவை அத்தனையும் மான்யுவலாக, கைகளால் செய்யப்படுகின்றன. இயந்திர மயம் இந்தத் துறையில் புகவில்லை!

''ஆட்டோமேஷன் செய்து பார்த்தோம். பலனளிக்கவில்லை. விட்டுவிட்டோம்!'' என்றார் சுரேஷ் ஷா.

எழுபது ரூபாய் விலையிலிருந்து, நானூற்று இருபத்தைந்து ரூபாய் வரை, குடைகள் இருக்கின்றன. பின்னதன் பெயர் ஷாஹென்ஷா - 'ஜம்போ சைஸ்' குடை. சினிமா ஷூட்டிங்குக்குத்தான் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. மூன்று பேர் தாராளமாக, கொட்டுகிற மழையில் நனையாமல் பிடித்துக் கொண்டு போகலாம்!

மிகமிகச் சிறியது எட்டங்குலமே உள்ள 'இலோனா' - குழந்தைகள் குடை. இப்போது சிறுவர்களிடையே பிரபலமாகியிருக்கும் வண்ணக் குடை ஸ்பைடர்மேன்.

மூன்று மடிப்பு, நான்கு மடிப்பு, மடித்து எடுத்துக் கொண்டு போக சௌகரியமான குடைகளும் நிறையவே விற்பனையாகின்றன. விலா-கம்பிகள் இரட்டை வரியாகவும், மூட மேலே ஒரு பட்டனுமாகவும் இருக்கும் இவற்றை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும்.

இவற்றில் கம்பி, நைலான் துணி, கைப்பிடி எல்லாமே இறக்குமதி செய்யப்பட்டவை. நைலான் துணி தைவான் நாட்டிலிருந்து வருகிறதாம்.

குடையின் ஃப்ரேம்களை மட்டும், நம் நாட்டிலிருந்து ஒரே ஒரு நிறுவனம் ஏற்றுமதி செய்வதாகச் சொன்னார் சுரேஷ்.

கடற்கரையிலும் தோட்டத்திலும் பயன்படும் பிரம்மாண்டமான, கோயில் குடை போன்ற, வர்ண மயமான குடைகளும் 'மான்' மார்க் தயாரிப்பில் கிடைக்கிறது.

''மழைக் காலத்தில் - நவம்பர்/டிசம்பரில்தான் மிக அதிக விற்பனை ஆகிறது. பதினைந்து நாட்களுக்கு இரவு எட்டரை வரை கூடக் கடையைத் திறந்து வைக்க வேண்டியிருக்கும். கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த போலீஸ் உதவியும் தேவைப்படும்!'' என்றார் சுரேஷ் ஷா. மழைக் காலம் இல்லாவிட்டாலும் வெயிலுக்கும், பிறர் பார்வையிலிருந்து (குறிப்பாகக் கடன்காரர் பார்வையிலிருந்து) தப்பிப்பதற்கும் கூடக் குடையை உபயோகிப்பதால், தினசரி விற்பனை அமோகமாகத்தான் இருக்கிறது.

- சாருகேசி

மேலட்டை வண்ணப்படம், படங்கள்:
உத்ரா

யோசனை தெரிவித்த வாசகர் :
ஆர். தன்ராஜ்,
சென்னை - 4.

பொன்விழா ஆண்டு | பொன் நகைப் பரிசுத் திட்டம் - 5

டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ்.

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அந்தத் துறையில் அனுபவஸ்தர்கள் 'டிப்ஸ்' வழங்க முடியும். உதாரணமாக உங்கள் மொபெட்டின் சீரான இயக்கத்துக்கு டிப்ஸ்; சமையலின் ருசியைக் கூட்ட டிப்ஸ்; புத்தகங்களை வீட்டு லைப்ரரியில் பாதுகாக்க டிப்ஸ்; உடல் ஆரோக்கியத்தைப் பேண டிப்ஸ்; காரியாலயத்தில் நல்ல பெயரெடுக்க டிப்ஸ்; நல்ல முறையில் டைப்ரைட்டரைப் பயன்படுத்த டிப்ஸ்... என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

இப்படி ஏதேனும் ஓர் அம்சத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தபால் கார்டில் மட்டுமே ''.டிப்ஸ்.டிப்ஸ்.டிப்ஸ்.'' என்று தலைப்புத் தந்து உங்கள் யோசனைகளை (5 முதல் 10) எழுதுங்கள். பிரசுரத்துக்கு ஏற்கப் படும் டிப்ஸ் பட்டியல் ஒவ்வொன்றுக்கும் சன்மானம். தவிர, குலுக்கல் முறையில் இவர்களில் ஒருவருக்கு ஒரு சவரன் பெறுமானமுள்ள பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் பொன் நகைப் பரிசு.

ஒரே இதழில் பிரசுரிக்க முடியாது போனால், தொடர்ந்து பல இதழ்களில் பலருக்கும் பயன்பட ''டிப்ஸ்'' குறிப்பிட்ட ஒரு பக்கத்தில் இடம்பெறும்.

''ஆசிரியர், கல்கி, சென்னை - 32'' என்ற விலாசத்துக்கு மட்டுமே உங்கள் டிப்ஸ் பட்டியலை அனுப்புதல் வேண்டும்.

முடிவு தேதி : 30.9.91



தினேழு வயதுப் புயல்

''மோனிகா ஒரு பந்தைக்கூடத் தவறவிடவில்லை. மிகக் கச்சிதமாக ஆடியிருக்கிறாள். அதிகமாகத் தவறுகள் எதுவும் செய்யவே இல்லை!'' என்ற மார்ட்டினா நவ்ரதிலோவாவின் பாராட்டுடன், நாலு லட்சம் டாலர் பரிசுத் தொகையையும் வென்று, இந்த வருட யு.எஸ். ஓபன் டென்னிஸில் தன் வெற்றியை நிலை நாட்டிக் கொண்டார் மோனிகா செலஸ்.

எதிர்த்து ஆடிய மார்ட்டினா நவ்ரதிலோவா ஒன்பது முறை விம்பிள்டன் சாம்பியன் பட்டம் பெற்றவர். ஆயினும் மோனிகாவின் அதிரடி 'செர்வ்', எதையும் அவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை: அடிக்கிற பந்தெல்லாம் துல்லியமாகக் கோட்டுக்குள் விழுந்து, நவ்ரதிலோவாவைத் திணற அடித்தது.

''முதல் செட்டில் டை-பிரேக் பண்ணி வென்றதும், என்னுடைய நம்பிக்கை அதிகரித்தது. அப்புறம் நவ்ரதிலோவாவின் முதல் 'செர்வ்'களை வலுவுடன் சமாளித்துத் தகர்க்க முடிந்தது!'' என்றார் மோனிகா.

டீவி திரையில், மோனிகா ஆடுவதையும் ஓடுவதையும் பார்த்தவர்கள், ''குண்டு மாதிரி இருந்துகொண்டு எப்படி இந்தப் பெண் இந்தப் பாய்ச்சல் பாய்கிறாள்!'' என்று வியந்ததுண்டு. புயலாக ஆடி 66 நிமிட மாட்சில், படுசீனியர் ஆட்டக்காரியான நவ்ரதிலோவாவை அநாயசமாக வென்று, ''என் வாழ்நாளிலேயே நான் இது மாதிரி இன்று வரை ஆடியதில்லை. என் வாழ்க்கையில் இன்று மிக மகிழ்ச்சியான நாள்!'' என்று குதூகலித்தார் மோனிகா.

மோனிகா செலஸ் யூகோஸ்லாவியப் பெண். மனத்திண்மை அதிகம். ''எது செய்தாலும் அதில் சிறப்பாக விளங்க வேண்டும். பள்ளியில் குறைச்சலாக மார்க் வாங்கினால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். அதே போலத்தான் டென்னிஸ் ஆட்டத்தில் மோசமாக ஆடினேன் என்றால் என்னை நானே வெறுத்துக் கொள்ளுவேன்!'' என்கிறார்.

நகைகள், உடைகள் மீது கொள்ளை ஆசை. அதிலும் பாரிஸ் ஃபாஷன்தான் அதிகம் பிடிக்கும்.

மோனிகாவின் டென்னிஸ் வருமானம், வருடத்துக்குப் பத்து மிலியன் டாலர்கள். 'இதுவே குறைச்சல். ஆண் ஆட்டக்காரர்களுக்குக் கொடுப்பது மாதிரி பெண்களுக்கும் கொடுத்தால் என்ன?' என்று சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார். எல்லோரும் தலைமுடி வெட்டிக் கொள்ளச் சிகையலங்கார நிபுணருக்குப் பணம் கொடுப்பார்கள். மோனிகாவுக்கோ பணமும் கொடுத்துச் சிகையலங்காரமும் செய்தார்கள்! எவ்வளவு தெரியுமா? மூன்றரை லட்சம் பவுண்ட்கள்! மேக் அப் சாதனங்கள் தயாரிக்கும் ஓர் நிறுவனத்தின் பப்ளிஸிடி ஸ்டண்ட் இது!

இந்த ஆண்டு விம்பிள்டனில் ஆட வராமல் இருந்ததற்காக ஆறாயிரம் டாலர் அபராதம் கட்டினார் செலஸ். 'ஏன் ஆட வரவில்லை?' என்பதற்குப் பல கிசுகிசுக்கள் கிளம்பின. அவரது ஏஜென்ட் ஸ்டெஃபானி டால்சன், 'மோனிகாவுக்குப் பலத்த காயம். அதனால் ஆட வரமாட்டார்' என்று வெறுமனே சொல்லிவிட்டாலும் எங்கே, எப்படி, எந்த அளவுக்கு அடிபட்டது என்றெல்லாம் சொல்லாததால், 'மோனிகா கர்ப்பமாயிருக்கிறார்; அதனால்தான் ஆடவில்லை' என்பது வரை பயங்கர கிசுகிசுக்கள் பல மிதந்தன!

- சித்தார்த்

கார்காலக் கொள்ளைகள்

இப்போது கூட கிராமப்புறங்களில் மோட்டார் காரை 'பிளஷர்' கார் என்றுதான்' சொல்வர்; அந்த வாகனமே மகிழ்ச்சியுடன் சம்பந்தப்பட்டதொரு சாதனமாக இருந்தது. இப்போதோ கடத்தல், கொலை கொள்ளைக்குப் பின் விரைந்து தப்பித்தல் போன்ற 'பிளஷர்' அல்லாத விவகாரங் களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

இங்கிலாந்து இளைஞர்கள் காருக்கு இன்னும் புதிய உபயோகமொன்றைக் கண்டுபிடித்திருக்கின்றனர். முதலில் இரண்டு கார்களைத் திருடிக் கொள்வது. ஒன்று மிக விரைந்து செல்வதாயும் மற்றொன்று கனமும் சக்தியும் அதிகம் கொண்டதாயும் இருக்கும். இரண்டாவது காரின் முகப்பில் உறுதியான எஃகு உத்தி ரங்களைப் பொருத்திக் கொண்டு நள்ளிரவு வரை காத்திருப்பார்கள்.

பல்பொருள் அங்காடியின் எதிரே சாலையின் ஓரமாய்க் குறுக்கு வாட்டில் காரை நிறுத்தி, முழு உறுமலுக்கு முடுக்கிச் சீறிப் பாய்ந்து கடையின் முன்னிருக்கும் இரும்புச் சுருள் கதவை நொறுக்கி நுழைவார்கள். காரின் கண்ணாடி சிதறும். சுருள் கதவைப் பொருத்திய பட்டயங்கள் இடி போல் இறங்கும். கான்கிரீட் உதிரும். ஆயினும் துணிவார்கள். விரைந்து கடைக்குள்ளிருக்கும் மின்னியல் சாதனங் களைத் திருடிக் கொண்டு வெளியே வரு வார்கள். காத்திருக்கும் பந்தயக்காரில் ஏறிக் கொள்ள, அடுத்த அரை மணி நேரத்துக்குள், திருடப்பட்ட சரக்கு ரொம்ப தூரத்துக்குச் சென்று விடும். இப்படிப்பட்ட திருட்டுக் களால் ஏற்படும் நஷ்டம் சமீபத்தில் பெருகி விட்டது.

பெயர் வெளியிடாமல் லண்டன் பத்திரி கையில் பேட்டி தந்த நவீனக் கொள்ளைக் காரர் ஒருவர், ''சரக்கை விற்பதற்கான ஆர்டர்களைப் பெற்ற பிறகே திருடுவோம்'' என்றிருக்கிறார்!

◆ உன்னிகிருஷ்ணன்



ஹலோ, ஸாம் ஸ்பீக்கிங்!

இந்தப் பரந்த தேசத்தின் மூலை முடுக்கிலிருக்கும் நகருக்கெல்லாம் நேரடி எண் சுழற்றும் எஸ்.டி.டி. வசதி இருக்கிற தென்றால் ஸாம்பிட்ரோடாவின் மூளைக்கு அதில் பெரும் பங்கு உண்டு. பெங்களூரின் ஐ.டி.ஐ. மட்டுமே தயாரித்துக்கொண்டிருந்த புராதனத் தொலைபேசிகளைத் தயாரிக்கும் உரிமையைத் தனியாருக்கும் கொடுத்து வடிவும் வண்ணமுமாய் நவீன புஷ்பட்டன் கருவிகள் வெளிவரச் செய்தவர்.


''அமெரிக்காவிலிருந்து ஐந்து லட்சம் கருவிகளுக்கு ஆர்டர் வந்திருக்கிறதென் றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! வளரும் நாடுகளில் இந்தியா மட்டுமே பத்தாண்டு களுக்குள் இவ்வளவு சிறப்பாய் இத் துறையில் முன்னேறியிருக்கிறது'' என்கி றார் ஸாம்.

ராஜீவ் காந்தியால் அமெரிக்காவில் கண்டெடுத்து, தம்முடன் சேர்த்துக் கொள் ளப்பட்டவர் ஸாம். அரசியல் காழ்ப்பு ணர்ச்சி யாரை விட்டு வைத்தது? ஜனதாதள

அரசில் தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்த கே. பி. உன்னிகிருஷ்ணன் இவரை மோசடிக்காரர் என்றார். சி. டி. ஓ. டி. யிலிருந்து லட்சக்கணக்கான பணத்தை இவர் உறிஞ்சி விட்டதாய்ச் சொல்லி பிரதம கணக்காயரை (சி.ஏ.ஜி.) ஏவினார். திட்ட அமலில் தாமதம் இருக்கிறதென்று சொன்ன பிரதம கணக்காயர் பண விஷயத்தில் ஏதும் குறைகாண முடியவில்லை.

ஸாமுக்கு வந்த ஹார்ட் அட்டாக்கும், பைபாஸ் ஸர்ஜரியும் உன்னிகிருஷ்ணன் உபயமாம்.

''எதையும் பெறுவதற்காக நான் இங்கு வரவில்லை. என்னிடமிருக்கும் அறிவாற்றலைக் கொடுக்கத்தான் வந்தேன்'' என்கிறார் அமெரிக்காவில் நிறையச் சம்பாதித்துக் கொண்டிருந்த இந்தத் தொலைத் தொடர்பு எஞ்ஜினியர்.



● ஸாம் பிட்ரோடா

குடி(சிறு)நீர்த் திட்டம்

சுமார் நானூறு மில்லியன் டாலர் (ரூ. 1000 கோடி) செலவில் அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சி நடக்கிறது. எதற்குத் தெரியுமோ? சிறுநீரைக் குடிநீராய் மாற்றுவதற்கு!

விண்வெளிக் கப்பலில் இடம் குறைவு. குறிப்பிட்ட கனத்துக்கு மேல் ஏற்றவும் முடியாது. அதில் செல்லும் விண்வெளியாளர்களுக்கு ஊர்ப்பட்ட குடிநீரை ஏற்றினால் இடத்தை அடைத்துக் கொண்டு கனத்து விடுகிறது. அதைக் குறைக்க வழி செய்தால் வேறு ஆராய்ச்சிக்கான உபகரணங்களைக் கூட்டலாம்.

ஓர் உத்தி தோன்றியது. பயணியரின் வியர்வை, சிறுநீர் முதலானவற்றைச் சுத்திகரித்துக் குடிக்கத்தக்கதாக்கி விட்டால்....? முயற்சி செய்கிறார்கள்.

மாதிரிக்கு ஒரே ஒரு தமிழ்க் கதை!

மலையாளம், கன்னடம், வங்காளி, மராட்டி, உருது மற்றும் ஹிந்தியில் எழுதப்படும் சிறந்தவை எல்லாமும் ஆங்கிலம் வழியே கிடைக்கின்றன. இந்தியப் பதிப்பாளரான பெங்குவின் மற்றும் ரூபா நிறுவனத்தினர் நிறைய வெளியிடுகின்றனர்.

ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்களே வந்தன. விரைவிலேயே சிறுதிரைத் தொடராய் வந்த 'தமஸ்' கண்ட வெற்றியைப் பின்பற்றி மேலும் பல ஆங்கில மொழிபெயர்ப்புகள் வரலாயின. இவற்றில் கவிதைகளும், பல மொழிச் சிறுகதைத் தொகுப்புகளும் உண்டு. இத் தொகுப்புக்களிலும் மௌனியின் ஒரே ஒரு சிறுகதை தவிர வேறு தமிழ்க் கதைகளைப் பார்க்க முடியவில்லை.

மற்ற பல இலக்கியச் சஞ்சிகைகளிலும் இதே கதைதான். தமிழில் சிறந்த எழுத்தாளர்கள் இல்லையா? அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் இல்லையா?

- இமயவரம்பன்.

அடுத்த இதழில்...


● ஜெ. - ஆட்சியில் 100 நாட்கள்

- சிறப்புக் கட்டுரை






அரசியல் நிலைமை
கள்ளச்சாராயம்



என்ன அக்கிரமம்பா இது?
தி.மு.க. அணி
காங்கிரஸ் அணி
கபடி... கபடி... கபடி... கபடி...
பரிதி இளம்வழுதி



பிரபாகரன்

தமிழ் படிக்காத தமிழன்!

தமிழ் நாட்டில் தமிழனாகப் பிறந்தும், ஓர் எழுத்துக் கூடத் தமிழ் கற்காமல், மேற்பட்டப் படிப்பு வரை, ஏன் அதற்கு அப்பாலும் கூடப் படித்துத் தேர்ச்சி பெற வாய்ப்பிருக்கும் அவல நிலையை மாற்றி அமைக்க முதலமைச்சர் முன்வந்ததற்கு அவரை வாழ்த்துகிறோம். தமிழ் நாட்டில் பிறந்த எந்தத் தமிழ னின் குழந்தைக்கும் தமிழ் மொழியில் பாடம் போதிப்பதே சிறந்தது. குறைந்தபட்சம் எட்டாவது வகுப்பு வரையிலாவது தமிழிலேயே எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டும். அதன் பிறகு அந்தச் சிறுவனின் ஆர்வத்தைக் கணித்து, அவன் எதிர்காலம் குறித்து அவனும், பெற்றோரும், ஆசிரியர்களும் கலந்தாலோசித்துச் சரியான முடிவெடுக்கலாம். அதையொட்டி, மேற்படிப்பு ஆங்கிலத்திலா, தமிழிலா, எம் மொழியில் போதிக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கலாம். தமிழ் மொழி இன்னும் நன்கு வளர்ச்சி அடையாத நிலையில், உயர் கல்வியை ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டு தொடரும் வாய்ப்பை அடியோடு நீக்கி விடுவது உசிதமல்ல. இது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கே கூட ஊறுவிளைவிக்கும். ஆங்கிலக் கலைச் சொற்களை மொழி மாற்றம் செய்யாமல், ஒலி மாற்றம் செய்து ஏற்பது, தமிழின் வேகமான வளர்ச்சிக்குத் துணை புரியும்.

இன்று வீதிக்கு இரண்டு நர்ஸரி பள்ளிகளும் பேட்டைக்கு இரண்டு மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் ஆங்கில மீடியத்திலேயே நடக்கின்றன. இங்கேயெல்லாம் தமிழ் என்ற நாமதேயமே இல்லாமல் மாணவர்கள் படித்து, வெற்றி பெற்று வர முடிகிறது. இவற்றிலும், கான்வெண்டுகளிலும் ஆங்கிலமே போதனா மொழியாக இருப்பதை இன்று அறவே நீக்க முடியா விட்டாலும், குறைந்தபட்சம் தமிழை ஒரு பாடமாகப் பயின்றே ஆக வேண்டும் என்ற ஒரு கட்டாய ஏற்பாட்டைச் செய்வது வர வேற்கத்தக்கதே. இதற்கு அடுத்த கட்டமாக, எல்லாப் பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு வரை தமிழே போதனா மொழி என்ற நிலையை உருவாக்கலாம்.

இப்படிச் சொல்லும் போது, 'தமிழகத்தில் வாழும் தமிழ ரல்லாதார் நிலை என்ன?' என்ற கேள்வி எழும். 'அவர்கள் கவலைப்பட வேண்டாம்; தக்க ஏற்பாடு செய்யப்படும்' என்று முதல்வர் கூறியிருக்கிறார். ராஜாஜி, அண்ணா ஆகியோர் வற்புறுத்திய இரு மொழித் திட்டம் என்பது ஆட்சி மொழி அளவில்தான், கல்வி பற்றிய கருத்து அல்ல என்பதைப் புரிந்து கொண்டால் பிரச்னை எதுவுமே இல்லாது போகும்.

தமிழுக்கு முக்கியத்துவம் தரப்படும் என்று பேசிய அதே நிகழ்ச்சியில், முதல்வர், உயர் கல்வியின் தரம் மிகவும் தாழ்ந்து போயிருப்பதைக் குறிப்பிட்டுக் கவலையும் தெரிவித்திருக்கிறார். இது, கல்வி தொடர்பாக அவர் சிந்தனை சரியான திசையில் செல் வதை உணர்த்தும். தமிழகத்தில் பெறப்படும் கல்விக்கு நிகராக, பாரதத்தில் வேறு எங்குமே கிடைக்காது என்ற நிலை ஒரு காலத் தில் இருந்தது. இன்று அந்தப் பெருமை மறைந்து விட்டது. ஐ. ஏ. எஸ். போன்ற தேர்வுகளில் வெற்றி பெறும் தமிழர்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்து போயிற்று. இதற்கு உயர் கல்வியை மட்டும் குறை கூறிப் பயனில்லை. எல்லா நிலைகளி லுமே கல்வியின் தரத்தையும் போதிக்கும் திறத்தையும் மேம் படுத்த அவசியம் உள்ளது.

குறிப்பிட்ட நிகழ்ச்சியில் முதல்வர் வெளியிட்ட கவ லையை, மாணவர்களுக்கு ரேடியோ - டிவி மூலம் அவர் விடுத்த அறிக்கையுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது பலன்தரும். மாண வர்கள் ஆக்கபூர்வமாகச் செயல்பட வேண்டும் என்றும், வன்முறையில் ஈடுபடலாகாது என்றும் கோரிய அவர், வன்முறை அதிகரித்தால் நடவடிக்கையும் கடுமையாக இருக்கும் என்று எச்ச ரித்தார். எச்சரிக்கை தேவைதான். ஆனால் அது பரிகாரமாகாது. மாணவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று ஆராய்வதுதான் புத்திசாலித்தனம். இன்று கல்வியின் தரம் தாழ்ந்து விட்டது ஒரு காரணம். அந்தக் கல்வி வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக, அமையாதது மற்றொரு காரணம். படித்து விட்டு வந்தால் வேலை அல்லது தொழில் செய்து சம்பாதிப்பது நிச்சயம் எனில், மாண வர்கள் திசை தப்பிப் போகாமல் கருத்தூன்றிப் படிப்பார்கள். கல்விக் கூடங்களில் அரசியலைப் புக விட்டது மாபெரும் தவறு. எல்லாவற்றுக்கும் மேலாக தலைவர்கள் முன்னுதாரணங்களாகத் திகழ வேண்டும். சட்டமன்றத்திலும் வெளியேயும் நடக்கும் அரசியல் வன்முறைகளையும் ஆயிரம் கார்கள் பவனி போன்ற வீண் விரயங்களையும் பார்க்கும் மாணவர்களின் உள்ளங்களில் எந்த விதமான பாதிப்புக்கள் ஏற்படும்? இதையெல்லாம் சிந்திக்காமல் மாணவர்களை எச்சரித்தால் மட்டும் பலன் கிடைக்காது. அது விரும்பத்தகாத விளைவுகளைக் கூட உண்டாக்கலாம்.



கல்கி

50

1991
செப்டம்பர் 22
மலர் : 50
இதழ் : 8
பிரஜோத்பத்தி
புரட்டாசி 6

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

கல்கியில் வெளியான
"கைகொடுத்த கடன் தொகை"
போட்டியில் பங்கு பெற்ற உண்மை சம்பவம்

நடுத்தர வர்க்கக் குடும்பம். தந்தை இல்லை. தாய், தங்கை, இரு தம்பிகள். குடும்பச் சுமை முழுதும் என் மேல் தான். எப்படியோ தங்கைக்குக் கஷ்டப்பட்டுப் பட்டப்படிப்பு வரை கல்வி அளித்தேன். அவள் வாழ்க்கை வளமாக அமைய வேண்டும் என்று சக்திக்கும் மீறி ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்தேன். தொடர்ந்து, அதை யொட்டி சுபச் செலவுகள்.

"உயிர் கொடுத்த உதவி"

கடன் பளு அதிகமாகிக் குடும்பம் தடுமாறத் தொடங்கியது. என்றாலும், தங்கையின் வாழ்க்கை சந்தோஷமாக அமைந்திருந்ததில் அந்தச் சுமையை அவ்வளவாகப் பாராட்டவில்லை. கடனளித்தவர்களின் தொல்லையைச் சமாளிக்கச் சீட்டுச் சேர்ந்தேன். தள்ளி எடுத்து. அந்தப் பணம் கைக்கு வரக் காத்திருந்தேன்.

அப்போதுதான் அந்தப் பேரிடி இறங்கியது.

தங்கை, அவள் கணவர், கைக்குழந்தை மூவரும் ஊட்டிக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் பயணப் பட்ட டாக்ஸி எதிரே வந்த லாரியொன்றுடன் மோத, தங்கையும் குழந்தையும் தூக்கி எறியப்பட்டனர். தங்கையின் கணவர் காருக்குள் மாட்டிக் கொண்டு, பலத்த அடியின் விளைவாகச் சுய நினைவு இழந்து விட்டார்.

அங்கேயிருந்தவர்கள் அவரை ஒரு தனியார் மருத்துவ மனையில் சேர்த்து விட்டு, தங்கையிடம் முகவரி பெற்று எனக்குத் தகவல் தெரிவித்தனர்.

அம்மாவும் தம்பிகளும் உறவினர் வீட்டுத் திருமணத்துக்குச் சென்றிருந்தனர். வீட்டில் நான் மட்டும்தான். தகவல் கிடைத்ததும் பக்கத்து வீட்டாரிடம் செய்தி தெரிவித்து விட்டுப் பறந்தடித்துக் கொண்டு ஓடினேன்.

மருத்துவமனையில் நிலைமையின் தீவிரத்தை விவரித்தார்கள். உடனடியாக ஆபரேஷன் செய்யா விட்டால்... அவர்களைப் பேச நான் அனுமதிக்கவில்லை. எது தேவையோ அதை உடனடியாகச் செய்யும்படி வேண்டினேன். மாப்பிள்ளை உயிர் பிழைக்க வேண்டும். மற்றதைப் பற்றிக் கவலையில்லை.

பணப்பிரச்னை பெரும் பளுவாக



அழுத்தியது. ஊட்டிக்குப் புறப்படுமுன் தங்கை தன் நகைகளை வங்கி லாக்கரில் வைத்து விட்டிருந்தாள். அதனால் போன இடத்தில் அவை பயன்பட வாய்ப்பில்லாமல் போய் விட்டது. நிலைமையைச் சமாளிக்க வேறு வழி?

சட்டென்று நினைவுக்கு வந்தது. சீட்டுப்பணம் வர வேண்டுமே! உடனடியாகத் தொலைபேசி மூலம் என் தம்பியிடம் விவரம் தெரிவிக்க, அவன் ஸ்ரீராம் நிறுவனத்துடன் அன்றே தொடர்பு கொள்ள, விவரம் தெரிந்து கொண்ட அவர்கள் விரைந்து செயல்பட, இரண்டாவது நாளே என் குடும்பத்தினர் பணத்துடன் வந்து சேர்ந்து விட்டனர்.

ஸ்ரீராம் அன்று அளித்தது சாதாரண உதவியல்ல. உயிர் கொடுத்த உதவி.

எஸ். சிவஞானம்
காரைக்கால் – 609 607

ஒரு மறுவாழ்வுத் திட்டத்தின் மரணம்

உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை அமைச்சர் தமிழ்வேந்தன் தலைமையில் உயர்மட்ட அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அமைச்சர் பதவிக்குப் புதியவரான தமிழ்வேந்தன் உண்மையிலேயே நல்லதிட்டங்களை அமல்படுத்த வேண்டும் என்ற முனைப்புடனிருந்தார்.

''நம்முடைய சமுதாயத்தில் பார்வையிழந்த பிச்சைக்காரர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. அவர்களுக்கு உதவும் வகையில் ஏதாவது ஒரு நல்ல திட்டம் கொண்டு வர வேண்டும் என்று கருதுகிறேன். இதற்காக முதல்வர் பத்துக்கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். ஆகவே பார்வையிழந்த பிச்சைக்காரர்களுக்கு நன்மை செய்யக்கூடிய வகையில் ஏதாவது திட்டம் இருந்தால் சொல்லுங்கள்.''

டெபுடி டைரக்டர் ஒருவர் தொண்டையைச் செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தார். ''பார்வையிழந்த பிச்சைக்காரர்களுக்குச் சத்துணவு கொடுக்கும் புராஜெக்ட் ஒன்று ஏற்கெனவே பரிசீலனையில் இருக்கிறது....''

இந்நிலை டெபுடி, அமைச்சரிடம் நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு போவதா? பதைபதைப்புடன் டைரக்டர் குறுக்கிட்டார்.

''அந்த ஸ்கீமை குழந்தைகள் சத்துணவில் இணைக்க வேண்டும். இல்லாவிட்டால் சத்துணவு சப்ளைக்கு காண்ட்ராக்ட் விட வேண்டும். இப்படி அரசுக்கு நிறையத் தொல்லைகள் வரும் என்பதால் தான் அதை அமல்படுத்தவில்லை.''

அமைச்சர் ஏற்கெனவே இதைப்பற்றி யோசித்து வைத்திருந்தவர்போல் கூறினார். ''இப்படிச் செய்தால் என்ன? பார்வையிழந்த பிச்சைக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் நூறு ரூபாய் ரொக்கமாகவே உதவித் தொகையாக வழங்கி விடுவோம்.''

அமைச்சரே கூறியபின் அதற்கு மறுபேச்சு ஏது? எல்லா ஐ.ஏ.எஸ். களின் தலைகளும் ஏக காலத்தில் ஆடின!

மறுநாள் சட்டசபையில் அமைச்சர் தமிழ்வேந்தன், 'பார்வையற்ற பிச்சைக்காரர்கள் மாதாந்திர உதவித்தொகை' திட்டத்தை ஆளும்கட்சி எம்.எல்.ஏ.க்களின் கைத்தட்டல் ஆரவாரத்துக்கிடையே அறிவித்தார்.

''இந்தத் திட்டம் என் நெடுநாளைய லட்சியக் கனவு; பார்வையற்ற பிச்சைக்காரர்கள் படும் துயரங்களை என் சொந்தக் கிராமத்திலேயே பார்த்ததால் உருவான திட்டம்தான் இது....'' என்று அமைச்சர் மனமுருகக் கூறினார்.

பா.பி.மா.உ. திட்டம் செயல்படத் துவங்கி மூன்று மாதங்களிருக்கும். ஒருநாள், அமைச்சர் தமிழ்வேந்தன் காரில் போகும் போது, சாலையில் எதிர்ப்பட்ட கண்ணிழந்த பிச்சைக்காரர்களையெல்லாம் நிறுத்தி, அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கிறதா என்று விசாரித்தார். என்ன ஆச்சரியம்! அவர்களில் யாருக்குமே அப்படி உதவித்தொகை வழங்கப்படுவதே தெரிந்திருக்கவில்லை!

அன்றே அதிகாரிகளைக் கூப்பிட்டு விசாரித்தார் அமைச்சர்.

''நம்முடைய திட்டம் இன்னும் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. இதற்குக் காரணம் நாம் பெரிய அளவில் விளம்பரம் செய்யாததுதான்,'' என்றார்கள் அதிகாரிகள். அதுவும் அமைச்சருக்கு நியாயமாகப் பட்டது. திட்டத்தைப் பெரிய அளவில் விளம்பரப்படுத்தச் செயல்திட்டம் வகுக்கப்பட்டது.

அதன்படி பா.பி.மா.உ. திட்டம் பற்றி பல பத்திரிகைகளில் அரசு விளம்பரம் வெளியிடப்பட்டது. அமைச்சர் கண்பார்வையற்ற ஒரு மூதாட்டிக்கு உதவித்தொகை வழங்குவது போன்று அச்சிடப்பட்ட போஸ்டர், மாநிலமெங்கும் ஒட்டப்பட்டது. பல மாவட்டங்களில் ஆளும் கட்சி எம்.எல்.ஏ.க்கள் தலைமையில் பார்வையற்றோருக்கு உதவித்தொகை வழங்கும் விழா, அரசு தரப்பில் நடத்தப்பட்டது.

பசு. தனபாலன்



போலீஸ்காரர் : மாமூல் பணத்தை இனிமேல் குறைச்சு வாங்கணும், ஸார்!

இன்ஸ்பெக்டர் : ஏன்?

போலீஸ்காரர் : நாம் கேட்கிற மாமூல் பணத்தைக் கொடுக்க முடியாம சில கேடிகள் திருந்தறதா முடிவு பண்ணியிருக்காங்களாம்!

- எஸ். முகம்மது யூசுப்.

ஒரு வழியாய்த் திட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. அண்டை மாநில அரசுகள், தங்கள் மாநிலங்களில் இதை அமுல்படுத்த எண்ணி, திட்டத்தின் முழுவிவரங்களைக் கேட்டுக் கடிதம் எழுதியிருந்தன. இது தமிழ்வேந்தனுக்குப் பெருமையாய் இருந்தது. அதே சமயம் இத்திட்டத்தைக் குறித்துச் சில புகார்களும் எழுந்தன. பிரபல அரசியல் பத்திரிகை ஒன்று இதுபற்றி ஒரு கட்டுரையே பிரசுரித்திருந்தது.

'பா.பி.மா.உ. திட்டத்தின்படி பார்வையற்ற பிச்சைக்காரர்கள் உதவித்தொகை பெறவேண்டுமானால், டாக்டர் சர்டிபிகேட், தாசில்தார் சர்டிபிகேட் என்று பல சான்றிதழ்களுடன் விண்ணப்பம் கொடுக்க வேண்டும். பிறகுதான் உதவித்தொகை கிடைக்கும். பிறர் உதவியின்றி நடமாடவே முடியாத பார்வையற்ற பிச்சைக்காரர்களால் எப்படி இத்தனை சான்றிதழ்களை அலைந்து திரிந்து வாங்க முடியும்? அப்படியே வாங்கிக் கொடுத்தாலும் உதவித்தொகை கொடுப்பதற்குப் பல மாதங்களாகின்றன' என்பது கட்டுரையின் சாராம்சம்.

இவ்விரு குறைகளையும் நீக்குவதற்காக அதிகாரிகளைக் கலந்தாலோசித்தார், அமைச்சர்.

''சான்றிதழ்கள் மட்டும் இல்லாவிட்டால், இந்தத் திட்டத்தில் நிறைய முறைகேடுகள் நடக்கும் சார். உதாரணமாக டாக்டர் சர்டிபிகேட் தேவையில்லை என்றால் கண்பார்வை உள்ள ஒருவர், குருடர் போல நடித்து உதவித்தொகை பெற முடியும். அதேபோல் வருமானச் சான்றிதழ் இல்லையென்றால் நல்லவசதி உள்ள நபர்கள் கூட, மாதம் நூறு ரூபாய் கிடைக்கிறதேயென்று பிச்சைக்காரர்கள் மாதிரி நடிக்க ஆரம்பிப்பார்கள்!'' என்றார் டைரக்டர்.

''சரி. உதவித்தொகை வழங்குவதில் காலதாமதம் ஆவது ஏன்?''

''இந்தத் திட்டப்பொறுப்பு வருவாய்த் துறை தாசில்தார்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஏற்கெனவே ஏகப்பட்ட வேலைகள். அதுதான் தாமதத்திற்குக் காரணம்.''

''எனக்குக் காரணங்கள் தேவையில்லை. திட்டப்பணி விரைவாக நடக்க வேண்டும். அதற்கு வழி சொல்லுங்கள்!'' என்றார் அமைச்சர் எரிச்சலுடன்.

''இத்திட்டத்திற்காக பகுதிநேர ஊழியர்கள் சிலரை நியமித்தால் உதவித்தொகை வழங்குவதைத் துரிதமாக்கலாம். அதுமட்டுமில்லாமல் அவர்களையே, பார்வையற்ற பிச்சைக்காரர்களுக்குச் சான்றிதழ்கள் பெறுவதற்கு உதவி செய்யும்படியும் கூறலாம்.'' தாராளமாய் ஆலோசனை வழங்கியது அதிகார வர்க்கம்.

யோசனைகள் ஏற்கப்பட்டன.

அமைச்சர், காரில் கோட்டைக்குப் போகிறபோது, வழியில் தென்படுகிற பார்வையிழந்த பிச்சைக்காரர்களை நிறுத்தி உதவித்தொகை கிடைக்கிறதா என்று விசாரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அதிகாரிகள் முன்னெச்சரிக்கையாக அமைச்சரின் கார்போகிற ஏரியாக்களில் இருந்த பார்வையிழந்த பிச்சைக்காரர்களுக்கு மட்டும் தடையில்லாமல் உதவித்தொகை கிடைக்கும்படி பார்த்துக் கொண்டார்கள்!

அமைச்சர் எந்த ஊருக்காவது விஜயம் செய்தால் முன்கூட்டியே அந்தப் பகுதி பா.பி.மா.உ. திட்ட ஊழியர்களுக்குத் தகவல் பறக்கும். அவர்கள் உதவித்தொகை பெறும் ஒரு சில பிச்சைக்காரர்களை அமைச்சர் முன் கொண்டுபோய் நிறுத்தி, திட்டம் மாநிலம் பூராவும் வெற்றிகரமாக நடைபெறுவது போன்ற பிரமையை ஏற்படுத்தினார்கள்!

மாதங்கள் ஓடின. அமைச்சர் தமிழ்வேந்தன் வேறுபல பிரச்னைகளில் மூழ்கி விட்டதால், பா.பி.மா.உ. திட்டத்தில் அவரால் அதிக கவனம் செலுத்த முடியவில்லை.

ஒரு நாள் சட்டசபையில் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் ''இத்திட்டம் பெயரளவுக்குத்தான் செயல்படுகிறது. உதவித்தொகை கேட்டு மனு கொடுத்த பல பிச்சைக்காரர்களுக்கு உதவித்தொகை கிடைக்கவேயில்லை....'' என்று குற்றம் சாட்டினார்கள். உடனே விழித்துக் கொண்ட அமைச்சர் ''இன்றே இதுபற்றி விசாரிக்கிறேன்,'' என்று உறுதியளித்தார்.

உடனடியாக அமைச்சர், அதிகாரிகளின் அவசரக் கூட்டத்தைக் கூட்டினார். ''போதுமான நிதி இல்லாததால்தான் உதவித் தொகை வழங்கமுடியவில்லை'' என்று அதிகாரிகள் ரெடிமேட் பதிலைத் தெரிவித்தார்கள்.

அப்படியானால் ஒதுக்கப்பட்ட நிதி என்னாயிற்று?

அமைச்சர் ஆத்திரத்துடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கோப்புகளையும் பார்வையிட்டார். அவருக்குப் பேரதிர்ச்சி. ஒதுக்கீட்டுத் தொகையில் தொண்ணூற்றைந்து சதவிகிதம் விளம்பரங்கள், அரசு விழாக்கள், பகுதிநேர ஊழியர்களின் சம்பளம் போன்றவைகளுக்கே செலவாகியிருந்தது! ஐந்து சதவிகிதம் கூட பார்வையற்ற பிச்சைக்காரர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கவில்லை!


'சே! சுண்டைக்காய் கால் பணம்; சுமைக்கூலி முக்கால் பணம்' என்ற கதையாக அல்லவா ஆயிற்று?' என்று மனம் நொந்த அமைச்சர், கோப்பில் பின்வருமாறு எழுதிக் கையெழுத்திட்டார். 'நடப்பு மாதத்துடன் இத்திட்டம் முடிவுறுகிறது!'

அடுத்த வாரத்தில் ஒரு நாள் -

மக்கள் வரிப்பணத்தை வீணடித்துக் கொண்டிருந்த ஒரு திட்டத்தை நிறுத்தி விட்டோம் என்ற மன நிறைவுடன் தலைமைச் செயலகத்திற்கு வந்த அமைச்சர் தமிழ் வேந்தன் திடுக்கிட்டார். வெளியே ஆயிரக் கணக்கான ஊழியர்கள் பந்தல் அமைத்து உண்ணாவிரதம் இருந்து கொண்டிருந்தார்கள்.

அமைச்சரின் பி.ஏ. விளக்கினார். ''இவர்களெல்லாம் பா.பி.மா.உ. திட்டத்தின் பகுதிநேர ஊழியர்கள், சார். அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும், அல்லது தங்களுக்கு வேறுவேலை கொடுக்க வேண்டும் என்று கோரிப் போராட்டம் நடத்துகிறார்கள்.''

அதிர்ச்சியால் அமைச்சருக்குத் தலை சுற்றியது!




கம்ப்யூட்டர் கிராமம்

8

தூக்கத்திலா நினைவிலா அந்த ஓலம் என்று சரியாகத் தெரியவில்லை. முழு விழிப்புக் கண்டதும்தான் யாரோ ஒப்பாரி வைத்து அழுகிறார்கள் என்று தெரிந்தது. நன்றாக விழித்துக் கொண்டு விட்டான். இருட்டின் விளிம்பில் கிராமத்தின் ராத்திரி சப்தங்கள் அச்சுறுத்தின.

சுவர்க் கோழியின் விடாத திருகு சப்தம். அதனுடன், அது என்ன ஆந்தையா 'கொக் கொக்' என்று நிறுத்தி நிறுத்தி 'அடுத்த குரல் எப்போது' என்று எதிர்பார்க்க முடியா 'சஸ்பென்ஸு'டன்.



''கொல்லையிலே மாமரந்தான்
கொலை கொலையாக் காச்சாலும்
கோடி சனம் தின்னாலும்
என்ன பெத்த அம்மா ஆ நான்
குமிஞ்சு எடுத்தா தண்டனைதான்'' என விக்கி விக்கி அழும் பெண் குரல் முதுகுத் தண்டைத் துளைத்தது.

சிகரெட் பற்ற வைக்க பெட்டி தேடினான். ஷண்பேகர் ராத்திரி எங்கோ போய் விட்டு லேட்டாக வந்து படுத்திருந்தவன் மெலிசாகக் குறட்டை விடுவது கேட்க, எழுப்ப மனமின்றித் தாழ்வாரத்தில் வந்து, மொட்டை மாடிக்கு வந்து நின்று கொண்டான்.

தூரத்தில் சைட்டில் நிறுத்தி வைத்திருந்த பெட்டிகள் தெரிந்தன. மாமரம் தெரிந்தது. லேசாகக் காற்றில் ஆடியது. லாரியிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தார்கள். மனோஜு''க்கு எப்படியும் மரத்தை வெட்டி விட வேண்டும் என்ற தீர்மானம் ஏற்பட்டது.



''வயலிலே மாமரந்தான்
வரி வரியாக் காச்சாலும்
வந்த சனம் தின்னாலும் நான்
வயத்திலே தரிச்ச மவ
வந்தெடுத்தாத் தண்டனைதான்.''

அர்த்தம் புரியவில்லை. சாவுப் பாட்டுப் போல இல்லை. ஆதரவில்லாத பெண், உரிமை இழந்தவள் பாடும் பாட்டுப் போல இருந்தது. ஏன் மாமரத்தைப் பற்றிப் பாடுகிறாள்?

லேசாக வான் விளிம்பில் வெளிச்சத்தின் ஆரம்ப அறிகுறிகள் தென்பட பாட்டு நின்று போய்க் குடிசையிலிருந்து வெள்ளையாக ஒரு துணித் தண்டை இரண்டு பேர் எடுத்து வருவதையும் இரண்டு நாள் தாடி வளர்த்த ஒருவன் கையில் பாத்திரத்துடன் செல்வதையும் கவனித்தான்.

அந்த துணிப் பொட்டலம் ஏதோ குழந்தையைச் சுற்றியது போல இருந்தது.

''எல்லாம் முனீஸ்வரன் கோபம் மாயாண்டி.''

''மாமரத்தை வெட்டப் போறாங்களாம். பம்பாயிலிருந்து பார்... ஆளுங்க வந்திருக்காங்க. மிசின் வெக்கறாங்களாம். அவக ஆளு வந்து வெட்டிரப் போறாங்களாம். முனீஸ்வரரு இப்பவே கோபத்தைக் காட்டுறாரு. இதோ அவங்கதான்'' என்று அவனை முறைத்துப் பார்த்தார்கள்.

''செத்தது யாரு?''

''சின்னப் புள்ளை. நம்ம கோதண்டம் புள்ளை. மரத்தை வெட்டறதாப் பேரம் பேசினான். அவனுக்கு ஆனதைப் பாரு.''

பதற்றத்துடன் மனோஜ் அந்த உரையாடலைக் கேட்டு ஷண்பேகரை எழுப்பினான்.

''ஷண் எழுந்திரு வி ஆர் இன் ட்ரபிள்.''

''ஷண்பேகர் கவலைப்படாமல் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

''ஷண் வேக் அப் மேன். மாமரத்தை வெட்ட முடியாது போல இருக்கு.''

''சரி பம்பாய் போய் விடலாம்.''

''ஷண் கமான் மேன்.''

''அவன் தயக்கத்துடன் எழுந்து ''என்ன?'' என்றான்.

''காலையில் ஒரு கைக் குழந்தை செத்துப் போய் இந்த வழியே உடலை எடுத்துச் சென்றார்கள். போகும் போது குழந்தை செத்

சுஜாதா

தறுக்கு நாம் மரத்தை வெட்ட நினைத்த துதான் காரணம் என்று பேசிக் கொண்டே போனார்கள்.''

''நினைத்தாலே போதுமா?''

''ஆமாம்.''

''சரி. இப்போது எதற்காக என்னை எழுப்பினாய்?''

''மரத்தை வெட்டாமல் எப்படி சாட்டிலைட் வைப்பேன்?''

''வாசுதேவனை வரச் சொல்லு. இது அவன் காரியம்.''

''ஷண் பி ஸீரியஸ்.''

''சரி, சீரியஸ்.''

''என்ன செய்வது? இந்த கிராமத்தவர்களுக்கு எப்படிச் சமாதானம் சொல்வது? மரத்தில் முனீஸ்வரனும் இல்லை; இனிஸ்வரனும் இல்லை என்று எப்படி நிருபிப்பது?''

''நாமே வெட்ட வேண்டியதுதான்.''

''ஷண் டோண்ட் பி ஸில்லி. நம்மை வெட்டி விடுவார்கள்.''

''தூக்கத்தில் எழுப்பி இனி என்னை ஐடியா கேட்காதே'' என்று மறுபடி படுத்துக் கொள்ளச் சென்றவனைப் பாயோடு இழுத்தான். ''சே உன்னைப் போய் அழைத்து வந்தேன் பாரு...''

குளித்ததும் ஷண்பேகர் சுறுசுறுப்பானான்.

''இந்த டவுனின் போலீஸ் நிலையத்துக்குச் சொல்லலாம். போய் போலீஸ் உதவியை நாடலாம்.''

போலீஸ் இன்ஸ்பெக்டர் பெயர் ஷண்முகம்.

''என் பெயர் ஷண்பேகர்! முதல் இரண்டு எழுத்து ஒற்றுமை'' என்றான்.

மனோஜ் அவரிடம் விவரமாகச் சொன்ன போது, ''கிராமத்தில் ரொம்ப சென்சிட்டிவான விசயமுங்க இது. சென்டிமெண்ட்டான விசயமுங்க இது. வருசா வருசம் திருவிளா வேற நடக்குது. பூப் பல்லாக்கு எடுப்பாங்க. பூக்கட்டுவாங்க. ஒருடன் பூவு வருமுங்க. இந்த மரத்தைத்தான் வெட்டியாகணுங்களா?''

''மிஸ்டர் ஷண்முகம், நீங்க டி.வி. பாத்திருக்கிங்க இல்லை...''

''பாக்கறங்க. வீட்டில டீ.வி. வெச்சிருக்கங்க.''

''அது எப்படி நமக்குப் படம் தெரியுதுங்கறிங்க?''

''ஏதோ சொல்றாங்க மைக்ரவேவ் அது இதுன்னு...''

''இன்ஸாட்டுன்னு ஸாட்டிலைட்டு வெச்சிருக்காங்க. அதிலிருந்து பிரதிபலிக்குது. அதே மாதிரி டெலிபோன் பேச்சு வெளிநாட்டு டீ.விகளுக்கு எல்லாம் காம் ஸாட் இன்டெல்ஸாட்டுன்னு வச்சிருக்காங்க.''

''கொஞ்ச இருங்க கடையில போய் வடை வாங்கிட்டு வரச் சொல்றேன்.''

ஷண்பேகர் தனியாக அழைத்து ''அவரிடம் சாட்டிலைட் பற்றிப் பேசாதே பயந்து கொள்வார்'' என்றான்.

''எப்படி நம் ப்ராஜெக்டின் முக்கியத்தைப் புரிய வைப்பது?''

ஷண்பேகர் நூறு ரூபாயை எடுத்து, ''இந்தாங்க நாஷ்தா வாங்கி வரச் சொல்லுங்கள்'' என்றான். அவர் புன்னகை செய்து, கான்ஸ்டபிளை அனுப்பினார். ''ஷண்முகம் இந்த மரத்தை கலாட்டா இல்லாமல் வெட்டுவதற்கு ஒரு வழி சொல்லுங்கள்.''

''கிராமத்தில் முக்கியமான ஆசாமி ஒருத்தர் இருக்காரு நடேசபண்டிதர்னு...''

''எதுல பண்டிதர்?''

''எதுலயோ. பண்டிதர்னு பேரு. அவர் சொன்னா கிராமத்தவங்க அத்தனை பேரும் கேப்பாளுக. அவர விட அவருக்கு ரண்டாவது சம்சாரம் ஒருத்தியைப் பிடிச்சாந்திருக்காரு புதூர்லருந்து. கேட்டா தங்கச் சிங்கறாரு. ஒருநா ஒறவுங்காரு ஒருநா கீப்பு! அந்தம்மா சொன்னா கூட காரியம் நடக்கும்.''

ஷண்பேகர் ''என்ன சொல்கிறார்'' என்றான்.

''அப்புறம் சொல்கிறேன்.''

''அந்த நடேச பண்டிதர் வீடு எங்கிருக்கு?''

''இப்படியே நேராப் போனா கொஞ்சம் ஊருக்கு வெளிய சோலை மாதிரி இருக்கும். அச்சு வெல்லம் பண்ணுவாங்க... அங்க வீடுண்டு.''

❒ கிழக்கு - மேற்கு ஜெர்மனிகளைப் பிரிப்பதற்காக நெடுஞ்சுவர் ஒன்று எழுப்பப்பட்டது. இதனால் மேற்கு பெர்லின் அமெரிக்கன் மெமோரியல் நூலகத்திலிருந்து புத்தகங்கள் எடுத்துச் சென்ற ஒரு கிழக்கு ஜெர்மன் வாசகரால் அவற்றைத் திருப்பிக் கொடுக்க முடியாமலே போய் விட்டது.

சென்ற ஆண்டு அந்த நெடுஞ்சுவர் இடிக்கப்பட்டு இரு ஜெர்மனிகளும் இணைக்கப் பெற்றதைத் தொடர்ந்து, அந்த வாசகர் பத்திரமாகப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைத்தாராம்! 29 ஆண்டுகளுக்குப் பிறகு!

- கைலாஸ்.

இருவரும் சென்ற போது, கரும்புப் பாகு காய்ச்சும். விரும்பத்தகுந்த மணத்தின் ஊடே பெரிய வாயகலப் பாத்திரத்தில் காய்ச்சிக் கொண்டிருந்தார்கள். நடேச பண்டிதர் என்பவருக்கு நாற்பத்தைந்து வயது இருக்கலாம். உயரமாகப் பெரிய மீசையும் முன்வழுக்கையுமாக இருந்தார். கையில் கம்பு வைத்து அவரே பாகு கிளறிக் கொண்டிருக்க, ஒரு பெண் கரும்புச் சக்கையை அரை குறையாகக் கடித்து உதறிக் கொண்டிருந்தாள்.

''வாங்க நீங்க வந்திருக்கிறதா டிஸி சொன்னாரு. கரும்புச் சாறு சாப்பிடறீங்களா?''

''இல்லைங்க அவசரம்.''

''இவரு தமிழரா?''

''இல்லைங்க மகாராஷ்டிராகாரர்.''

''தமிழ் பேசுவாரா?''

''பேர் என்ன?'' என்று அந்தப் பெண்ணைக் கேட்டான் ஷண்பேகர். நடேச பண்டிதரின் பின்னால் சென்று பதுங்கிக் கொண்டாள். முப்பது வயசு இருக்கும். கட்டம் போட்ட நீலச் சேலை அவள் வாளிப்பிடம் தோற்றிருந்தது.

''நம்ம தங்கச்சிங்க. செல்வி இவங்களுக்குப் பூப்போட்ட கிளாஸில சாறு கொண்டா...'' என்றார்.

அவள் ஷண்பேகரை ஒரு மாதிரி பார்த்து விட்டுச் சென்றாள்.

''முனீஸ்வரன் ம ர த் தை வெட்டணுங்க.''

''உங்களுக்கு முனீஸ்வரன் இருக்கறதில் நம்பிக்கை இல்லைங்களா?''

''இல்லைங்க! இது என்னங்க... சாட்டிலைட் யுகங்க.''

''கிராமத்தவங்களுக்கு ந ம் பி க் கை இருக்குதே.''

''அவங்களுக்கு நீங்கதான் நல்லபடியாச் சொல்லி மனசை மாத்தணும்.''

''மாத்திரலாம்'' என்றார்.


மனோஜ் நம்பிக்கையுடன் நீங்க சொன்னாக் கேப்பாங்களாமே...''

''அதெல்லாம் இல்லங்க. ஓட்டு போடுவாங்க நான் சொன்ன கட்சிக்கு. இவ்வளவ்தாங்க.''

''இந்தப் பிரச்னையை நீங்கதான் தீர்த்து வெக்கணுங்க.''

''இன்ஸ்பெக்டர் இவளைப் பத்தி ஏதாவது சொன்னாரா?''

அந்தப் பெண் இரண்டு கண்ணாடித் தம்ளர்களில் கரும்புச்சாற்றைக் கொண்டு வந்து வைத்த போது, நீலச் சேலை விலகியதை நிதானமாகவே திருத்திக் கொண்டாள்.



''அந்தப் படத்தின் நடிகைகள் ரெண்டு பேர் தயாரிப்பாளர் மேல் கேஸ் போட்டிருக்காங்களாமே, எதுக்கு?''

''அந்த ரெண்டு பேரும் நிஜமாவே போட்ட சண்டையைத் தயாரிப்பாளர் ஓசியில் தன் படத்துக்குப் பயன்படுத்திக்கிட்டாராம்!''

- விஜயம்.

''அதெல்லாம் இல்லைங்க.''

''இவ மேல ஒரு கண்ணு அவனுக்கு. மாத்தல் ஆர்டருக்கு ஏற்பாடு பண்ணிருக்கேன்.''

''அப்படீங்களா?''

''பூசாரியை பாத்திங்களாமே... என்ன சொன்னான்?''

அவர் தோரணை, தெரிந்து கொண்டே கேட்கிறார் என்று தோன்றியது.

''அவரு மரத்தை வெட்டவே கூடாதுன்னுட்டாரு.''

''கொஞ்சம் சிக்கல்தான். இந்தக் கிராமத்தையே பாதுகாக்கறது அந்த முனீஸ்வரன்தான்னு நம்பறாங்க. அந்த ஜமீன் உங்களுதுதானே...''

''சர்க்காரது. சர்வே நம்பர் எல்லாம் பார்த்து வச்சது.''

''மரமில்லாத இ ட ம ா ப் பார்த்திருக்கலாமே...''

''அது என்னவோங்க சரியா விசாரிக்காம போய்டாங்க. இனி வேற எடம் பார்த்து அக்வையர் பண்ண ரெண்டரை வருசம் ஆய்டும். எல்லாம் வெட்லாண்டு பாருங்க.''

''ஆமாம்'' என்று தன் அரிவாளால் கன்னத்தில் சொரிந்து கொண்டே யோசித்தார்.

''ஒங்க பிரச்னைக்குத் தீர்வு ஒண்ணு இருக்கு. மரத்தை வெட்டிரலாம். தரை மட்டமாக்கிரலாம். செலவாகும் பரவால்லையில்ல?''

''எவ்வளவு?''

''என்ன ஒரு ரெண்டாயிரம் ரூபாய்.''

''பரவாயில்லை. இம்ப்ரஸ்ட் இருக்குது, ஸாங்ஷன் போட்டுக் கூட வாங்கிக்கலாம்.''

''மரத்தை வெட்டினாப் போதும்.''

''முடியும். ஒரே ஒரு காரியம் செய்யணும் நீங்க. ராத்திரி வாங்க. இன்னிக்கு அமாவாசைதானே? சொல்றேன்'' என்றார் நடேச பண்டிதர்.

(தொடரும்)

நான் ஓர் இந்தியன்

'க்ளிக்:

மைக்கேலின் கையிலிருந்த கேமரா வெட்கப்பட்டது.

பயணிகளை முகம் சுளிக்க வைத்தபடி மெல்ல அந்த மின்சார வண்டி கூவத்தைக் கடந்து கொண்டிருந்தது. காலைக் கடனைக் கூட நிம்மதியாகக் கழிக்க முடியாமல், வண்டி முழுதுமாய்க் கடப்பதற்காக எழுந்து நின்று கொண்டிருந்தார்கள் பெண்கள். வெளியே அவர்களைப் பார்த்த வேதனை என் நெஞ்சைக் கவ்வியது. அந்த வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் முன் புழுவாய் நெளிந்தேன் நான்.

''நாற்பதாண்டுகளுக்கும் மேலான விடுதலை வாழ்க்கையில் கூட தங்கள் மிக அடிப்படையான தேவைகளையும் உணராத மக்கள் என்ன மக்கள்!'' மைக்கேல் தன் நண்பன் ராபர்ட்டைத்தான் கேட்டான்.

''இதைத்தான் நாம் நம் பத்திரிகையில் ப்ரொஜெக்ட் செய்ய வேண்டும்!''

அவர்கள் ஆங்கிலத்தில் பேசிக் கொண்ட கசப்பான உண்மையை விட, அதை அவர்கள் நாட்டுப் பத்திரிகையில் வெளிச்சம் காட்டி வெளியிடப் போகிறார்களே என்ற எண்ணம்தான் என்னை அவமானத்தில் ஆழ்த்தியது.

விமான நிலையத்தில் எங்கள் கம்பெனிக் காரை அனுப்பி விட்டு, 'ஒய் நாட் வி கோ பை ட்ரெய்ன்?'' என்று கேட்ட போதே வித்தியாசமான பயணிகள் என்று மட்டும்தான் நினைத்தேன். அவர்கள் விபரீத நோக்கம் என்னை ஊசியாகத் துளைத்தது.

'இரண்டே நாள் இந்தியப் பயணம்... தமிழ் நாட்டுக்கு மட்டுமே வருகிறார்கள்,' என்று தந்தி கிடைத்த போது நான் வகுத்த பயணத் திட்டமே வேறு. 'தாஜ் மகாலைப் பார்க்காதவர்களுக்குத் தஞ்சைப் பெருங் கோயிலைக் காட்டுவோம்' 'அஜந்தா எல்லோராவைக் காணாதவர்களுக்குக் கடல் மல்லையைக் காட்டி அயர்த்தி விடுவோம்' என்றுதான் நினைத்தேன். இ வ ர் க ள் டேஸ்டே வேறு மாதிரியாகவல்லவா இருக்கிறது?

என் தொழிலுக்கு... திறமைக்கு.... நம்பிக்கைக்கே ஒரு சவால்!

இந்தியாவின் பெருமையை உலகெங்கும் பயணிகள் மூலம் பறைசாற்றவே டூரிஸ்ட் கைட் ஆனதாக எண்ணம்..... வெறும் டூரிசம் டிகிரி கைட் அல்ல... இந்திய வரலாறும், பண்பாடும் என் கண்கள்.... கேட்டவர்களுக்குத் தெரியும், எப்படி வார்த்தைகள் வெள்ளமாகப் பாயும் என்று... வெள்ளைக்காரர் வெட்கப்படும் ஆங்கிலம், ஃபிரெஞ்ச், உருது கலந்த இந்தி... சென்னை வாடை வீசாத தெலுங்கு, தமிழ்! செவன் ஸ்டார் இன்டர்நேஷனல் டூரிஸ்ட் ஏஜென்சி மூலம் வரும் எந்த வி. ஐ. பி.க்கும் கைட் ராஜாமணிதான்... உலகின் எந்தப் புகழ்



ஆர்.பி. சாரதி

பெற்ற பத்திரிகை இந்திய சுற்றுலா மலர் தயாரித்தாலும் என் கட்டுரை உண்டு. ஆனால் இப்படி இரண்டு பேர் இங்கு வந்து கன்னாபின்னாவென்று எழுதுவதைத் தடுக்கச் சக்தியில்லாமல் என்ன கைட் நான்! அவர்கள் பேசியதைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் இங்கே புலம்பிக் கொண்டிருக்கிறேன்.

ஓட்டலுக்கு வந்து சாப்பிட்டு ஓய்வெடுக்கப் போன போது சொன்னேன். தஞ்சையைப் பற்றி, 'நிறுத்தி வைத்த கலை மலை' என்று... 'பேசும் சிற்பங்கள்' என்றேன் கடல் மல்லையை....

''பிறகு பார்க்கலாம்!'' - முகத்திலடித்தாற்போல் பதில்!


இவர்கள் என்ன பார்க்கப் போகிறார்கள்? எதை எழுதப் போகிறார்கள்? என்னிடம் எதுவும் கேட்கவில்லை... அவர்களே பேசிக் கொண்டார்கள் ஆங்கிலத்தில்!

நடுப் பகலைத் தாண்டி நான் சற்று ஓய்வெடுக்க நினைத்த நேரம். சென்னையில் ஏதாவது ஒரு 'பிசி'யான பகுதியைப் பார்க்க வேண்டும் என்றார்கள். உலக நகரங்களில் ஓயாமல் சுற்றிக் கொண்டே இருக்கும் எத்தனை நகரங்களைப் பார்த்திருப்பார்கள்! மறுக்க முடியுமா?

எங்கள் வண்டி புகழ்பெற்ற கொத்தவால் சாவடியை நோக்கி விரைந்தது. கோடை வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. மைக்கேல் கேமராவைத் தயார்ப் படுத்திக் கொண்டான். எனக்கே வியப்பு, எதைப் படமெடுக்கப் போகிறான்?

அங்கே அவர்கள் கேமராவுக்குக் கிடைத்த காட்சி...?

பாவம், அவனுக்கு மட்டும் தன்னை



யாரோ வெளிநாட்டுக்காரர்கள் படம் பிடிக்கிறார்கள் என்று தெரிந்தால் வாயெல்லாம் பல்லாக வேதனையை மறந்து சிரித்திருப்பான்... ஆனால் தெரியாதே... வண்டியின் பாரம் முதுகை முறிப்பது போல் வளைக்க... வியர்வை ஆறாய் வழிய... கிழிந்த நிஜார்... காலில்... காலில்... அதுதான் அவர்கள் கவனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும்... வெய்யிலுக்குப் பாதுகாப்பாகக் கந்தல் கோணிகளைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருந்தான்!

''ஷூலெஸ் எக்ஸ்போர்டிங் நேஷன்'' செருப்புகள் ஏற்றுமதி செய்யும் நாடு என்றான் ராபர்ட் சுருக்கென்று. அதுதான், பத்திரிகையில் அந்தப் படத்துக்குத் தலைப்பாக இருக்கும்!

''செருப்பை விற்றுத்தானே சோறு,'' என்றான் மைக்கேலும் கருக்கமாக.

இருட்டையே தேடி அலையும் அவர்களை என்னால் வெளிச்சத்துக்கு இழுத்து வர முடியவில்லை. எனக்கே நம்பிக்கையில்லாமல் நான் ஒரு பொய்ச் சமாதானம் சொன்னேன்,'' செருப்பை விட இது... கோணி... சேறு தண்ணீர் வெயில் எல்லாவற்றுக்கும் சௌக்கியம்'' என்று.

அவர்கள் என் பேச்சை லட்சியமே செய்யவில்லை... என் 'ஈகோ'வுக்கு ஒரு அடி!

எங்கள் கார் கொத்தவால் சாவடியைச் சுற்றிக்கொண்டு மீண்டும் ஒட்டலை நோக்கி வந்து கொண்டிருந்தது. வேகமாக வந்து கொண்டிருந்த காரின் வேகம் தடைப்பட்டது. பஸ்... கார்.... லாரிகள் அங்கங்கே நின்று கொண்டிருந்தன. சில ஆட்டோக்கள் மட்டும் கிடைத்த இடைவெளிகளில் முன்னேற முயன்று கொண்டிருந்தன.

''என்னப்பா, ஏதாவது ஊர்வலமா?'' டிரைவரைக் கேட்டேன்.

''ஏதோ அமைதி ஊர்வலமாம்!''

எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. அமைதி ஊர்வலம் என்றாலும் அதன் முழுப் பெயர் எனக்குத் தெரியுமே!

மைக்கேலின் கேமரா சுறுசுறுப்பானது.


எங்கள் டிரைவர் எமகாதகன்... ஏதேதோ சந்து பொந்து வழியெல்லாம் வந்து ஊர்வலத்தைப் பிடித்து விட்டான்.

அடக்குமுறைகளை.... வ ன் மு றை களை எதிர்த்து... வாயில் கறுப்புப் பட்டையுடன் ஒரு கட்சி ஊர்வலம்... தலைவர்கள் எங்கோ ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்து விட்டு, எங்கிருந்தோ பார்க்கச் சென்று விட்டார்களாம்.

நான் மைக்கேலையும், ராபர்ட்டையும் எச்சரித்தேன். விலை உயர்ந்த கேமராவை வெளியே நீட்டிப் படம் எடுக்க வேண்டா

குங்குமப்பூ

தினசரி உணவில் குங்குமப் பூ சில இதழ்கள் சேர்த்து உண்டு வர கண் பார்வைக் குறை பாடுகள் வராமல் தடுக்கலாம். குங்குமப்பூ பல நோய்களைக் குணப்படுத்தக் கூடியது.



ஆதாரம்: மூலிகை மணி

எங்களிடம்

1. குங்குமப்பூ
   கோதுமை ஹல்வா
2. குங்குமப்பூ ஜாங்கிரி
3. குங்குமப்பூ லட்டு
4. குங்குமப்பூ பாதாம் ஹல்வா
5. குங்குமப்பூ பேடா

கிடைக்கும்



கல்யாண வைபவங்களுக்கு: சீர்முறுக்கு, சீர்முள்ளு தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24-2-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு
சென்னை - 600 020
போன்: 412557.

மென்று. அவர்கள் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. எங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லாவிட்டாலும் நான் பயந்தபடிதான் ஆயிற்று. அமைதி ஊர்வலத்தில் கற்கள் பறந்தன... தடிகள் வீசப் பட்டன... சைக்கிள் செயின்கள் சுழன்றன... சோடா புட்டிகள் வெடித்தன... போலீஸின் தடியடி... கண்ணீர்ப் புகை.. ஒன்றும் பாக்கியில்லாமல் நடந்தேறியது.

''அஹிம்சா மார்ச், இன் த லேண்ட் ஆஃப் அஹிம்சா...'' அஹிம்சை நாட்டில் அஹிம்சை ஊர்வலம் என்று வெளியிடப் போகிறார்களாம்... நான் வேண்டாம் என்றால் விட்டு விடுவார்களா?

இப்படி வெளிநாட்டில் எல்லாம் காறித் துப்புகிறார்களே என்பதற்காக நம் நாட்டில் கட்சிகளைத்தான் காந்தீயமாக்கி விட முடியுமா?

எனக்கு ஒரே ஒரு திருப்தி... இந்தியா முழுவதும் குப்பையைக் கி ள ற ா ம ல் இரண்டே நாளில் திரும்பி விடுகிறார்களே என்று.

எந்தப் பத்திரிகையில் எப்படி அவர்கள் எழுதினாலும் நிச்சயம் நான் மறுப்புக் கட்டுரை எழுதுவேன்... தூதரகங்களும் மறுப்புத் தெரிவிக்கலாம்... ஆனாலும் அவையெல்லாம் இவர்கள் எழுதிய பிறகு தானே!

அன்று ஓட்டலுக்குத் திரும்பிய பிறகு வெளியே செல்ல அவர்களே விரும்பவில்லை. மறுநாள் காலை மாமல்லபுரம்... இரவு ஃப்ளைட்டுக்குத் திரும்பி விட வேண்டும்... ஓட்டல் ஏ. சி. அறை கூட என் எரிச்சலைத் தணிக்க முடியவில்லை.

காலையில் மெரீனா வழியாகச் சென்றோம்... அவர்கள் கேமராவோ கை கொட்டிச் சிரிக்கும் கடலலையை விட்டு குப்பத்துக் குடிசைகளைத்தான் பார்த்தது... தெருப் பிச்சைக்காரர்கள்... குடித்து விட்டுச் சாக்கடையில் புரளும் 'குடிமகன்கள்' இவர்களைப் பார்த்தே கண் சிமிட்டியது.

ஒரு குடிசை வாசலில் கணவன், மனைவியை அடித்த காட்சியை அவர்கள் படமெடுத்தது எனக்கு வருத்தமில்லை.. எனக்குத் தெரியும் அவர்கள் நாட்டில் கணவன் மனைவி சண்டையில் கைத் துப்பாக்கிகள். பேசும்... கோர்ட் வரைபோகும். இங்காவது இல்லாமைக் கொடுமை... அங்கு...?

என் வருத்தம் எல்லை மீறியது அப போதுதான்... ஆம்.. ஒரு கல்யாணச் சத்திர வாசலில் ஒரு பிச்சைக்காரன் எ ச் சி ல் இலைக்கு நாயோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அதைப் படமெடுத்த ராபர்ட் கேட்டான். ''இத்தனை உணவுப் பொருளை வீணாக்கும் மனிதர் ஓர் ஏழைக்கு உள்ளே கூப்பிட்டுச் சோறு போடக் கூடாதா?'' என்று.

சொல்பவன் யாரானால் என்ன? சொல்வதில் நியாயமிருக்கிறது... எத்தனையோ ஆயிரக்கணக்கில் செலவு செய்பவர்கள் இதை ஏன் எண்ணிப் பார்க்கக் கூடாது?

சந்தனம் ஊதுவத்தி கமழும் சாமி அறையை விட்டு விட்டுச் சாக்கடையில் மட்டுமே மூக்கை வைத்து நாற்றம் நாற்றம் என்று கூவும் அவர்கள் போக்குத்தான் பிடிக்கவில்லை.

மாமல்லபுரம் சென்றார்களே... பாராட்டாக வார்த்தை வெளிவந்து விடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

''படமெடுக்கவில்லையா?'' ந ா ன் கேட்டேன்.

''ஆயிரம் படம் வந்துவிட்டது.'': பதில்.

நாங்கள் சீ வ்யூ லாட்ஜுக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம்.... எங்கள் ஏஜென்சி சார்பில் வருபவரை அங்குதான் தங்க வைப்போம்.... அதுவும் எங்களுக்குச் சொந்தம் மாதிரிதான். லாட்ஜை அடையவில்லை... வழியில் சிறு கூட்டம்... குப்பைத் தொட்டியில் ஒரு குழந்தை! எறிந்த போது உயிர் இருந்திருக்கலாம்....

''வளரும் இந்தியா... வ ள ம ா ன இந்தியா!'' வரிசையில் இதையும் போட்டு விடலாம்.

பேசாத சிற்பங்களையும் பேசவைக்கும் வண்ணப்படமாக எடுக்கும் ஆற்றல் பெற்ற அற்புதமான அ ந் த க் கேமராவுக்குள்



''நம்ம கந்தப்பன் வீட்லேர்ந்து போறது யாருன்னு தெரியுதா?''

''ஏன் தெரியாமே ? நம்ம சப்-இன்ஸ்பெக்டர் சந்தானந்தான்! மாமூல் வாங்கறதுக்காக வந்திருப்பாரு....''

''அதான் இல்லே! காலம் மாறிப் போச்சு! கந்தப்பன் கள்ளச் சாராயம் காய்ச்சாம இருக்க மாமூல் கொடுத்துட்டுப் போறதுக்காக வாரா வாரம் வர்றாரு!''

- ப. விஜயபாலன்.

மீண்டும் அந்தக் குப்பைத் தொட்டியையும், குழந்தைப் பிணத்தையும் நினைத்தார்கள்.

எனக்கு மனமே சரியில்லை... அவர்கள் ஏன் இப்படி ஒளி மிக்க இந்தியாவில் இருளைத் தேடித் தேடி அலைகிறார்கள்?

பல மாடிக் கட்டடங்கள் மனத்தை இடித்தன... நகை மாளிகைகள் புன்னகையைச் சிந்த வைக்கவில்லை... அண்மைக் கால கலை வளர்ச்சியைக் காணவே அவர்கள் கண் கூசியது.. வளர்ச்சிச் சின்னங்கள் வேப்பங்காய்களாயின... ஏன்?

அவர்களைக் கவனிக்கும் பொறுப்பை லாட்ஜில் கணேஷிடம் ஒப்படைத்து விட்டு நான் கடற்கரையிலேயே தங்கி விட்டேன். எனக்குத் தெரியும் அவன் அவர்களை நன்றாகவே கவனித்துக் கொள்வான் என்று! திட்டமிட்டதற்கு அரை மணி அதிகமாகவே தங்கினார்கள். திரும்பவும் அவர்கள் தள்ளாடித் தள்ளாடி வந்து காரில் ஏறிய போது சுயநினைவு தவறியிருந்தது. வரும் போது ஒருவரும் ஒன்றும் பேசவில்லை... நானும் பேச்சுக் கொடுக்கும் நிலையில் இல்லை.

ஓட்டலுக்கு வந்து ஓய்வு கூட எடுத்துக் கொள்ளவில்லை.... அங்கே இங்கே சிதறிக் கிடந்த அவர்கள் பொருள்களைப் பெட்டியிலும், பேக்கிலுமாகத் திணித்தனர். அவர்கள் நண்பர் ஒருவர்... ராயபுரத்தில் வீடாம்... அங்கே இரவுச் சாப்பாட்டை முடித்து விட்டு விமான நிலையத்திற்கு வந்து விட வேண்டும்... இது அவர்கள் காலையிலேயே போட்டு விட்ட திட்டம்.. ஏற்கெனவே அரை மணி மாமல்லபுரத்தில் தாமதமாகி விட்டதால் புறப்படுவதில் அவசரம்... பேக்கிங்கில் அவசரம்...

திடீரென்று அலறினான் மைக்கேல், "ஓ... மைகாட்! மை கேமரா!"

"வேர் ஹேஸ் இட் கான்?" சேர்ந்து அலறினான் ராபர்ட்.

கேமிரா கால் முளைத்துப் போயிருக்காது... எனக்குத் தெரியும். வரும் போது படம் எடுக்கவில்லை.. எடுக்கும் நிலையிலும் அவர்கள் இல்லை!

நெற்றிப் பொட்டை விரலினால் தட்டிக் கொண்டான் மைக்கேல்... நினைவு படுத்திப் பார்க்க உதவி செய்வது போல நகத்தைக் கடித்துத் துப்பினான் ராபர்ட்.

எனக்கு மனத்துக்குள் மகிழ்ச்சி... வெளிக்காட்டிக் கொள்ள முடியாத மகிழ்ச்சி... என் தொழிலுக்கு வரக் கூடாத தவறான மகிழ்ச்சி...

அதற்கு ஈடுசெய்வது போல நானே கேட்டேன், "மாமல்லபுரத்தில் சீ வ்யூ லாட்ஜில் தங்கும் போது, எங்காவது...?"

"எஸ்... எஸ்... எக்ஸாக்ட்லி... இன் த லான் தேர்..." மைக்கேல் குதித்தான்.



''ஏய்யா தரகரே, உன்னை விட்டோட இருக்கற மாப்பிள்ளையை மட்டும்தானே பார்க்கச் சொன்னேன்?''

''ஆமா. இப்ப என்னாச்சு! மாப்பிள்ளை வீட்டோட இருக்க மாட்டேங்கறாரா?''

''மாப்பிள்ளையோட, மாப்பிள்ளை குடும்பமே வந்து டேரா போட்டுட்டாங்களேய்யா!''

- திருப்பூர். ரா. கலை.

''எஸ்... எஸ்... ஐ... டு... ரிமெம்பர்...'' ஒத்துப் பாடினான் ராபர்ட்.

ஆனால் சிவ்யூ லாட்ஜுக்கு ஆயிரம் பேர் வருவார்களே! அதுவும் வெளி மைதானத்தில் வட்டமேஜையில் வைத்தது திரும்பக் கிடைக்குமா? அதுவும் அவர்கள் ஏர்போர்ட்டுக்குள் இன்னும் இரண்டு மணிக்குள்ளாக இருக்க வேண்டுமே! சிறிது யோசித்தேன்.

சவாலை ஏற்றேன் நான்! அதுதான் டூரிஸ்ட்களைக் கவரும் ராஜாமணி!

உடனே சி வ்யூக்கு டெலிபோன் செய்தேன்... நல்லவேளை கணேஷும் இருந்தான்... கேமராவும் இருந்தது... சில நிமிடங்கள் அவனுடன் பேசினேன்... அவ்வளவுதான்!

மைக்கேலிடம் சொல்லி விட்டேன், ''நீங்கள் ராயபுரம் போய் விட்டு ஏர்போர்ட்டுக்கு வந்து விடுங்கள்... உங்கள் கேமராவும் உங்கள் கைக்கு வந்து விடும்.''

என் கையைக் குலுக்கினான்... முதுகில் தட்டினான்... கட்டி அணைத்துக் கொண்டான்... ஏன்... முத்தம் கூடக் கொடுத்து விட்டான்...! காரணம் அவனே சொன்னான்.

அந்த கேமரா அவன் காதலியின் அன்புப் பரிசாம்! உலகத்தையே இழந்தாலும் அதை இழக்க முடியுமா? அதைத் திரும்பப் பெற எதையும் இழக்கத் தயாராயிருப்பது இயல்புதானே?

''என்ன செலவானாலும் கவலையில்லை!'' என்றான் அவன்.

''எனக்குத் தெரியும்!'' என்றேன் நான்.

ஏர்போர்ட்டில் எனக்கு இருப்புக் கொள்ளவில்லை... சினிமாப் பட சஸ்பென்ஸ் போல ஆகி விட்டது... மாமல்லபுரத்திலிருந்து வரும் கணேஷை வழிமறிக்க வில்லன்கள் யாருமில்லை என்றாலும் வண்டி மக்கர் செய்து விட்டால்...?

இதோ இன்னும் சில நிமிடங்கள்தாம்... ராபர்ட்டும், மைக்கேலும் உள்ளே போய் விடுவார்கள். ஃப்ளைட்டுக்கு ஒரு மணி நேரம் இருந்தாலும் அவசரத்தில் கொண்டு வரும் பொருள் பற்றி ஆயிரம் சந்தேகம் வரும். நல்லவேளை எங்கள் கம்பெனி கார்தான் அது... கணேஷ் ஓடி வந்தான்... அவன் கையில் அந்த கேமரா... ராபர்ட்டுக்கு அவசரம்... அப்படியே அதைப் பிடுங்கிக் கொண்டான்.

''தேங்க் யு கணேஷ்... தேங்க் யு ராஜாமணி'' என்றான் மைக்கேல். அவன் குலுக்கிய குலுக்கலில் என் கை வலி எடுத்து விட்டது.

''ச்சூஸ் யுவர் கிஃப்ட்... ஆஸ்க் வாட் யு வான்ட்.''

நான் யோசித்தேன்... எதைக் கேட்பது...? கேட்கலாமா?

''கமான்... எனி திங் யு லைக்''

மீண்டும் என் கையை அழுத்தினான்... நான் தயங்கினேன்...

''ஐ ப்ராமிஸ்.. யூ ஆஸ்க் எனிதிங்''

நான் துணிந்து விட்டேன்... அதைக் கேட்கக்கூடாதுதான்... எத்தனையோ முறை நினைத்தேன். ஆனாலும் அதைத்தான் கேட்டேன். ''த ஃபிலிம் ரோல் இன் த கேமிரா... இஃப் யு டோன்ட் மைண்ட்.''

''நோ... நோ... வீ கேம் ஃபார் இட்'' கத்தினான் ராபர்ட்.

அவனை அடக்கினான் மைக்கேல். ''காம் யுவர் செல்ஃப்.''

நான் ஓர் இந்தியன்... என்னால் அதை முழு மனதோடு வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவருவதை விரும்ப முடியாது... ஒளிபெற்று வரும் என் தாய் நாட்டில் அங்கங்கே இருள் திட்டுக்கள் இருக்கத்தான் செய்கின்றன. அந்த இருட்டை மட்டும் வெளியே காட்டி இதுதான் என் நாடு என்று அவர்கள் சொல்வதை என்னால் எப்படி ஒப்ப முடியும்?

மைக்கேல் தயங்கவில்லை...

உடனே அந்த ஃபிலிம் ரோலைக் கழற்றிக் கொடுத்தான்.

''யு ஆர் எ ட்ரூ இண்டியன்!'' என் கையை மீண்டும் குலுக்கினான்.

''யூ ஆர் க்ரேட்... ரியலி கிரேட்!'' என்றேன் பேச முடியாமல்!

மைக்கேல் என்னை ''நீ ஓர் இந்தியன்'' என்று பாராட்டி விட்டுக் கொடுத்து விட்டுப் போன படங்கள் இதோ என்னிடம்தான் இருக்கின்றன.

என் சகோதர இந்தியர்கள் இதற்கு என்ன செய்யப் போகிறார்கள்?

சிவகாமியின் சபதம்

ஏழாம் அத்தியாயம்
மகேந்திர ஜாலங்கள்

காஞ்சி மாநகரில், பிரதான மந்திராலோசனை மண்டபத்தில் சபை கூடியிருந்தது. மந்திரி மண்டலத்தாரும் அமைச்சர் குழுவினரும் பிரசன்னமாகியிருந்தார்கள். சக்கரவர்த்தியும், குமார சக்கரவர்த்தியும் சிம்மாசனங்களில் நடுநாயகமாக வீற்றிருக்க, அருகே ஒரு தனிப் பீடத்தில் சேனாதிபதி கலிப்பகையும் அமர்ந்திருந்தார்.

தளபதி பரஞ்சோதியை மட்டும் அவ்விடத்திலே காணவில்லை. கோட்டைப் 'பாதுகாப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தபடியால் அவரால் மந்திராலோசனைக்கு வர முடியவில்லை போலும்.

சபையில் கூடியிருந்தவர்களின் முகத்திலெல்லாம் இலேசாகக் கவலைக் குறி தோன்றி-பது. எல்லோரையும் காட்டிலும் அதிகமானகவலை, சபையில் எழுந்து நின்ற பண்டகசாலை அமைச்சர் பராந்தக உடையார் முகத்தில் காணப்பட்டது.

''உடையாரே! முற்றுகை ஆரம்பிக்கும் சமயத்தில் நீர் உறுதியாகச் சொன்னீரல்லவா? குறைந்தது பதினைந்து மாதத்துக்கு வேண்டிய தானியங்களை நம் பண்டகசாலைகளில் பத்திரப்படுத்தியிருப்பதாக! - முற்றுகை ஆரம்பித்து ஏழு மாதந்தானே ஆகிறது? இன்னும் எட்டு மாதத்துக்கு இருக்க வேண்டுமே? மூன்று மாதத்துக்குத் தான் தானியம் இருக்கும் என்று சொல்கிறீரே? அது எப்படி?'' என்று சக்கரவர்த்தி கேட்டார். மகேந்திர பல்லவரின் குரல் மிகக் கடுமை பெற்றிருந்தது. அவருடைய முகத்தில் சுருக்கங்கள் அதிகமாயிருந்தன.

பராந்தக உடையார் குரலில் கலக்கத்துடனும், சொல்லில் தடுமாற்றத்துடனும் கூறினார் : ''பல்லவேந்திரா! நான் எதிர்பார்த்தபடி சில காரியங்கள் நடக்கவில்லை! எதிர்பாராத காரியங்கள் சில நடந்து விட்டன. நகரை விட்டு வெளியேறிய ஜனங்கள் பலர், புள்ளலூர்ச் சண்டைக்குப் பிறகு நகருக்குத் திரும்பி வந்து விட்டார்கள். தொண்டை மண்டலத்திலுள்ள சிற்பிகள் அனைவரையும் தலைநகருக்குள்ளே கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று தங்களுடைய ஆக்ஞை பிறந்தது. இதனால் ஐயாயிரம் பேர் அதிகமானார்கள். நமது கடிகைகள் - கல்லூரிகள் எல்லாவற்றையும் மூடி ஆசிரியர்களையும் மாணாக்கர்களையும் வெளியே அனுப்பி விடலாமென்று முதலில் யோசனை செய்திருந்தோம். கடைசி நேரத்தில் தாங்கள் அவ்விதம் செய்ய வேண்டாம் என்று கட்டளையிட்டு விட்டீர்கள்.''

''இவ்வளவுதானா? இதனாலேயே ஐந்து மாதங்களுக்குரிய உணவு குறைந்து போய் விட்டதா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''அடியேனும் ஒரு பெரிய தவறு செய்து விட்டேன். நகரில் உள்ள புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகளை மட்டும் கணக்கெடுத்துக் கொண்டு, பதினைந்து மாதத்துக்கு உணவு இருப்பதாகச் சொன்னேன். கறவைப் பசுக்கள், கோயில் மாடுகள், குதிரைகள் இவற்றைக் கணக்கில் சேர்க்கவில்லை. மாடுகளுக்கும் குதிரைகளுக்கும் வைக்கோலும் புல்லும் கிடைக்காதபடியால் தானியத்தையே தீனியாகக் கொடுக்க வேண்டியதாகி விட்டது'' என்றார் அமைச்சர்.

''நல்லது, பராந்தகரே! தொண்டைமான் இளந்திரையன் வம்சத்தில் பிறந்த


அமரர் கல்கி

காஞ்சி மகேந்திர பல்லவன், வாதாபிப் புலிகேசியிடம் சரணாகதியடைய நேர்ந்தால் அந்தப் பழியைக் கோவில் மாடுகள் மீதும், தேர்க் குதிரைகள் மேலும் போட்டு விடலாமல்லவா?'' என்று கூறி விட்டுச் சக்கரவர்த்தி சிரித்தார். அந்தச் சிரிப்பில் கோபம் அதிகமாய்த் தொனித்ததா, ஏளனம் அதிகமாய்த் தொனித்ததா என்று சொல்வதற்கு முடியாமல் இருந்தது.

அப்போது நரசிம்மவர்மர் துள்ளி எழுந்து, ''அப்பா! என்ன வார்த்தை சொன்னீர்கள்? வாதாபிப் புலிகேசியிடம் மகேந்திர பல்லவர் சரணாகதியடைவதா? ஒரு இலட்சம் பல்லவ வீரர்கள் ஏழு மாதமாக மூன்று வேளை உண்டும், உறங்கியும் இந்தக் கோட்டைக்குள்ளே எதற்காக அடைபட்டுக் கிடக்கிறார்கள்? தந்தையே! நமது பண்டகசாலை அமைச்சரின் கணக்குப் பிழையும் ஒருவிதத்தில் நல்லதாகவே போயிற்று. இப்போதாவது கட்டளையிடுங்கள், கோட்டைக்குள்ளே ஏழு மாதம் ஒளிந்து கொண்டிருந்தது போதும். உலகமெல்லாம் நம்மைப் பார்த்துச் சிரித்தது போதும். அப்பா! இப்போதாவது வாதாபிப் படைகளைத் தாக்கி நிர்மூலம் செய்யும்படி அடியேனுக்குக் கட்டளையிடுங்கள்!'' என்று ஆத்திரமும் அழுகையுமாய்க் கூறி விட்டு, மகேந்திர பல்லவரின் முன்னால் தரையில் விழுந்து அவருடைய பாதங்களைப் பற்றிக் கொண்டார்.

மகேந்திர பல்லவர் தமது கண்களில் துளித்த நீர்த் துளியை மறைப்பதற்காக முகத்தைப் பின்புறமாகத் திருப்பினார்.

ஒரு நொடி நேரத்தில் சக்கரவர்த்தி மீண்டும் சபையின் பக்கம் திரும்பிய போது, அவர் முகத்தில் பழையபடி கடுமையும்



ஏளனப் புன்னகையும் குடிகொண்டிருந்தன. தம் பாதங்களைப் பற்றிக் கொண்டு தரையில் கிடந்த மாமல்லரை அவர் தூக்கி நிறுத்தி, ''மாமல்லா! உன்னை வெகு காலம் நான் அந்தப்புரத்திலேயே விட்டு வைத்திருந்தது பிசகாய்ப் போயிற்று. மூன்று தாய்மார் களுக்கு மத்தியில் நீ ஒரே மகனாக அகப் பட்டுக் கொண்டிருந்தாயல்லவா? அதனாலேதான் பெண்களுக்குரிய குணங் களான ஆத்திரமும் படபடப்பும் உன்னிடம் அதிகமாய்க் காணப்படுகின்றன. உலகில் வீரச் செயல்கள் புரிய விரும்பும் ஆண் மகனிடம் இத்தகைய படபடப்பும் ஆத்திர மும் இருக்கக் கூடாது. நரசிம்மா! மல்யுத் தத்தில் மகா நிபுணனான உனக்கு இதை நான் சொல்ல வேண்டுமா?'' என்றார்.

மாமல்லருடைய உதடுகள் துடித்தன. தந்தையின் வார்த்தைகளுக்கு மறுமொழி சொல்ல அவருடைய உள்ளத்திலிருந்து வார்த்தைகள் பொங்கி வந்தன. ஆனால், அதிக ஆத்திரத்தினாலேயே அவரால் பேச முடியாமற் போய் விட்டது.

மகனுடைய நிலையைக் கண்ட மகேந்திர பல்லவர், ''குழந்தாய்! நீண்ட காலமாகப் பொறுத்து வந்திருக்கிறாய். இன்னும் சில நாள் பொறு. நீயும் நமது பல்லவ வீரர்களும் உங்களுடைய வீர தீரத்தை எல்லாம் காட்டுவதற்குரிய சந்தர்ப் பம் சீக்கிரத்தில் வரப் போகிறது. வாதா பிப்படை, இன்னும் சில தினங்களுக்குள் கோட்டையைத் தாக்குமென்று எதிர்பார்க் கிறேன். அந்தத் தாக்குதல் வெகு கடுமை யாயிருக்கும் என்றும் எண்ணுகிறேன். அதைச் சமாளிப்பதற்கு நாமும் நமது பாண



பலத்தையும் பிரயோகிக்க வேண்டியதாயிருக்கும். பல்லவர் வீரத்துக்கு மகத்தான சோதனை வரப் போகிறது. அதற்கு நாம் எல்லோரும் ஆயத்தமாக வேண்டும்!'' என்றார்.

இவ்விதம் மாமல்லனைப் பார்த்துக் கூறிய பிறகு, பண்டகசாலை அமைச்சரைப் பார்த்து மகேந்திர பல்லவர், ''பராந்தகரே! இன்று முதல் காஞ்சி நகரில் உள்ளவர் அனைவரும், மாடுகளும் குதிரைகளும் உள்பட சமண நெறியை மேற்கொள்வோமாக!'' என்றதும், சபையில் இருந்த அனைவருக்குமே தூக்கிவாரிப் போட்டது.

''ஒரே ஒரு காரியத்தில் மட்டும்தான் சொல்கிறேன் : அதாவது, இரவில் உணவு உட்கொள்வதில்லையென்ற சமண முனிவர்களின் விரதத்தை எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டும். இதுவரை நீங்கள் கொடுத்து வந்த உணவுப் படியில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்து விடுங்கள். அரண்மனைக்கும் ஆலயங்களுக்கும் உள்படச் சொல்லுகிறேன். இனிமேல் காஞ்சி நகரில் உள்ளவர்களுக்கெல்லாம் தினம் இரண்டு வேளைதான் உணவு. இதன்மூலம் கைவசமுள்ள தானியத்தை நாலரை மாதம் நீடிக்குமாறு செய்யலாமல்லவா? மந்திரிமார்களே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று சக்கரவர்த்தி கேட்கவும், முதன் மந்திரி சாரங்கதேவர், ''பிரபு! கோட்டை முற்றுகை நாலரை மாதத்துக்கு மேல் நீடிக்காதென்று தாங்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது'' என்றார்.

''இல்லை! நாலரை மாதங்கூட நீடிக்குமென்று நான் நினைக்கவில்லை. முன் ஜாக்கிரதையாக உணவை மூன்றில் ஒரு பங்கு குறைக்கலாமென்று சொன்னேன். புலிகேசி இன்னும் ஒரு வாரத்தில் கோட்டையைத் தாக்கத் தொடங்குவான் என்று எதிர்பார்க்கிறேன்....''

''பிரபு! அப்படித் தாங்கள் எதிர்பார்ப்பதற்குத் தக்க காரணங்கள் இருக்கத்தான் வேண்டும்'' என்றார் சாரங்க தேவர்.

''ஆம்; அவற்றை உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன்! சபையோர்களே! உணவு நெருக்கடியைப் பொறுத்தவரையில் நம்மைக் காட்டிலும் புலிகேசியின் நிலைமை ஆபத்தானது. வாதாபிப் படையினர் மூன்று மாத காலமாக அரை வயிறு உணவு உண்டுதான் ஜீவித்து வருகிறார்கள். புலிகேசி வாதாபியிலிருந்து புறப்பட்ட போது ஐந்து இலட்சம் வீரர்களுடனும், பதினையாயிரம் யானைகளுடனும் புறப்பட்டான். இப்போது வாதாபிப் படையில் மூன்றரை இலட்சம் வீரர்கள்தான் இருக்கிறார்கள். பதி

அருள்வாக்கு



சமூகசேவை உண்மையாக இருக்க வேண்டுமாகில் சேவை செய்கிறவர்களுக்கு தர்மத்திலும் சத்தியத்திலும் தளராத பிடிப்பு இருக்க வேண்டும். அவர்களுக்குப் பயம் என்பதே கூடாது. பயமற்ற நிலை வேறு; ஹிம்சை வழியில் நடப்பது வேறு. இரண்டையும் குழப்பிக்கொள்ளக் கூடாது. யுவர்களுக்கெல்லாம் உதாரணமாக இருப் பவர் ஆஞ்சநேய ஸ்வாமி. அவருக்கு இருந்த பலம் மிகப் பெரியது; சுபாவத்திலோ சாந்தராக இருந்தார். கோபித்து எழ வேண்டிய சமயத்தில் மஹாவீரராக எழும்பி ஹதாஹதம் செய்தார். அவருடைய புத்தி பலம் பெரிது. ஆயினும் பக்தியில் தோய்ந்து அடக்கத்துடன் விநயமே ஸ்வரூபமாகச் சேவை செய்து கொண்டிருந்தார். பயமென்பதே அவருக்கு இல்லை. ஆனாலும் தாமாக ஹிம்சை வழியில் அவர் சென்றதில்லை. பிறருடைய ஹிம்சைக்கு எதிர் மருந்தாகவே தாமும் எதிர்த்தார். அவர் சொந்த நலனுக்காகப் பலத்தைப் பிரயோஜனப் படுத்தவில்லை. துர்பலருக்குக் கொடியவரால் கஷ்டம் ஏற்பட்டால், தம் நலனையும் பொருட்படுத்தாமல் பலவீனரை ரட்சிப்பதில் அஞ்சா நெஞ்சராகச் சேவை செய்தார். சிவாஜியும் இப்படிப்பட்ட ஓர் உதாரண புருஷர். ஆஞ்சநேயரின் அவதாரமாக மதிக்கப்படும் ஸமர்த்த ராமதாஸரின் அத்யந்த சிஷ்யராக இருந்ததாலே சிவாஜிக்கு இப்படிப்பட்ட குண சம்பத்து இருந்தது. தேகபலம், அஹிம்ஸை, பயமற்ற நிலை இவற்றோடு சொந்தக் கஷ்டங்களைப் பாராட்டாமல் பிறரைக் காக்கும் பான்மையும் சேர்ந்தால், அது மிகப் பெரிய சீலமாகும். இதற்கே 'க்ஷத்ர தர்மம்' என்று முன்னாளில் பெயர் சொல்லப் பட்டது. 'க்ஷதாத் கில த்ராயதே: இதி க்ஷத்ரம்' - 'பிறரைத் தீமையிலிருந்து காப் பதே க்ஷத்ரம்' என்பது இதன் பொருள். 'க்ஷத்திரியர்' என்ற பெயர் இதிலிருந்துதான் பிறந்தது. இப்போது நம் நாட்டு யுவர்கள் இந்த க்ஷத்ர தர்மத்தை மேற்கொள்ள நிரம்ப அவசியமிருக்கிறது. பலிஷ்டர்களைக் கண்டு பயப்படக் கூடாது. பலவீனர்களை பயமுறுத்தவும் கூடாது. பலவீனர் களை வெறும் மிருக பலம் படைத்தவர்கள் கொடுமைப் படுத்தாதபடி சர்வத்தியாகமும் செய்து காப்பாற்ற வேண்டும். மெஜாரிட்டி, மைனாரிடி என்ற பயம் இல்லாமல், தர்மத்துக்கு ஆபத்து வந்தால் உயிரைத் திருணமாக மதித்துப் போராடுகிற நெறி இளைஞர் களுக்கு இருக்க வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

னாயிரம் யானைகள் மட்டுமே இருக் கின்றன. சபையோர்களே! இன்னும் ஒரு மாதம் போனால் இவர்களிலும் பாதிப் பேர் பஞ்சத்திலும் நோயிலும் மடிந்து போவார் கள். யானைகளின் கதி என்ன ஆகுமோ தெரியாது. ஆகையால், புலிகேசி சீக்கிரத் தில் கோட்டையைத் தாக்கித்தான் ஆக வேண்டும். இந்தத் தாக்குதல் வெகுஉக்கிரமாய் இருக்குமென்பதிலும் சந்தேக மில்லை.''

முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர், ''பல்லவேந்திரா! இந்த மாதிரி அதிசயத்தை இவ்வுலகம் எப்போதும் கேள்விப்பட்ட தில்லை. முற்றுகைக்கு உள்ளானவர்கள் பசி, பட்டினிக்கு ஆளாகி மடிவதுண்டு. எதிரியிடம் சரண் அடைந்ததும் உண்டு. ஆனால் முற்றுகை இடுகிறவர்கள் பட்டி னிக்கு ஆளானார்கள் என்று கதைகளிலே கூடக் கேட்டதில்லை!'' என்றார்.

''ஆம் பல்லவராயரே! திரிபுரம் எரித்த பெருமானின் அருளினால் அம்மாதிரி அதி சயம் நடக்கிறது. தொண்டை மண்டலத்துக் கிராமங்களில் உள்ள ஜனங்கள் எதிரிகளுக்கு ஓர் ஆழாக்கு அரிசியோ, ஒரு பிடி கம்போ கொடுக்கவும் மறுத்திருக்கிறார்கள். கையி லுள்ள தானியத்தையெல்லாம் வெகு பத்திர மாகப் புதைத்து வைத்திருக்கிறார்கள். சபை யோர்களே! தொண்டை மண்டலத்து ஏரிகள் கூட நமக்குப் பெரிய உதவி செய்திருக் கின்றன. சென்ற தை மாதத்தில் எக் காரணத் தினாலோ நம் நாட்டு ஏரிகள் எல்லாம் திடீர் திடீரென்று உடைத்துக் கொண்டு விட்டன. அப்படி ஏற்பட்ட உடைப்பு வெள்ளத் தினால் வாழைத் தோட்டங்கள், தென்னந்

தோப்புகள் எல்லாம் பாழாயின. கோடைக் காலத்துச் சாகுபடியும் நடக்கவில்லை. இதனாலெல்லாம் புலிகேசியின் போர் வீரர்களுக்கும் போர் யானைகளுக்கும் உணவு கிடைக்கவில்லை!''

சேனாபதி கலிப்பகை எழுந்து, ''சபையோர்களே! தொண்டை மண்டலத்து ஏரிகள் நமது கட்சியில் சேர்ந்து உடைத்துக் கொண்டு பகைவர்களைப் பட்டினிக்குள்ளாக்கியது உண்மைதான். ஆனால், அவை தாமாக உடைத்துக் கொள்ளவில்லை; விசித்திர சித்தரான நமது மன்னரின் மகேந்திர ஜால வித்தையிலேதான் ஏரிகள் எல்லாம் உடைத்துக் கொண்டன'' என்றார்.

''நான் செய்தது ஒன்றுமில்லை. சத்ருக்னனுடைய தலைமையில் நமது ஒற்றர் படை வெகு நன்றாய் வேலை செய்திருக்கிறது. தொண்டை மண்டலத்திலுள்ள கோட்டத் தலைவர்களும் வெகு திறமையுடன் காரியம் செய்திருக்கிறார்கள். நாட்டில் பஞ்சம் வந்தாலும் வரட்டும் என்று ஏரிகள், அணைக்கட்டுகள் எல்லாவற்றையும் அவர்கள் வெட்டி விட்டிருக்கிறார்கள். சபையோர்களே! தொண்டை மண்டலத்துப் பிரஜைகள் இந்த யுத்தத்தில் செய்திருக்கும் உதவிக்கு நூறு ஜன்மம் எடுத்து நான் அவர்களுக்குத் தொண்டு செய்தாலும் ஈடாகாது'' என்று சக்கரவர்த்தி கூறிய போது அவருடைய குரல் உணர்ச்சியினால் தழுதழுத்தது.

சற்று நேரம் சபையில் மௌனம் குடிகொண்டிருந்தது. பிறகு முதல் மந்திரி சாரங்கதேவர், ''பல்லவேந்திரா! புலிகேசி, பாண்டியனைச் சந்திக்கக் கொள்ளிடக் கரைக்குச் சென்றிருப்பதாகத் தெரிகிறதே! பாண்டியன் ஒருவேளை வாதாபிப் படைக்கு வேண்டிய உணவுப் பொருள் கொடுக்கலாம் அல்லவா?'' என்றார்.

''ஆம் மந்திரி! பாண்டியனிடம் உணவுப் பொருள் உதவி கோருவதற்காகத் தான் புலிகேசி தெற்கே போயிருக்கிறான். ஆனால் அந்த உதவி அவனுக்குக் கிடைக்கும் என்று நான் கருதவில்லை. தவிரவும், புலிகேசி சீக்கிரத்தில் வாதாபிக்குத் திரும்ப வேண்டிய காரணங்களும் ஏற்பட்டிருக்கின்றன. சபையோர்களே! ஒவ்வொரு நிமிஷமும் தெற்கேயிருந்து முக்கியமான செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே மகேந்திர பல்லவர் மண்டபத்தின் வாசற்பக்கம் பார்த்தார். பார்த்த உடனே ''ஆ! இதோ செய்தி வருகிறது!'' என்றார்.

காவலன் ஒருவன் உள்ளே வந்து, சக்கரவர்த்திக்கு அடி வணங்கி, அவருடைய காதோடு ஏதோ இரகசியமாகச் சொன்னான். சாதாரணமாக எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆச்சரியமான அறிகுறியைக் காட்டாத மகேந்திர பல்லவரின் முகம், மேற்படி காவலன் கூறியதைக் கேட்டதும் எல்லையற்ற வியப்பைக் காட்டியது.

''சபையோர்களே! நீங்களாவது நானாவது சற்றும் எதிர்பாராத அதிசயமான செய்தி வந்திருக்கிறது. என்னாலேயே நம்ப முடியவில்லை. விசாரித்து உண்மை தெரிந்து கொள்ளப் போகிறேன். இப்போது சபை கலையட்டும். இன்றிரவு மறுபடியும் சபை கூட வேண்டும். அப்போது எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். மாமல்லா! நீயும் அரண்மனைக்குப் போய் உன் தாய்மாரைப் பார்த்து விட்டு வா!'' என்று கூறிக் கொண்டே மகேந்திர பல்லவர் எழுந்து சபா மண்டபத்தின் வாசலை அடைந்து, அங்கு ஆயத்தமாய் நின்ற குதிரையின் மீது தாவி ஏறினார்.

(தொடரும்)

''ராத்திரி ட்ரெயின்ல டெல்லி போறது மாதிரி கனவு வந்துச்சு டாக்டர்!''

''நேத்திக்கு இதே மாதிரி ஏதாவது கனவு வந்துச்சா?''

''ம்... டிக்கெட் ரிசர்வ் பண்ணின மாதிரி வந்துச்சு...''

- வலங்கை. ஜி. ராஜசேகர்.



☐ நாடு முழுவதும் 27 போலி பல்கலைக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஐந்து தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன!

☐ அமெரிக்காவில் கடந்த பத்து ஆண்டுகளில் 1,400 விமானங்கள் திருடு போயிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இவற்றில் 70 முதல் 90 சதம் வரையான விமானங்களைப் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் திருடியிருக்கின்றனர்!

ஆதாரம் (தினமணி)

தகவல் : ஏ. தங்கமுத்து.



அழகன்

ஒருவனை மூன்று பெண்கள் காதலிக்கிறார்கள். அவர்களில் இருவரை ஒதுக்கி விட்டு, ஒருத்தியை மட்டும் விரும்பி மணந்து கொள்கிறான் அவன்.

இப்படியொரு 'தம்மாத்தூண்டு' கதையை வைத்துக் கொண்டு, அதில் அழுகை - ஆர்ப்பாட்டம் - செண்டிமெண்ட் - மெலோ டிராமா என்று செயற்கையான சமாசாரங்களுக்கெல்லாம் இடமளிக்காமல், சின்னச் சின்னத் திருப்பங்களுடன் நொடிக்கொரு சிரிப்பலையைத் தோற்றுவித்துப் பதினைந்து ரீல்களும் போன சுருக்குத் தெரியாமல் ஒரு விறுவிறுப்பான படத்தை எழுதி இயக்க முடியுமா?

முடிந்திருக்கிறது, இயக்குனர் கே. பாலசந்தரால்.

மம்முட்டியிடம் புதைந்து கிடக்கும் ஆற்றலை முற்றிலும் புரிந்து கொண்டு அதனை அப்படியே சாறு பிழிந்து கொடுத்திருப்பதும் -

பானுப்ரியாவின் விழிகளுக்கு மட்டுமின்றி அவருடைய நாட்டியத் திறனுக்கும் மடை திறந்து வழி விட்டு (அதுவும் அவர் ஆக்ரோஷமாக, வெறும் லயத்தை மட்டுமே பின்னணியாகக் கொண்டு, கிட்டத்தட்ட ஒரு ருத்ர தாண்டவ ரூபிணியாக ஆடிக் கொண்டே மூச்சு வாங்கத் தம் உள்ளத்துக் கொந்தளிப்பை மம்முட்டியிடம் வெளியிடும் இடத்தில்) பளிச்சிடச் செய்திருப்பதும் -

பண்பட்ட நடிப்புக்குரியவரான கீதாவின் விழிச் சுழற்சியையும் உதட்டுச் சுழிப்பையும் கொண்டே அவருடைய நெஞ்சத்து வேதனையைக் கோயில் வாயிலில் துல்லியமாக வெளிப்படுத்த வைத்திருப்பதும் -

துடிப்பும் துள்ளலும் அட்டகாசப் பேச்சுமாக அடுத்தவர் பலவீனத்தைச் சர்வ லகுவாகப் பயன் படுத்திக் கொண்டு, வெற்றி காண விழையும் கல்லூரி மாணவியாக டீன் ஏஜ் மதுபாலாவை அறிமுகப் படுத்தியிருப்பதும் -

இயக்குனரின் ப்ளஸ் பாயிண்டுகள் என்றால்,

மிதக்க வைக்கும் இசையை அளித்துள்ள இளைஞர் மரகதமணியைப் புதிய இசையமைப்பாளராக அறிமுகம் செய்திருப்பது தயாரிப்பாளரின் ப்ளஸ் பாயிண்ட்.

சின்னச் சின்ன நிகழ்ச்சிகள். அவற்றில் ஒரு தேர்ந்த பொற்கொல்லரின் கை வண்ணத்துடன் செய்யப்பட்டுள்ள சின்னச் சின்ன நகாசுகள்.

அதுதான் கே. பாலசந்தர்.

- சி. ஆர். கே.

பிறந்த நாள் புடைவை

புவனா முதலில் புடைவையின் வர்ணத்தைப் பார்க்கவில்லை. மருதாணி கலரில் சின்னச் சின்ன சிவப்புப் பூக்களுடன் அழகாக இருந்தது. பச்சையின் அத்தனை வகை ரகமும் அவளுக்குப் பிடிக்கும். பாசிப் பச்சை, கிளிப் பச்சை, ராமர் பச்சை, தளிர்ப் பச்சை, இலைப் பச்சை. குறிப்பாக இந்த மருதாணிப் பச்சை. தொட்டால் துவண்டு விழும் கொடியைப் போன்ற மென்மை. இவ்வளவு மென்மையாக அவளிடம் ஒரு புடைவை கூட இல்லை. அம்மா அத்தனை கஷ்டத்திலும் வீட்டிலிருக்கும் மூன்று பெண்களுக்கும் சேர்த்து சீட்டுப் போடுவாள். பத்துப் பத்து ரூபாயாக அவள் முப்பது ரூபாய்க்கு அல்லாடும் பொழுது, பரிதாபமாக இருக்கும். நூற்றி இருபது ரூபாய்ப் புடைவையில் நேர்த்தியும் இருக்காது. கெட்டித் துணியில் காடி வண்ணமாகவே புடைவை அமையும். மிட்டாய் ரோஸ்; தீப் பிழம்பு ஆரஞ்சு; அடிக்க வரும் ஊதா. இந்த மாதிரிதான் அமையும். இரண்டு மாதத்தில் நிறம் வெளுத்து விடும். நான்கு மாதத்தில் ஓரம் சுருண்டு கொள்ளும். ஒவ்வொரு வருஷமும் இந்த முறையாவது நல்ல புடைவை வாங்க வேண்டும் என்று வரும். அம்மாவால் முப்பது ரூபாய்க்கு மேல் சேர்க்க முடியவில்லை.

புவனா விலையைப் பார்த்தாள். முந்நூற்றி முப்பது என்று கார்டு தொங்கியது.

''என்ன சுதாகர் இது?''

''புடைவை.''

''எதுக்கு?''

''உன் பிறந்த நாளுக்கு.''

''என் பிறந்த நாள் எனக்கு நினைவில்லை.''

''எனக்கு நினைவிருக்கு. உன் அப்ளிகேஷன் மூலமா.''

''அறிவு வேணாம் உங்களுக்கு?''

கிடடத்தட்ட இந்தக் கேள்வியுடன் சுதாகர் கிளம்பி விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். புவனாவின் கையிலிருந்த புடைவையைப் பிடுங்கி எறிந்தான். அது கடற்கரை மணலில் குவியலாக விழுந்தது.

''உன்னை லவ் பண்றேன் பாரு, கண்டிப்பா எனக்கு அறிவு கிடையாது.'' சுதாகர் மணலில் கிடந்த சைக்கிளை நிமிர்த்தினான். வேஷ்டியில் ஒட்டிக் கொண்டிருந்த மணலை உதறினான்.

''கோச்சுட்டுப் போனா போங்க சுதாகர். என் வீட்டு நிலையைச் சொல்லி எல்லாரிடமும் என்னால் பிச்சை எடுக்க முடியாது.''

''எல்லார் மாதிரியும்தான் நானுமா?''

''அதுதான் வருத்தம். என்னைத் தெரியும். எங்க வீட்டைப் பத்தித் தெரியும். நாலு பொண்ணுங்க எங்கம்மாவுக்கு. அப்பன் சரியில்லை. அக்கா மாசா மாசம் கொண்டு வரும் அறுநூறு ரூபாயிலும், எனக்கு உங்க இன்ஸ்டிட்யூட் கொடுக்கும் முந்நூறு ரூபாயிலும்தான் வீட்டில் இருக்கும் ஏழு பேர் வயித்தைக் க ழு வ ணு ம். வாடகைக்குக் கொடுப்பமா? தங்கச்சி, தம்பிங்க படிப்புச் செலவுக்குக் கொடுப்பமா? பாலுக்குக் கொடுப்பமா? மாச சாமானுக்குக் கொடுப்பமா? எதுக்குன்னு ஆவும் தொள்ளாயிரம் ரூபாய்? இங்கே, அங்கேன்னு ஊரு பூராக் கடன். இந்த லட்சணத்தில் முந்நூறு ரூபாய்ப் புடைவையைச் சுத்திட்டுப் போயி நின்னா நல்லாவா இருக்கும்? நெருப்பை அள்ளிச் சுத்திட்டாப்பல இருக்காது? இந்தப் புடைவை என்னை என் கூடப் பொறந்ததுங்ககிட்டேயிருந்து ஒதுக்கி வெச்சிடுங்க. வேண்டாம்.''

புவனா தான் அழக் கூடாது என்னும் பிடிவாதம் தளர, முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக் கொண்டு, கேவ ஆரம்பித்தாள்.

சுதாகர் மீண்டும் சைக்கிளைக் கீழே போட்டு விட்டு அவளருகில் வந்தான்.

''தா புவனா! அழாதே! உனக்கு மருதாணிக் கலர் பிடிக்குமேன்னுதான் புடைவை வாங்கினேன். புடைவை வாங்கறப்போ எனக்கு உன் ஞாபகம்தான் வந்தது. உன் வீட்டு ஞாபகம் வரலை.''

''வரணும் சுதாகர், கண்டிப்பா ஞாபகம் வரணும். என்னைக் காதலிப்பது பெரிசில்லை. என் வீ ட் டு மனுஷங்களையும்

சத்தியப்பிரியன்

நேசிக்கணும். தனி மனிதப் போற்றுதலாய்க் காதல் மாறிடக் கூடாது. சுற்றம் தழுவுதல் இருந்தாத்தான் அது நிஜக் காதல்.''

''அப்பொ இந்தப் புடைவை வேணுமா, வேண்டாமா?''

''எனக்கு இந்தப் புடைவையும் வேணும், என் வீட்டு மனுஷாளும் வேணும்.''

''நான் வேண்டாமா?''

''நான் புடைவைன்னது உங்களை - உங்க காதலை.''

'தன்யனானேன் ஸ்வாமி' கருடாழ்வார் மாதிரி காலை ஊன்றிக் கொண்டு கூப்பிய படி கரங்களைத் தலைக்கு மேல் குவித்து நடித்துக் காட்ட, புவனா வாய் விட்டுச் சிரித்தாள்.

''ஒண்ணு புடைவை. இல்லாட்டி உன் வீடு. புடைவை வேணான்னாக் கொடுத்துடு. ரெண்டு நாள் அவமானமா இருக்கும். மொத மொதல்லா நாம காதலிக்கிற பொண்ணுக்குப் புடைவை எடுத்துக் கொடுத்தாச் சனியன் மூஞ்சில திருப்பி அடிச்சிடுச்சு பாருன்னு வெறுப்பா இருக்கும். அப்புறம் சரியாப் போய்டும்.''

''ஒண்ணு பண்ணலாம். புடைவையை என் வீட்டுக்கு எடுத்துட்டுப் போறேன். என் பெட்டிக்கு அடியில் ஒளிச்சு வெச்சிருக்கேன். நமக்குன்னு கல்யாணம் பண்ணிக்க ஒரு காலம் வராமலா போயிடும்? அப்பக் கட்டிக்கறேன்.''

''நாப்பது வயசுக்கப்புறம் எனக்கெதுக்கு ஷிஃபான் புடைவைன்னு கேக்க மாட்டியா?''

''இந்தக் கிண்டல் தான் வேணாங்கறது.''

''அப்ப இந்தப் புடைவைக்கு ஒரு பதில் சொல்லு.''

''ஏன் சுதாகர், என் குடும்பத்தை ஒரு மாதிரி பொருளாதாரப் பிடியிலிருந்து தளர்த்திக் கொண்டு வர இன்னும் பத்துப் பதினஞ்சு வருஷமானாக் கூட எனக்காக நீங்க வெயிட் பண்ணுவீங்களா?''

''பைத்தியம்! அப்படியெல்லாம் ஆகாது.''

''ஆயிடுச்சுன்னா?''

''கண்டிப்பா வெயிட் பண்றேன். போதுமா?''

புவனா அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள். தன்னிச்சையாக அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது.





வந்தவர் : "பையன் வரலாறு புத்தகத்தைச் சாமி படத்துக்கு முன்னால் வச்சு ஏன் கும்பிடறான்?"

பையனின் தந்தை: "வேறொன்றுமில்லை; வரலாறு படைக்கிறானாம்; அவ்வளவுதான்."

- பி. கே. பாலசுப்பிரமணியன்.

"ஏய்! புவனா! என்ன இது?"

புவனா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ச்சீ! நான் ஒரு பைத்தியம். வந்தமா ரெண்டு வார்த்தை சிரிச்சுப் பேசினமான்னு இடையாது. எப்ப உங்களைப் பார்த்தாலும் என் வீட்டைப் பத்தி ஒரு பஞ்சப் பாட்டுப் பாடாம விடறதில்லை."

"நான் நேசிப்பது உன்னை மட்டுமில்லை புவனா! உன் உணர்வுகளை; உன் எண்ணங்களை; உன் மனசை."

புவனா புடைவையை மணலிலிருந்து எடுத்தாள். மணல் போக உதறினாள். சுருட்டிக் காகித உறைக்குள் வைத்தாள்.

"என்ன பண்ணப் போறே இந்தப் புடைவையை?"

"என் பிறந்த நாள் என்னிக்கு?"

"இன்னும் நாலு நாள் கழிச்சு. வியாழக் கிழமை."

"நான் இன்ஸ்டிட்யூட்டுக்கு இந்தப் புடைவையை எடுத்துட்டு வர்றேன். டைனிங் ரூமிக்குள்ளே போய்ப் புடைவையை மாத்திக்கறேன். கோவிலுக்குப் போய்ட்டு இன்ஸ்டிட்யூட்டில் புதுப் புடைவையை உருவிட்டுப் பழசு கட்டிட்டு வீட்டுக்கு கிளம்பிடுவேன், சரியா?"

"பொம்பளைங்க பயங்கரமான ஆளுங்கப்பா."

"அது தெரிஞ்சுக்கிட்டுக் காதலிக்கற ஆம்பளைங்களை என்னன்னு சொல்றது?"

கண்ணகி சிலை வரை தொடர்ந்து சுதாகர் வர, புவனா அவனிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

இந்த நிலை என்று மாறும் என்று புரியவில்லை. மூத்தவள் கோகிலாவுக்கு வயது இருபத்தைந்து ஆகிறது. ஐந்து வருஷமாக சூப்பர் மார்க்கெட் ஒன்றில் விற்பனைப் பெண்ணாக வேலைக்குப் போய் வருகிறாள். இரவு எட்டரை மணிக்கு வேலை முடித்து வரும் அவளுடைய பன்னிரெண்டு மணி நேர வேலைக்கு அறுநூறு ரூபாய் சம்பளம். அதன் பிறகு இருபத்து மூன்று வயதில் புவனா. +2, ஷார்ட் ஹாண்ட்; டைப்பிங் முடித்து விட்டு நல்ல வேலைக்கு அலைகிறாள். இவள் படித்த இன்ஸ்டிட்யூட்டில் இன்ஸ்ட்ரக்டராக வேலை. சுதாகர்தான் பதினைந்து டைப் ரைட்டர்களை வாங்கிப் போட்டு இன்ஸ்டிட்யூட் நடத்துகிறான். சம்பளம் மாதம் முந்நூறு ரூபாய்; போனஸ் சுதாகரின் காதல். மூன்றாவது காவேரி. பி. எஸ்ஸி. கடைசி வருஷம். அடுத்தவன் பாலமுருகன். பாலிடெக்னிக் படிக்கிறான். டிப்ளமா முடித்து விட்டு பார்ட்-டைம் என்ஜினியர் ஆகி விடுவேன் என்கிறான். கடைசிப் பெண் சாந்தி. ஒன்பதாவது படிக்கிறாள்.

மாறும். இந்த நிலை கண்டிப்பாக மாறும். நாளை எனக்கே ஒரு நல்ல அரசு உத்தியோகம் கிடைக்கலாம். பாலமுருகன் என்ஜினியரிங் முடித்து விட்டுக் கை நிறையச் சம்பாதிக்கலாம்.

'கலங்காதிரு மனமே!' என்று கண்ணதாசனை ஜெபித்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள்.

உள்ளே கூடத்தில் கோலம் போடப்பட்டிருந்தது. கோலத்தின் மீது பலகை. பலகையின் மீது சாந்தி தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். அழுததற்கு அடையாளமாய்க் கண்கள் வீங்கியிருந்தன.

"என்னம்மா?" சந்தேகத்துடன் அம்மாவை விசாரித்தாள்.

"சாந்தி பெரிசாயிட்டா."

"அதை ஏன் மூஞ்சியைத் தொங்கப் போட்டுட்டுச் சொல்றே?" என்றவள் சாந்தி அருகில் போனாள். அவள் முகம் தொட்டு நிமிர்த்தினாள்.

"ஏய் சாந்தி! தா என்னைப் பாரு. நீ படிக்கிற பொண்ணு. இது பயப்படற விஷயமில்லை. சிரி."

"அவ எங்க சிரிப்பா? கையில் காசில்லாதப்ப பெரிசாயி நிக்கறயேன்னு அம்மா சொல்லிட்டே இருக்கு..." என்றாள் காவேரி.

"காசில்லைன்னா பெரிசாவக் கூடாதா?" என்றாள் புவனா.

"நல்லாக் கேளு" என்றாள் கோகிலா.

புவனா பெரியவள் ஆனதற்குத் தாய் மாமா சாட்டின் பாவாடையும், ஃபுல் வாயில் தாவணியும் வாங்கிக் கொடுத்தார். அந்தச் சமயம் அப்பாவுக்கு அத்தனை வருமானமும் இல்லை. புவனா ரொம்ப நாட்கள் வரை அந்தத் தாவணியையும், பாவாடை

யையும் வைத்திருந்தாள். இப்பொழுது ரெண்டு அக்காமார்கள் சம்பாதித்தும் புதுசுக்கு வழியில்லை பாரேன் என்று குழந்தை நினைத்து விட்டால்?

''காவேரியோட பழைய தாவணி, பாவாடையைப் போட்டுக்கட்டும்,'' என்றாள் அம்மா.

''பாவாடை ஜாக்கெட் வேண்ணாப் பழசா இருக்கட்டும். தாவணி மட்டுமாவது புதுசு வேணும்'' என்றாள் கோகிலா.

மற்ற சகோதரிகளும் அதைத்தான் வலியுறுத்தினார்கள்.

''நல்ல தாவணிக்கு நூறு ரூபாய் ஆவும்'' என்று அம்மா சீறினாள்.

''ஆவட்டும்.''

''வீட்டில் பணம் காய்ச்சிமரமா இருக்கு?''

புவனா தோள் பையிலிருந்து உறையை எடுத்தாள். புடைவையை வெளியில் எடுத்தாள். ஷிஃபான் புடைவை. அவளுக்குப் பிடித்த மருதாணி நிறப் புடைவை.

''ஏதுடி புடைவை இது?'' கோகிலாவும், காவேரியும் கேட்டார்கள்.

''புடைவைக் கடையில் சீட்டு கட்டியிருந்தேன்.'' பொய் சொல்லி விட்டு புடைவையைப் பிரித்து ''கோகிலா இந்தப் பக்கம் புடி. காவேரி நீ அந்தப் பக்கம் புடி.''

புவனா கத்தரிக்கோலை எடுத்துக் கொண்டு வந்தாள். ஒரு நிமிஷம் வியாழக்கிழமையும், சுதாகரும் நினைவில் வந்தனர். சுதாகர் மிகவும் ஏமாந்து போவான். ஏமாற்றம் கோபமாக மாறலாம். தன் முதல் பரிசு நிராகரிக்கப்பட்டதால் ஏற்படும் கோபம். என்ன செய்வது? ஒரு நிமிட சலனம்தான். பிறகு சர்ரென்று புடைவையைக் கிழித்தாள். புடைவையின் ஜாக்கெட் பகுதியை வெட்டி, காவேரி, சாந்திக்கு ஜாக்கெட் தைக்க டைலரிடம் எடுத்துக் கொண்டு போனாள். கோகிலா விலைகுறைவாக சாந்திக்கு சீட்டித் துணியில் பாவாடை எடுத்துக் கொண்டு வந்தாள். நான்காம் நாள் சாந்தியை மஞ்சள் நீராட்டி, புது ஆடைகளை உடுத்திக் கொள்ளச் சொன்னார்கள். தாவணி ரொம்ப நல்லா இருக்குக்கா என்று சாந்தி அதன் வழுவழுப்பைத் தொட்டுத் தொட்டு மகிழ்ந்து போனாள்.

நான்கு நாட்கள் கழித்து இன்ஸ்டிட்யூட் போகவே பயமாக இருந்தது புவனாவுக்கு. வேறு வழியில்லாமல் கிளம்பினாள். சுதாகரைப் பார்க்கச் சங்கடமாக இருந்தது. அவன் கறுப்பு நிற முழுக்கை சட்டை, அவளுக்குப் பிடித்த க்ரீம் கலர் பேண்ட்டுடன் தயார் நிலையில் இருந்தான். ஷேவ் பண்ணிக் கொண்டிருந்தான். பவுடர் பூசிக் கொண்டிருந்தான். புடைவை இல்லை என்பது தெரிந்தால் வள் என்று விழுவானா? உனக்குப் பெரிய குட்பை புவனா என்று சொல்லி விடுவானா?

''சுதாகர்! கொஞ்சம் உள்ளே வாங்க....''

சுதாகர் அவள் பின்னால் டைனிங் ரூமுக்குள் போனான்.

''என்ன புவனா?'' ஏன் மூணு நாளா வரலை?''

''என் கடைசித் தங்கை பெரிய பொண்ணாயிட்டா.''

''குட்! எனக்கு ஸ்வீட் எங்கே?''

புவனா தலையைக் குனிந்து கொண்டாள்.

''தாவணி வாங்கக் கூட காசில்லை.''

''என்னிடம் வந்து கேட்டிருக்க வேண்டியதுதானே?''

புவனா பதில் பேசவில்லை.

''தன்மானம் தடுக்கும். ஏற்கெனவே முந்நூறு ரூபாய் வரைக்கும் கடன் வாங்கியாச்சே... இவனிடம் திருப்பியும் போய் நிற்கணுமேங்கற தன்மானம். அதனால வரலை. மக்கு! நான்தான் புதுப் புடைவை எடுத்துக் கொடுத்து விட்டேன் இல்லே? அதைக் கிழிச்சுத் தாவணியாக்க எவ்வளவு நேரம் ஆகும்?''

புவனாவின் உடம்பு ஆடத் தொடங்கியது. புரிந்து கொள்ளுதல் என்பது ஏதோ ஒரு கணத்தில்தான் காதலில் நிகழும். அதுவே அந்தக் காதலின் இறுக்க முடிச்சாகும்.

''இண்டர்வியூ நடக்கும் போது, எம். டி. க்கு திடீர்னு உடம்பு சரியில்லேன்னு இண்டர்வியூவை மறு நாளுக்கு ஒத்தி வச்சுட்டாங்களாமே!''

''ஆமாம். அவர் எதிர்பார்த்த ஆள் அன்றைக்கு இண்டர்வியூவிற்கு வரலேங்கறது அப்பத்தான் அவருக்குத் தெரிய வந்தது!''

- விஜயம்.





நேற்றுவரை நந்தவனம்

24

வருகிற வெள்ளிக் கிழமை முகூர்த்தம். இன்னும் சரியாய் ஏழே நாட்கள்.

உற்சாக மி கு தி யி ல் ராஜேஸ்வரி, எல்லாச் சடங்குகளையும் செய்ய வேண்டும் என்று பறந்தாலும், குமரன், தாயின் மனம் புண்படாதவாறு அடக்கிக் கொண்டுதான் இருந்தான்.

''அம்மா, நலங்கு, ஊஞ்சல், மாலையும் கழுத்துமா சுவாமிமலைக்குப் போறது... எல்லாத்தையும் செய்யறோம். ஆனா, கூட்டம் அதிகமாக் கூட்டாதே. ரொம்ப நெருக்க மானவங்களும், உறவுக்காரங்களும் போதும். கல்யாண மண்டபம் கச்சேரி இதெல்லாம் வேண்டாம்....''

பட்டுப் புடைவைகளை வா ங் கி க் கொண்டு திரும்பும் போதே அவன் சொல்லி விட்டான்.

ராஜேஸ்வரி, மீராவின் க ர த் தை க் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

''அம்மாடி... உன் வீட்டு மனுஷங்க, சினேகிதிங்க யார் யாருக்குப் பத்திரிகை அனுப்பணுமோ - ஒரு லிஸ்ட் போடு...''

''சரி...''

''புடைவைக்கு மாட்ச்சா வாங்கின ரவிக்கைத் துணிங்களை எல்லாம் சீக்கிரமாத் தைக்கக் கொடு. ஏண்டா குமரு, நம்ம ஊருல ஃபாஷனா ர வி க் கை தைக்கிறவன் யாருடா?''

''ம்... என்னைப் போய்க் கேளு...''

''இவன் ஒரு சாமியார். அப்பா அப்படியே மதனகாமராஜன். பிள்ளை - ரிஷிய சிருங்கன்.. இதுவே, உங்க அப்பான்னா, 'டக்'குனு சொல்லுவாரு.''

காரே சிரிப்பில் குலுங்கியது. புரிந்ததோ. இல்லையோ - இளவரசுவும் சேர்ந்து சிரித்தான்.

''மீரா... பிடிக்கறதோ பிடிக்கலையோ. என் நகைங்களை எல்லாம் அன்னிக்கு நீ போட்டுட்டுத்தான் ஆகணும். மாட்டேன்னு சொல்லிடாதே. அப்படியே ந கை யு ம், நட்டுமா - கூறைச் சேலையோட நிறைஞ்ச மனுஷியா - என் மகன் பக்கத்துல நின்னு ஒரு போட்டோ பிடிக்கணும். அதைப் பெரிசா ஃப்ரேம் போட்டு, ஹால்லே மாட்டணும். ஆமா.....''

மீராவுக்குக் கண்கள் கலங்கின. துக்கம் நெஞ்சுக்குள் முள் பந்தாய் இம்சித்தது.

'இப்படி பாசத்தைக் கொட்டுகிற மனுஷிக்கு, நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்...'

வீட்டில் கூட, குமரனை தனியே சந்தித்துப் பேசிய போது சொன்னாள்:

''உங்க அம்மா, நம்ம கல்யாணத்தைச் சுத்தி, ஏகப்பட்ட கனவுகளை வளர்த்திட்டிருக்காப்பல இருக்கு...''

''ஆமா. அவளுக்கு இந்த உலகத்துல இருக்கற ஒரே லட்சியம், பிடிப்பு - நான் தான். தினமும் செத்துப் போன புருஷனையும், மருமகளையும் நினைக்க அழுதிட்டிருந்தவளுக்கு - இது எதிர்பாராத திருப்பம்...''

மீரா புன்னகை செய்தாள்.

அவன், அவளுக்கு மட்டும் கேட்கும் தொனியில் சொன்னான்:

''எங்கம்மாவுக்கு இன்னமும் பழைய நாளைய ஆசையெல்லாம் உண்டு மீரா.... நிறைய நகை, பட்டுப் புடைவை, மஞ்சள் பூசிக் குளியல், நெத்தி நிறைஞ்ச குங்குமம், செவ்வாயும் வெள்ளியும் தவறாம எண்ணெய் ஸ்நானம்... இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்கு இதையெல்லாம் ஏத்துக்கக் கஷ்டமாத்தான் இருக்கும். கொஞ்ச நாளைக்குச் சகிக்கக்க... மெள்ள மெள்ள அம்மாவோட சுபாவத்தை மாத்திடலாம்...''

மீரா புன்னகையுடன் தலையசைத்தாள்.

அனுராதா ரமணன்

''இத்தனை வயசுக்கு மேல உங்கம்மா எதுக்காகத்தன்னைமாத்திக்கணும்? அவங்க இப்படியே இருக்கட்டும். அதான் எனக்குப் பிடிச்சிருக்கு. இன்னும் பார்க்கப் போனா - உங்களை நான் கல்யாணம் செஞ்சுக்கச் சம் மதிச்சதே, உங்க அம்மாவை எனக்கு ரொம் பப் பிடிச்சிருக்கறதாலேதான்....''

அவள், கண் சிமிட்டிச் சிரிக்க, குமரன் குறும்பாய் அவளைப் பார்த்தான்.

''ஓஹோ... இத்தனை நாள் இது எனக் குத் தெரியாமல் போச்சே....'' ''பேசாம, எங்க அம்மா கூடவே இருதாயே.... நானும் இப்படியே இருக்கேன்னு சொல்லி விருப்பேனே. மறுபடியும் கல்யாணம்; பெண்டாட்டி; அவளோட கோபதாபம்; பெருமூச்சு; அழுகை; சண்டை; சமாதானம்; தோப்புக்கரணம்.. எல்லாம் வேண்டாம் பாரு.....''

''கரெக்ட். நானும் அப்படித்தான் நினைச்சேன். ஆனா ஊர் உலகம் எல்லாம் இருக்கு பாருங்க... உங்களை மாதிரி ரெண்டுங்கெட்டான் இருக்கற வீட்டுல, என்னை மாதிரி சின்னப் பொண்ணு தங்கிவிருந்தா - வாயில வந்தபடி பேசுமே!''

''நான் ரெண்டுங்கெட்டானா?''

குமரன் பொய்க் கோபம் காட்டி, அவளை அடிப்பதற்காகக் கையை ஓங்குவது போல பாவனை செய்ய - மீரா, 'சட்'டென அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

இத்தனை நாட்களும் சூழ்ந்திருந்த குழப்பமெல்லாம் விலகி, மனசு குளிர்ச்சியாக இருந்தது அவளுக்கு.

இந்த வீடு.... இதில் தினமும் அவளுக்காகக் காத்திருக்கும் வேலைகள், ராஜேஸ்வரியின் அன்பான அரவணைப்பு.....

ராஜேஸ்வரியின் நினைவு வந்ததுமே - மீரா, அவள் இரவு படுக்கப் போகும் முன் சாப்பிடும் மாத்திரைகளை எடுத்துக் கொண்டு போனாள்.

இரண்டு நாட்களாய் அளவுக்கு மீறிய அலைச்சலில் ராஜேஸ்வரி கொஞ்சம் வாடினாற் போலக் காணப்பட்டாள்.

ரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதாக டாக்டர் கூறியிருந்தார்.



''நீங்க அளவுக்கு மீறி உணர்ச்சி வசப் படறீங்க போல இருக்கு. கொஞ்சம் நிதானப் படுத்திக்கணும். ராத்திரி ஒம்பது மணிக் கெல்லாம் படுக்கப் போயிடணும்....''

மீராவிடம், டாக்டர் சில மாத்திரை களைக் கொடுத்து வேளை தவறாமல் கொடுக்கச் சொல்லியிருந்தார். போகிற போக்கில் அந்த அம்மாளை ஓர் அதட்டல் போட்டுவிட்டுச் சென்றார்.

''இத்தனை நாளும் உங்களுக்கு பிளட் பிரஷர் ஏறியிருந்ததுன்னா அதுக்குக் கார ணம் இருக்கு. இப்ப என்னம்மா? அதான் கல்யாணத்துக்கு முன்னாலேயே - மரு மகளை வீட்டோட கொண்டு வந்து வச்சுட் டீங்களே....''



வங்கி மானேஜர் : ''பசு மாட்டுக்கு லோன் வாங்க வந்தப்ப 'தினமும் ஒழுங்காக் கட்டறேன்'னு சொல் லிட்டு, காலணாக் கட்டாமல் வெச்சுட் டீங்களே...?''

''நான் கட்டறேன்னு சொன்னது மாட்டைத்தான் எசமான்...!''

- சீர்காழி வி. ரேவதி.

மீரா, ராஜேஸ்வரியின் அறைக்குள் நுழைந்த போது, அவள், தனது இரும்பு பீரோவைத் திறந்து வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நகைப் பெட்டியாய் எடுத்து வெளியில் கட்டிலின் மீது கடை பரப்பிக் கொண்டிருந்தாள்.

''என்ன நீங்க... இன்னும் படுக் கலையா.... சரியாப்போச்சு... இதையெல் லாம் சரிபார்க்க - இப்பத்தான் நேரம் பார்த் தீங்களா?''

ராஜேஸ்வரி புன்னகை செய்தாள்.

''இந்தா... இந்த நகையெல்லாத்தையும் எடுத்துப் பாரு... வளையல்களை மட்டும் இன்னொரு தரம் பாலீஷ் போடலாமான்னு பார்க்கறேன்....''

''ஆகட்டும். நீங்க இன்னும் மாத்தி ரையே போடல்லே. ஒம்பது மணிக்கு மாத்திரை போட்டுட்டு, அப்புறம் ராத்திரி ரெண்டு மணி வரைக்கும் தூக்கம் வராம தவிப்பீங்க....''

ராஜேஸ்வரி, ஓர் ஆசிரியைக்குக் கீழ்ப் படியும் ஆசிரியை போல, அவள் தந்த மாத்திரைகளை வாங்கி, வாயில் போட்டுக் கொண்டாள்.

மீரா, அவள் முகத்தையே உற்றுப் பார்த் தாள்.

''அழுதீங்களா என்ன?''

அவள் திடுக்கிட்டு, அவசரமாய்ப் பதில ளித்தாள்.

''இல்லையே....''

''பின்னே... கண் ரெண்டும் சிவந் திருக்கு... முகமெல்லாம் உப்பியிருக்கு....''

ராஜேஸ்வரி, பெருமூச்சு விட்டாள்.

''என்னதான் பொல்லாத மனுசரா இருந்தாலும் இது மாதிரி சமயங்களிலே அவர் நினைப்பு வராம இருக்குமா மீரா? அதோடு தெய்வானை நினைச்சிட்டேன். பாவி மக. இருந்தவரைக்கும் எதையுமே அனுபவிக்கலே.''

மீரா, அவள் தோளைத் தொட்டுத் தன் பக்கம் திருப்பி அணைத்துக் கொண்டாள்.

''எதையாவது நினைச்சு, மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க....''

''இல்லேம்மா....''

''என்ன இல்லே? நீங்க இப்படி இருந்தா, நானும் எதையாவது நினைச்சிட்டு மூலையில போய் உட்கார்ந்திடுவேன். சரியா....''

அவள், மிரட்டுகிற பாவனையில் கண்டு விரலை உயர்த்த, ராஜேஸ்வரி பதறிப் போய் விட்டாள்.

''அம்மாடீ... அதெல்லாம் வேண் டாம்.''

''வேண்டாம்னா படுங்க... அட, இந்த வளையல் ஜோரா இருக்கே....''

மீரா, ராஜேஸ்வரியின் கவனத்தைத் திருப்பும் நோக்கத்தில் ஏதோ ஒரு வெல் வெட் பெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு, போலியாய் வியக்க -

ராஜேஸ்வரி, அத்தனை பெட்டிகளை யும் ஒட்டு மொத்தமாய்த் தூக்கி, அவள் கையிலேயே வைத்தாள்.

''நிதானமா ஒவ்வொண்ணாப் போட் டுப் பாரு....''

மீராவின் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறை....

அவள், நகர்ந்ததும் மெத்தையில் அப்படியே சுருண்டு படுத்தாள் ராஜேஸ்வரி.

இரண்டு நாட்களாய் ரத்தக் கொதிப்பு

ஏறித்தான் இருக்கிறது. அதற்குக் காரணம் அவளறியாததல்ல.

புடைவைக் கடைக்குப் போய் வந்த அன்றிரவே ஆட்டோ டிரைவர் ஞானம், வாசலிலேயே இவளுக்காகக் காத்திருந்து, அந்தக் கடித உறையை ரகசியமாய் எடுத்துக் கொடுத்தான்.

''என்ன ஞானம்?''

''அந்தப் பொண்ணு நி ர் ம ல ா கொடுக்கச் சொல்லி, கொடுத்திட்டுப் போச்சுங்க....''

''வீட்டுக்கா வந்தா?''

''ஆமா....''

அந்தக் கணத்தில் கடிதத்தை வாங்கி மறைத்து விட்டு, சகஜமாய் வளைய வர வேண்டிய சந்தர்ப்பம்.

தனிமையில், பரபரப்புடன் பிரித்துப் படித்தாள்.

''மதிப்பிற்குரிய ராஜேஸ்வரி அம்மாளுக்கு,

வணக்கம். தங்களின் உத்தரவை மீறி, உங்களுடன் தொடர்பு கொள்ளவோ, கடிதமெழுதவோ முயற்சி செய்ய மாட்டேன் என்று நான் அளித்துள்ள சத்தியத்தை முதலும், கடைசியுமாய் நான் மீற வேண்டியிருக்கிறது. நிர்ப்பந்தம். வேறு வழியில்லை... என்னை மன்னித்து விடுங்கள்.

நிற்க - நம்மிருவருக்கும் ஒரேயொரு விரோதிதான் இருந்தார் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போதோ இன்னொருவர் கிளம்பியிருக்கிறார், ரவி என்கிற பெயரிலே. இக்கடிதத்தைப் படித்து விட்டுத் தயவு செய்து கிழித்துப் போடுங்கள். இல்லையெனில் - உங்கள் நிம்மதி பறிபோய் விடும்.....

அம்மா, நாமிருவரும் சே ர் ந் து செய்த.....''

இதற்கு மேல் இளவரசு படிக்க விடவில்லை.... ''பாட்டீ'' என்று ஓடிவந்து அவள் தலைப்பைப் பிடித்துக் கொண்டு ஆடினான்.

தாற்காலிகப் பாதுகாப்பாகக் கடிதத்தை - எட்டாய் மடித்து பீரோவில்தான் வைத்தாள்.

இப்பொழுது வைத்த இடம் நினைவுக்கு வரவில்லை.

பீரோவையே தலை குப்புறக் கவிழ்த்தாயிற்று...

கடிதம் எங்கே போயிற்று....

இரண்டு நாட்களாக இதுவே புழுக்குடைச்சலாய்... யோசிக்க யோசிக்கத் தலையை வலித்தது...

''இந்தப் பொண்ணு எதுக்காக இதையெல்லாம் லெட்டர்லே எழுதி வச்சது.''

ராஜேஸ்வரி தவியாய்த் த வி த் து க் கொண்டிருந்த அதே நேரத்தில் -

மீரா, நகைப் பெட்டிகளை மெள்ள அடுக்கிவைக்க - அந்தக் கடிதம் - எட்டாக மடிக்கப்பட்ட கடிதம் அவள் காலடியில் விழுந்தது.

அவள் குனிந்து எடுத்துப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

(அடுத்த இதழில் நிறைவுறும்)



நிருபர் : ''உங்க படம் அலுமினியம் ஜூபிலி கொண்டாடும்...''

தயாரிப்பாளர் : ''என்ன சொல்றீங்க?''

நிருபர் : ''ஒரு வாரம் ஓடும்னு சொல்ல வந்தேன்...''

- வி. கி. குமார்.

'' 'தாயின் தந்தை' என்று படம் எடுத்து ரகப்பட்ட நஷ்டமாயிடுச்சு அவருக்கு!''

''அப்புறம் எப்படிப் பணக்காரரானார்?''

''அதே படத்தை மீண்டும் 'ஆத்தாவின் தாத்தா' என்று பெயர் மாற்றி ரிலீஸ் பண்ணினார்; செம வசூல்!''

- குடந்தை எல். ராம்பிரபு.



அமீனாவின் அவலம்; அன்றாட வியாபாரம்!

பத்ருடீனும் ஸபீராபேகமும் ஆகஸ்ட் 10-ம் தேதி ஹைதராபாத் விமான நிலையத்தில் தங்கள் பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் 'டாடா' காண்பித்துத் திரும்பிய போது, இன்னும் இரண்டு மணி நேரத்தில் ஒரு பெரும் சூறாவளி அடிக்கப் போகிறது என எதிர்பார்க்கவே இல்லை. விமானத்தில் அந்தப் பத்து வயது முஸ்லீம் சிறுமி அமீனா அழுது கொண்டே இருந்தாள். அவளது அருகில் இருந்த அறுபது வயது அராபியன் அவளைச் சமாதானப்படுத்தத் தொடும் பொழுதெல்லாம் அமீனா கூக்குரலிட்டாள்.

விமானப் பணிப்பெண் அம்ருதா அலுவாலியாவுக்கு அமீனாவைப் பார்த்தவுடனேயே ஓர் இரக்க உணர்ச்சி ஏற்பட்டது. அம்ருதா அவளை அழைத்து விசாரித்தாள்.

''என் பெயர் அமீனா. என் தந்தை ஹைதராபாத்தில் ஆட்டோ ஓட்டிப் பிழைப்பவர். ஆகஸ்ட் 8-ம் தேதி இரவு எனக்கும் ஷேக்கிற்கும் கல்யாணம் நடந்தது. அவன் பெயர் கூட எனக்குத் தெரியாது. எந்தவூர் என்பதும் தெரியாது. என் மூத்த சகோதரியை வேண்டாம் என்று சொல்லி, என்னைக் கல்யாணம் செய்து கொண்டான். நான் அவனுடன் போக விரும்பவில்லை..........'' என்று தேம்பியபடியே தனது அழுகைக்கான காரணத்தை அமீனா கூறினாள்.

இந்த பரிதாபக் கதை விமானப் பயணிகளிடமும் இரக்கத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. ஆறாயிரம் ரூபாயை அவள் தந்தைக்குக் கொடுத்து 'மைனர்' அமீனாவை 'விலை'க்கு வாங்கி இருக்கிறான், சவூதி அரேபியன் யாஹ்யா அல்ஸிங் என்பது தெரிந்தவுடன், பாலம் விமான நிலையத்துடன் விமானம் செலுத்தும் குழு தொடர்பு கொண்டு போலீசை வரவழைத்தது.



யாஹ்யா முறைப்படி மணம் நடைபெற்ற நிக்காஹ் நாமா பத்திரத்தைக் காண்பித்தான். அதில் அவன் வயது 32 என இருந்தது. யாஹ்யாவை டெல்லி போலீஸ் கைது செய்தது. அமீனாவை நாரீ நிகேதனில் தங்கச் செய்து, வைத்தியப் பரிசோதனைக்கும் அனுப்பியது. மறுநாள் பத்திரிகைச் செய்தி வந்த போது அமீனா சம்பவம் பிரபலமாகி விட்டது.

சவூதி, குவெய்த், பஹ்ரான், ஓமன் முதலிய வளைகுடா நாடுகளிலிருந்து வயோதிக அராபியர்கள் ஹைதராபாத்திற்கு

◆ அமீனா

◆ கிழமாப்பிள்ளை யாஹ்யா



◆ விமானப் பணிப்பெண் அம்ருதா





◆ அமீனாவின் பெற்றோர்...

விஜயம் செய்து, ஏழை இளம் முஸ்லீம் பெண்களை மணம் செய்து கொண்டு போகிற அவலச் சம்பவங்கள், சாதாரணமாக நடைபெறுகின்றன. இந்தப் பத்து வருடங்களில் சுமார் 8,000 திருமணங்கள் இதுபோல் நடைபெற்றுள்ளனவாம்! பொருளாதார நெருக்கடியால் ஏற்படுபவையே இந்தப் பொருந்தாத் திருமணங்கள். பணம் செலவழிக்கும் ஷேக்கிற்கு உடந்தையாகப் பேராசை மிக்க தலால்களும் (தரகர்கள்) காஜிகளும் கண்களை மூடிக் கொள்ளும் காவற்படையும் இருக்கின்றன.

ஹைதராபாத் ஷவுகத் கன்ஜ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகள் வசிக்கும் பகுதி. 'இம்' என்றால் வகுப்புக் கலவரம் தோன்றும் இடம். தந்தை பத்ருமேன் நாள் முழுவதும் வாடகை ஆட்டோ ஓட்டினால் பெட்ரோல் செலவு, வாடகை போக ரூபாய் முப்பதோ நாற்பதோ மிஞ்சும். ஆறு பெண் குழந்தைகள், இரு பையன்கள், கணவன், மனைவி என்று மொததம் பத்து உயிர்கள் அதில்தான் சாப்பிட வேண்டும். ''குழந்தைகள் நோயுற்றால் அதற்கான மருந்துகளைக் கூட என்னால் முழுசாக வாங்க முடிவதில்லை. எல்லோருக்கும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறைதான் புதிய உடைகள்'' என்னுமளவுக்கு வறுமை.

ஆகஸ்ட் ஏழாம் தேதி வீடு திரும்பிய போது, அவரது மனைவி ஸபீரா பேகம் பர்க்கா மொஹல்லாவிலிருந்து தஹீரா பேகம், யாஹ்யாவுடன் வந்து போன கதையைச் சொன்னாள். தஹீரா தனது மகள் ஷஹீதாவை முன்பே யாஹ்யாவிற்கு மணமுடித்து இருக்கிறாள். முன் மனைவியின் சிபாரிசுக் கடிதத்துடன் யாஹ்யா அமீனாவை மணக்க விரும்பினான்.

''அவளை நாங்கள் 'விற்க'வில்லை. மெஹ்ராவாக ஆறாயிரம் ரூபாய் தரப் பட்டது. லட்ச ரூபாய் என்பது புரளி. அவளுக்கு வயது பதினெட்டு. விமான டிக்கெட்டில் பன்னிரண்டுக்குக் கீழே குறிப்பிட்டால் டிக்கெட்டில் சலுகை கிடைக்கிறது என்பதற்காக வயது பத்து எனச் சொல்லப் பட்டது. ஊரறிய நிக்காஹ் நடைபெற்றது. முஸ்லீம் தனிச் சட்டத்தின்படி பெண் 'வயது'க்கு வந்தால் மணமுடிக்கலாம். அவளுக்கு ஒரு நல்ல வாழ்வு; எனக்கும் சவூதி உத்தியோகம்; அதன் மூலம் நாங்கள் ஏழைமையிலிருந்து விடுபடலாம் என்ற கனவுடன்தான் இந்த நிக்காஹ் நடைபெற்றது. ஏழைகள் என்றால் இளப்பம். எல்லோரும் இந்தச் சம்பவத்தை மிகைப்படுத்துகிறார்கள்!'' என்று அமீனாவின் தந்தை புலம்புகிறார்.

''அமீனா திருமணமாகி இரண்டு நாட்கள் இங்கு இருந்தாள். ஒன்றும் குறை சொல்லவில்லை. தனிமையில் என்னிடம் அழவில்லை. பிடிக்கவில்லை என்று அவள் ஒரு கோடி காண்பித்திருந்தால் கூட வற்புறுத்தி இருக்க மாட்டோம். விமான நிலையத்தில் அவள் கண்ணீர் விட்டது பிரிவுத் துயர் என எண்ணினேன்...'' என்று தாய் ஸபீரா அரற்றுகிறாள்.

டெல்லியிலிருந்து செய்தி வந்த பிறகு தங்களுடைய கைக் குழந்தையுடன் ஸபீரா-பத்ருமேன் தம்பதி தலைநகர் சென்று அமீனாவைச் சந்தித்தனர். ''டெல்லி செல்வதற்குக் கூட என்னிடம் பணம் இல்லை'' என்கிறார் தந்தை பரிதாபகரமாக!

இந்தப் பொருந்தாத் திருமணங்கள் எப்படி முடிச்சிடப்படுகின்றன? அரபு நாடுகளிலிருந்து இந்திய முஸ்லீம் பெண்களை மணந்து கொள்ள விரும்பும் ஷேக்குகள் ஹைதராபாத் வந்து இறங்குகின்றனர்.

சவூதிக்காரர்கள் இந்தியப் பெண்ணை மணம் புரிய அந்நாட்டு அரசின் ஒப்பம் வேண்டும். அது சுலபமாகக் கிடைத்து விடுகிறது. பணவெறி பிடித்த தரகர்கள் இவர்களுக்காகவே அலைகிறார்கள். இதற்கெனவே ஹைதராபாத் பழைய நகரில், சில லாட்ஜுகள் உள்ளன. அவற்றில் படாடோபமான சோபன அறைகள் உள்ளன. அங்கு

குமரி மாவட்டத்தில் 1 முதல் 10 வரை எண்களைக் குறிக்கும் ஊர்ப் பெயர்கள்: ஒத்தக்கடை, இருவேலி, முப்பந்தல், நாலுவிளை, அஞ்சுகிராமம், ஆறுகாணி, ஏழுதேசம், எட்டுமடை, ஒன்பதாம் விளை, பத்துகாணி.

- ரமா ராமநாதன்.

பாதுகாப்புக்கு வலிமையான அடியாட்கள். சவூதி பாஸ் போர்ட்டில் 'உடல் வைத்தியத்திற்கு இந்திய விஜயம்' எனக் குறிப்பிட்டுக் கொண்டு, உண்மையில் 'அவுரத்'திற்காக இங்கே வருகிறார்கள். போலீஸ் துறை 'மாமூலாக' கண்ணை மூடிக் கொண்டு விடுகிறது.

அமீனா நிகழ்ச்சி ஒற்றை மரமல்ல! இளம் வயதுப் பெண்களைக் கிழ அராபியர்கள் 'வாங்கி'ச் செல்வது ஹைதராபாதில் முத்து, வளையல் வியாபாரம் போன்று இன்னொரு பிரபல வியாபாரம்.

நூத் பவுலி என்ற தையல்காரருடைய பெண் ஆயிஷா, சம்ஷீர்கஞ்ஜ் பழ வியாபாரியின் மகள் சல்மா, போலீஸ் கான்ஸ்டபிள் மகள் மெஹ்ருன்னிஸா என்று இந்த வரிசையில் ஏராளமாக இடம்பெறுகின்றனர். கான்ஸ்டபிள், ஒரு ஜப்பானிய வி. ஸி. ஆர், தன் தம்பிக்கு விஸா ஆகியவற்றை நாற்பத்தி ஐந்து வயது மாப்பிள்ளை மூலம் பெற்றுக் கொண்டு, தம் பன்னிரெண்டு வயதுப் பெண்ணைக் கல்யாணப் பரிவர்த்தனை செய்தார். பிப்ரவரியில் தன் வயதான கணவனுடன் சென்ற அச் சிறுமி, அவனது மறைவால் ஜூனில் திரும்பி வந்தாள். அராபியனது மூன்று மனைவிகளும் அவளை அங்கிருந்து விரட்டி விட்டனர்.

1984-ல் அபுதாபியிலிருந்து வந்த ஒரு கிழவன் எட்டு வயது ஹைதராபாத் பெண்ணை அழைத்துக் கொண்டு பம்பாய் சென்றான். அங்கிருந்து ஸ்ரீநகர் செல்லும் போது அந்த விமானம் லாகூர் வழியாக துபாய்க்கு ஹைஜாக் செய்யப்பட்டது. கிழ மணமகன் மாரடைப்பால் மரணமடைந்தான்.

ஹைதராபாத்தில் ஷாலி பண்டாவில் வாழ்ந்த ஷிராஜ், குவெய்த் அமைச்சர் ஒருவருக்கு எட்டாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டாள். ஆடம்பரமான வாழ்க்கை கிடைத்தது. தன் தாயகம் வந்த போது அவள் தனது புக்ககத்து ஷேக் சாம்ராஜ்ய தர்பார் வாழ்க்கையைப் பெருமையாகச் சொன்னதைக் கேட்டு, அவளது தோழி மும்தாஜ் கூட ஓர் அராபியனையே மணந்து கொண்டாள். இதற்குத் தரகர் மூலம் பெற்றோருக்குக் கிடைத்த பணம் எழுபதாயிரம் ரூபாய்!

கடந்த 78லேயே இதுபோல் சென்ற முப்பத்தாறு இந்தியப் பெண்கள் அபுதாபி, சவூதி குவெய்த்திலுள்ள இந்தியத் தூதரகத்தை அணுகித் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்தனர். அப்போதே இந்தப் பிரச்னை வெளிப்பட்டு விட்ட போதும் அரசாங்கம் ஒன்றுமே கண்டுகொள்ளவில்லை!

விமானப் பணிப் பெண் அம்ருதா சிறுமி அமீனாவை வளர்க்கிறேன் என முன் வந்துள்ளதைச் சில பத்திரிகைகள் 'ஸ்டண்ட்' என விமர்சித்தன.

''எனது ஏமாற்றம் மிகுந்த மண வாழ்க்கையே என் விருப்பத்துக்குக் காரணம். கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுள்ள நான், அவரது மூத்த தாரத்துக் குழந்தையை நேசித்தேன். அவளைப் பார்க்கக் கூட என்னை விடுவதில்லை. அதனால் அமீனா வளர்ப்பு மூலம் ஆறுதல் பெற விரும்புகிறேன்'' என உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னார் அம்ருதா. ஆகாயத்தில் பறக்கும் பெண்மணியின் அந்தரங்கத்தில்தான் எத்தனை சோக அனுபவம்...!

- சுபஸ்ரீ

ஃப்பிரிஜ் பரிசு : கூப்பன் நெ: 23

ஃப்பிரிஜ் ஒன்றைப் பரிசாகத் தட்டிச் செல்வதற்கு இன்னும் இரண்டே வாரங்கள்தான். 'நேற்று வரை நந்தவனம்' தொடர் கதையைக் கவனமாகப் படியுங்கள். நாங்கள் வேண்டுமென்றே அதில் செய்துள்ள தவறைக் கண்டுபிடித்துக் கூப்பனைப் பூர்த்தி செய்யுங்கள். அடுத்த வாரம் கதை முடிந்ததும் அந்தக் கூப்பனையும் பூர்த்தி செய்து, இதுவரை பூர்த்தி செய்து வைத்துள்ள அத்தனை கூப்பன்களையும் சேர்த்து, கதை பற்றி 5 - 10 வரி விமர்சனத்தையும் எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ஒருவருக்கு மேல் மிக அதிகத் தவறுகளைச் சுட்டிக்காட்டியிருந்தால் குலுக்கல் முறையில் ஒருவருக்கு ஃப்பிரிஜ் பரிசு! வேறு பலருக்கு ஆறுதல் பரிசுகள்!

இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்ட....

தவறு : ____________________

திருத்தம் : ____________________

கல்கி ஸ்ரீராம் சிட்ஸ்

இணைந்து நடத்திய பரிசுப் போட்டி

"கை கொடுத்த கடன் தொகை"

போட்டி முடிவுகள்!

முதல் பரிசு 165 லி. ரெப்ரிஜிரேட்டர் பரிசு பெறும் கட்டுரை

தோல்வியே முன்னேற்றத்தின் முதல்படி!

நான் எனது எஞ்சினியரிங் பட்டப் படிப்பை முடித்து விட்டு வேலைக்கு அலைந்து கொண்டிருந்தேன். எனது சங்கோஜமான சுபாவத்தாலும், மிகச் சாதாரண மதிப்பெண்களாலும், இண்டர்வியூ சமயத்தில் தைரியம் கைவிட்டுப் போனதாலும் வெற்றி கிடைக்காமல் மன வேதனையில் இருந்தேன். எனது தந்தை சென்னையில் பெரும் புள்ளியாக இருந்தும் எவரிடமும் சிபாரிசு செய்ய மறுத்து விட்டார். தன் சொந்தக்காலிலேயே நிற்க கற்றுக் கொள்வதுதான் வாழ்க்கையின் முதல்படி என்ற கருத்துக் கொண்டவர். எனது முயற்சியால் சைக்கிள் கம்பெனி ஒன்றில் பயிற்சியாளராகச் (apprentice) சேர்ந்து, தொழில் அனுபவம் பெற்றேன். திருமணமும் ஆனது. கூடவே அக்கம்பெனியின் ஆட்குறைப்பு திட்டத்தில் வேலை நீக்கம் பெற்றேன்! குடும்பம் நடத்த வேண்டி இருந்ததால், "கம்பெனியிலிருந்து கிடைத்த சிறு மூலதனத்தை வைத்துச் சொந்தமாக நாமே ஏன் தொழில் துவங்கக் கூடாது?" என்ற எண்ணம் உதித்தது. அந்தச் சமயம் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (SIDCO) அம்பத்தூரில் தொழிற்பேட்டை நிறுவ என் போன்ற வேலையில்லா எஞ்சினியரிங் பட்டதாரிகளுக்கு இடம் கொடுக்க முன் வந்தது. மாதா மாதம் தவணை முறையில் பணம் கட்டி இடத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள வசதியும் கிடைத்தது.

கம்பெனி நடத்த, இயந்திரங்கள் வாங்க, மூலதனத்துக்கு என்ன வழி என்று யோசித்தேன். நான் கணக்கு வைத்திருக்கும் வங்கி (IOB) மானேஜருடைய அறிவுரையின் படி எனது படிப்பு, அனுபவம், எனது தொழிலின் எதிர் காலத்திட்டம் (ப்ராஜெக்ட் ரிபோர்ட்) எல்லாம் எழுதிக் கடன் விண்ணப்பம் அனுப்பினேன். எனது குடும்பத்தினரோ கடன் வாங்குவது கௌரவக் குறைவு எனச் சொல்லி எனது முயற்சிக்குத் தடை விதித்தனர். எனது சொந்த உழைப்பால் நிச்சயம் கடனை அடைத்து விடுவதாக உறுதி கூறினேன். வங்கியிலிருந்து இயந்திரங்களின் பேரில் ரூ. ஒரு லட்சமும், தொழில் மூலதனமாக working capital ரூ. 50,000 மும் பெற்றுக் கொண்டேன். இதற்கான Margin தொகை 10% அதாவது ரூ. 15,000/- எனது சிறு சேமிப்பிலிருந்து எடுத்துக் கொண்டு வங்கியில் கட்டினேன். கடன்-தொகையை 11% வட்டியுடன் 36 மாதங்களில் திருப்பித் தரவேண்டும். இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு 1972 ல் ஆரம்பித்த எனது சிறு தொழில் நிறுவனம் கடந்த 20 வருடங்களில்



படிப்படியாக விருத்தி அடைந்து இப்பொழுது சுமார் 20 லட்ச ரூபாய் சொத்துக்கள் உள்ள கம்பெனியாக எனது அயராத உழைப்பினாலும், வங்கியின் கடனுதவியாலும், தொழிலாளர்களின் ஒத்துழைப்பாலும் உயர்ந்துள்ளது.

நாம் வாங்கிய கடன் தொகையை உரிய வட்டியுடன் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் திருப்பித் தர திட்டமிடுவதுதான் எந்த ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியிலும் முக்கிய அம்சமாகும். நாம் தயாரிக்கும் பொருளின் விலையை நிர்ணயிக்குமுன்னர் இந்த மாதாந்திரக் கடன் அடைக்கும் தொகையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மாதாந்திர ஆர்டருக்குத் தகுந்தாற்போல் வரவு செலவைத் தீர்மானித்துக் கொண்டு பொருளின் தரத்தின் மேல் அதிகக் கவனம் வைத்துப் பொருளைத் தயாரிக்க வேண்டும். விற்று வரும் பணத்தில் கடனைத் திருப்பித் தரும் தொகையே முதல் செலவினமாக இருக்க வேண்டும். இவ்வாறு உரிய காலத்தில் கடனைத் திருப்பிக் கொடுத்து வந்ததால் பாங்கின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்து மேன்மேலும் மிஷின்கள் வாங்கக் கடனுதவி பெற்று, வியாபாரத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர முடிந்தது. சில கம்பெனிகள் இப்படி ஆரம்பிக்கப்பட்டபின் சிறிது காலத்திலேயே Sick Unit என்ற முத்திரையுடன் நோயுற்று மூடப்படுவதற்குக் காரணம் வாங்கிய கடனை வட்டியுடன் உரிய காலத்திற்குள் திருப்பித்தர திட்டமிடாமல் இருப்பதே. கம்பெனியின் மாதாந்தர உற்பத்தி, விற்பனை, கையிருப்பு இவைகளைக் கவனத்தில் வைத்துக் கொண்டு தான் கடன் அளிக்கப்படுகிறது.

நான் வேலை தேடி அலைந்த காலத்தில் ஒரு கம்பெனியில் என்னை இண்டர்வியூ செய்த உயர் அதிகாரி ஒருவர், எனது தந்தையின் நண்பராயிருந்தும், நான் வேலைக்கு ஏற்றவன் அல்ல என்று என்னிடம் கூறினார். அதனால் மனவருத்தமடைந்த நான், இனி யாரிடமும் வேலை கேட்டு அலையக் கூடாது என்ற முடிவுடன் கடன் வாங்கியாவது சொந்தமாகத் தொழில் ஆரம்பிக்க முடிவெடுத்தேன். அதுவே என் வாழ்வின் திருப்பு முனையாக அமைந்தது. இன்று அந்த அதிகாரியே எனக்கு உதிரி பாகங்கள் சப்ளை செய்பவராக இருக்கிறார். எனது உயர்வைக் கண்டு மகிழ்ந்து, அன்று தாம் கூறியதை நினைத்து வருத்தமடைந்து பேசினார். அந்தத் தோல்வியே எனது வாழ்க்கையின் முன்னேற்றத்தின் முதல் படியாக விளங்கியது என்று நன்றியோடு கூறினேன்.

அயராத உழைப்பும், சரியாகத் திட்டமிடுதலும், தன்னம்பிக்கையும் வாழ்வின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை.

- ஆர். வெங்கட்டராமன். சென்னை - 4

இரண்டாம் பரிசுகள் :

பூரோகிளீன்
வாக்குவம் கிளீனர்
பரிசு பெறும்
இரு கட்டுரைகள்

ஞாலமும் சிறிதாகியது!

அது 1981-ம் ஆண்டு. நான்கு குழந்தைகளுடன் ஒரு அரசு அலுவலகத்தில் நானூறு ரூபாய் சம்பளத்தில் வேலை செய்து வந்த ஏழை விதவை நான். என் மூத்த மகன் வெகு புத்திசாலி. என் சக்திக்கு மீறியே செல



வழித்து அவனைப் படிக்க வைத்தேன். அவனும் என் வறுமை, வசதிக்குறைவு, வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் கவனத்தைச் சிதறடிக்கும் தொந்தரவுகள் இவற்றின் இடையேயும் மிக ஊக்கத்துடன் படித்து, பள்ளியிறுதியிலும், புகுமுக வகுப்பிலும் முதல் மாணவனாக வந்ததுடன் ஐ. ஐ. டி. நுழைவுத் தேர்விலும் மிக முன்னிலையில் வந்தான். உதவித் தொகை பெற்று நன்கு படித்து வந்தான். அவன் பி.டெக் படிப்பை முடிக்கும் முன்னரே, மேல்படிப்புக்காக அமெரிக்கா செல்ல அவனுக்கிருந்த அளவற்ற ஆவலைப் பலமுறை வெளிப்படுத்தி வந்தான். ஏதோ வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி மற்ற மூன்று குழந்தைகளின் படிப்புக்கும் செலவழித்துக் கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வந்த நான், அவனை வெளி நாட்டுக்கு அனுப்புவதென்பதைக் கனவில் கூட நினைக்க முடியாத நிலையில் அவன் எண்ணம் எங்கே ஈடேறப்போகிறது என்று கருதியிருந்தேன்.

என் மகன் ஐந்தாண்டுப் படிப்பை முடித்துவிட்டு விடுமுறையில் வந்திருந்தான். அதற்கு முன்பாகவே அவன் மேல் நாடு செல்லத் தகுதிபெறவேண்டிய தேர்வுகளை எழுதி முடித்திருந்தான். அவன் தனது பட்ட மேற்படிப்புக்கோ, வேலைக்கோ முயற்சி செய்வான் என எதிர்பார்த்திருந்தேன்.

ஜூலை 81-ல் ஒருநாள் அலுவலகத்திலிருந்து வந்தேன். என்மகன் திடீரென, 'அம்மா நாம் சற்றுப் பெரிய வீட்டிற்குக் குடித்தனம் போனால் எப்படியிருக்கும்?' என்று கேட்டான். உடனே நான் சொன்ன பதில், 'ஆண்டிக்கு எதற்கு அம்பாரக் கவலை?' என்பதுதான். என் மகன் உடனே ஒரு கடிதத்தை எடுத்து என்முன் நீட்டினான். அமெரிக்காவில் ஒரு பல்கலைக் கழகத்தில் கணிசமான உதவித் தொகையுடன் மேல் படிப்பிற்கான அனுமதிக் கடிதம் அது. ஆனந்தக் கண்ணீர் கண்களை மறைக்க அதனைப் படித்து முடித்தேன். ஆனந்தத்தினூடே பெரிய கவலையும் எழுந்தது.

பயணச் செலவும், மற்ற இன்றியமையாத செலவினங்களும் மட்டுமே பத்தாயிரத்துக்கும் மேல் ஆகுமே? அதற்கென்ன வழி? ஏதோ விழுந்து எழுந்து ஒரு மாதிரி குடித்தனம் செய்து வந்தேன். இத்தனை பெரிய தொகைக்கு என்ன செய்வேன்? உடன்பிறந்தவர்களும் சாதாரண நடுத்தர வர்க்கத்தினர்தான். அவரவரும் இரண்டு மூன்று குழந்தைகளுடன் அன்றாடப் போராட்டத்தில் தான் இருந்தனர். கைக்கு எட்டியது வாய்க்கெட்டாமல் போய் விடுமோ என மிகக் கவலையுற்றேன்.

ஆனால் தெய்வம் வழி காட்டியது. சென்னை எல்.ஐ.சி.யில் பணிபுரியும் என் தங்கையின் அலுவலகத்திற்குத் தற்செயலாகச் சென்ற என் மகன், தனக்கு மேற்படிப்புக்கு அனுமதி வந்துள்ளதையும், செலவுக்காக நான் படும் கவலையையும் தெரிவித்திருக்கிறான். அவள் தன் கிளை மேலாளரிடம் இதற்கு ஏதாவது வழி உண்டா என்று கேட்டிருக்கிறாள். அவரோ தன் நெருங்கிய நண்பரான பஞ்சாப் நேஷனல் வங்கி மேலாளரிடம் இப்பிரச்னையைத் தெரிவித்திருக்கிறார். அந்த நல்ல மனத்தவர், 'இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்த பையனுக்கு உதவுவது தான் பெரிய சேவை, உடனே அவனைச் சந்திக்க வேண்டும்' என்றிருக்கிறார். என்மகன், என் சகோதரி, நான் மூவருமாக அவரைச் சந்தித்தோம். என் தங்கை, தன் கணவரின் பெரிய மனத்துடன் கிடைத்த அனுமதியுடன், பிணையாளியாகக் கையெழுத்திட, பதினெட்டாயிரம் ரூபாய் உடனடியாகக் கடன் கிடைத்தது.

என்மகன் அயல்நாடு கிளம்பும் தினம், இறைவனையும் என்னையும் வணங்கி நின்றபோது என்னால் என் கண்களையே நம்ப முடியயவில்லை.

அவன் அக்கடன் தொகையைக் குறிப்பிட்ட காலக் கெடுவுக்கு முன்பே செலுத்தி முடித்து, வங்கியினரின் பாராட்டைப் பெற்றதும், இன்று அவன் பெரிய கம்ப்யூட்டர் பொறியாளனாகப் பதவி வகித்து வருவதும், தன் தங்கை, தம்பி இருவரின் மேற்படிப்பை நன்கு முடித்துக் கொடுத்ததும், சகோதரியின் திருமணத்தை விமரிசையாக முடித்து, தானும் தன்குணத்திற்கு இசைந்த பெண்ணை மணந்து, குடியை நிமிர்த்தியதும் பின் வந்த கதைகள். இத்தனை உயர்வுக்கும் காரணம் அன்று அவ்வங்கி அதிகாரி அளித்த கடன் உதவியே. அது வேருக்குப் பாய்ச்சிய நீராக அமைந்தது.

காலத்தினால் செய்த அப்பெரு உதவியின் முன் ஞாலமும் சிறிதாகிவிட்டது.

- டி. அம்புஜவல்லி, சென்னை - 20


ஏக்கப் பெருமூச்சும் அதிர்ஷ்டத்தின் வரவேற்பும்!



அன்று.....

''இந்து'' வில் ஒரு விளம்பரம் -

அண்ணா நகர், தமிழக அரசு வீட்டு வசதி வாரியம் - அதைச்சார்ந்த ஒரு ப்ளாட் விலைக்கு வருகிறது. விலை ஒரு லட்சத்துச் சொச்சம். எனக்கு வாங்க வேண்டிய நெருக்கடி. நான் இருக்கும் இடத்தை வீட்டுக்காரர் விற்றுவிட்டார். புதியவர் வீட்டைக் காலி செய்யும் படி நோட்டீஸ் கொடுத்து விட்டார். வெளியில் வாடகையும் அட்வான்ஸும் எக்கச்சக்கம். ஆனால் இதோ தயாராக




மூன்றாவது பரிசாக நான்கு பிலிப்ஸ் 2-இன்-1 பெறும் நான்கு கட்டுரைகளை எழுதியவர்கள்:

1. கி. திலீபன்,
   5, கந்தசாமி வாத்தியார் தெரு,
   தர்மபுரி - 636 701.

2. பெ. ராதா கிருஷ்ணன்,
   6, கங்கா இல்லம்,
   மணிகண்டபுரம்,
   திருமுல்லைவாயில்,
   சென்னை - 600 062.

3. பி. சௌந்தரராசன்,
   3/102,7வது தெரு, முதல் குறுக்கு,
   காமராசர் நகர்,
   கும்பகோணம் - 2 .

4. எஸ். அகிலன்,
   3/77 L - 1,
   P.S.R. நகர்,
   சித்துராஜபுரம் அஞ்சல்,
   சிவகாசி (வழி) 626 189.



முதல் பரிசு பெற்றவரின் முகவரி :

ஆர். வெங்கட்டராமன்,
25-A, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.

இரண்டாம் பரிசு பெற்றவர்களின் முகவரி :

1. டி. அம்புஜவல்லி,
   8/13, முதல் மெயின் ரோடு,
   காந்தி நகர், அடையாறு,
   சென்னை - 600 020.

2. கே. நீலா,
   1/196, ஆசியாட் காலனி,
   மே. அண்ணா நகர்,
   சென்னை - 600 101.

(ஐம்பது ஆறுதல் பரிசுகளை (ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்ரீபெட் கிப்ட் பேக்) வென்றவர்களின் விவரம் அடுத்த இதழில்...)

நல்ல நிலையில் - நல்ல வட்டாரத்தில் - வீடு விலைக்கே வருகிறது.

ஆனால் பணம்?


இவ்வளவு பெரிய தொகை எங்கிருந்து புரட்டுவது!

நானோ ஓர் அபலை விதவை. உறவினரும் சரி உற்ற நண்பர்களும் சரி - எதை நம்பி ,எனக்குப் பணம் கொடுக்க முன் வருவார்கள்? வெகு நேரம் அந்த விளம்பரத்தைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டே உட்கார்ந்தேன். ஒரு விடையும் கிடைக்காமல் மற்ற பக்கங்களை அசுவாரஸ்யத்துடன் புரட்டினேன். கடைசிப் பக்கத்தில் பளிச்சென்று ஒரு பெரிய விளம்பரம்!

அந்த விளம்பரமே எனது பிரச்னைக்கு விடையாகவும் அமைந்துவிட்டது!

''ஸ்ரீராம் சிட்ஸ் - தேவையின் நண்பன். விபரங்களுக்கு உடனே அணுகவும்....''

ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்துக்கு விரைந்தேன். அதிர்ஷ்டம் அங்கே என்னை வரவேற்றது.



காண்ஸ்டபிள் : "சார்... இது ரொம்ப அநியாயம்...!"

சப்-இன்ஸ்பெக்டர் : "எது...?"

காண்ஸ்டபிள் : "நம்ம பார்ட்டியிடம் ஏமாற்றி, வேறொரு ஏரியாக்காரன் 'மாமூல்' வாங்கிட்டுப் போயிட்டதுதான்!"

- ச. சாதிக் அஹமத்.

முப்பதாயிரம், ஐம்பதாயிரம், ஒரு லட்சம் என்று சீட்டு குருப்புகளில் சேர்ந்தேன். விளம்பரம் கொடுத்த வீட்டுக்காரரை அணுகி, என் நிலையை விளக்கி, மூன்று மாத இடைவெளிகளில் - மூன்று தவணைகளில் பணம் கொடுக்க அனுமதி கேட்டேன். நல்ல மனம் படைத்த அவர் சம்மதித்து, உடனேயே தேவையான ஒப்பந்தப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து எனக்கு வீட்டைச் சாசனப்படுத்தி அளித்துவிட்டார்.

மூன்று மாத இடைவெளிகளில் ஒவ்வொன்றாக மூன்று சீட்டையும் எடுத்து, ஒப்பந்தப்படி நேர்மையோடு அவருக்குப் பணம் கட்டி விட்டேன்!

அது சரி - ஒன்றே முக்கால் லட்சம் ரூபாய்க்குச் சீட்டு எடுத்தாகிவிட்டதே, மாதாமாதம் இவ்வளவு தொகை கட்ட பணத்துக்கு என்ன செய்ய....?

சீட்டு அலுவலக மானேஜரின் அறிவுரையின் பேரில் அந்தச் சீட்டு நிறுவனத்தில் ஒரு 'முகவர்' (ஏஜெண்ட்) ஆகச் சேர்ந்து, சீட்டுக்கட்ட ஆட்களைச் சேர்த்துக் கொடுக்க ஆரம்பித்தேன். இப்போது நான் ஒரு சுறுசுறுப்பான முகவர். வீட்டு வாடகை இல்லாததால் அந்தத் தொகையுடன் கமிஷன் தொகையும் சேர்த்து சீட்டுக்குப் பணம் கட்டுகிறேன்.

நகை, நட்டு, சொத்து எதுவுமே இல்லாத ஒரு அபலை, சொந்த ப்ளாட்டில் குடியிருந்து பணியாற்றுகிறேன். என் மூலம் 'சீட்'டில் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கெல்லாம், அவர்கள் மனை வாங்கி வீடு கட்டவோ, திருமணம் நடத்தவோ எளிதாக வழி கிடைக்கிறது.

- கே. நீலா. சென்னை - 101

கடந்த மூன்று மாதங்களாக ராஜீவ் காந்தி கொலை பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பரபரப்புடன் வெளியாகின்றன. அவற்றை மிக ஆர்வமுடன் படித்திருப்பீர்களே! எங்கே இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!

குவிஸ் டைம்

1. ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய 'தனு' பயன்படுத்திய வெடிகுண்டுக்கு என்ன பெயர்?

2. தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில் முதன் முதலாய்க் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலியின் பெயர் என்ன?

3. ''சிறப்புப் புலனாய்வுக் குழுவினர், கொலையைப் பற்றி விசாரிக்க யாழ்ப்பாணம் சென்றனர்'' - சரியா? தவறா?

4. கொலையாளி பற்றித் துப்புக் கொடுப்பவர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகை எவ்வளவு? பின்னர் அது எவ்வளவுக்கு உயர்த்தப்பட்டது?

5. சி.பி.ஐ., ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக உதவி கோரிய அயல்நாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் எவை எவை?

6. வேதாரண்யத்தைச் சேர்ந்த சண்முகத்தின் மரணம், ஏன் சர்ச்சைக்குரியதானது?

7. சிவராசனுக்குப் போலி டிரைவிங் லைசென்ஸ் எடுத்துக் கொடுத்ததாகக் கருதப்படும் போராளி யார்?

8. பேரறிவாளனின் பங்கு என்ன என்று சந்தேகிக்கப்படுகிறது?

9. சிவராசனின் உண்மைப் பெயர் என்ன? சொந்த ஊர் எது?

10. ராஜீவ் காந்தி கொலையில் தொடர்புள்ள காயத்ரி, ஷாலினி ஆகியோர் யார்?

11. ராஜீவ் கொலை தொடர்பாக டெல்லியில் கைதான இருவர் யார்?

12. இது யாருடைய படம்? →



தொகுப்பு : மௌலி

குவிஸ் டைம் விடைகள் :

1. ஆர். டி. எக்ஸ். வெடிகுண்டு.

2. சங்கர்

3. தவறு. அவர்கள் போனது கொழும்புவுக்கு.

4. முதலில் அறிவிக்கப்பட்டது ஐந்து லட்சம். பின்னர் பதினைந்து லட்சமாக அதிகரிக்கப்பட்டது. (சிவராசனுக்கு 10 லட்சம், சுபாவுக்கு 5 லட்சம்)

5. இண்டர் போல், தி நார்கோடிக்ஸ் கண்ட்ரோல் பீரோ, ராயல் கனடியன் போலீஸ், ஸ்காட்லாண்டு யார்டு.

6. வேதாரண்யம் பயணியர் விடுதியில், சாப்பிட்டு விட்டுக் கை கழுவச் சென்ற போது, சுவரேறிக் குதித்துத் தப்பித்த சண்முகம், மறுநாள் காலை மரத்தில் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார். ஆனால் தற்கொலை செய்து கொண்டால் உண்டாகும் அறிகுறிகள் இல்லை. தொங்கிய நிலையில், கால்கள் தரையை யொட்டியவாறு இருந்தன. போலீஸ் - ஸி.பி.ஐ. காவலில் இருந்தார். எப்படி தப்பிக்க விடப்பட்டார்? நடு இரவில் சண்முகத்துக்குக் கயிறு எவ்வாறு கிடைத்தது? இவையெல்லாம் சண்முகத்தின் மரணத்தைச் சர்ச்சைக்குள்ளாக்கி விட்டன.

7. ராபர்ட் பயஸ்.

8. வெடிகுண்டு தயாரித்ததும், சிவராசனுக்காக வி.ஹெச். எப். ரேடியோ தொடர்புக் கருவிகள் அமைத்துத் தந்ததும்.

9. ராஜா அருமைநாயகம். யாழ்ப்பாணத்தில் உள்ள சாவகச் சேரி கிராமம்.

10. தனுவின் உண்மைப் பெயர்தான் காயத்ரி. சுபாவின் நிஜப் பெயர் ஷாலினி.

11. கனகசபாபதி, ஆதிரை

12. புகைப்படக்காரர் ஹரிபாபு.

கல்யாணச் சாப்பாடு

தமாஷ்வாலா

வாரத்தில் ஒரு முறையாவது நிம்மதியாகச் சயனித்து நேரங்கழித்து எழுந்திருக்கலாமென்றால், வேண்டுமென்றே எனக்கு வேண்டாத பாட்டை டு-இன்-ஒன்னில் போட்டு பாத்ரூமிற்குள் அடைக்கலம் புகுந்து கொண்டாள் என் பாரியாள்.

எரிச்சலும், ஆத்திரமும் பன்ருட்டியைப் பார்த்த தாமரைக் கனி யாய் வெடிக்க, பட்டென்று டு-இன்-ஒன்னின் மண்டையில் அடித்து, மீண்டும் இன்பக்கனா எதிர்பார்த்துப் படுக்கையில் சுருண்டு பய னில்லை. சில நிமிட ஆர்யபட்டா சந்தோஷம்தான். பாத்ரூமிலிருந்து ஏவுகணை, மனைவி ரூபத்தில் வந்து என்னை மறுபடி தாக்கியது.

''என்னங்க. நீங்க எத்தனை மணி வேண்டுமானாலும் தூங் குங்க. நான் வேண்டாங்கலை. என்ன சமைக்கட்டும்னு சொல்லிட் டுப் படுங்க.''

''ஏன் இப்படி என் உசிரை வாங்கறே? நீ என்ன சமைச்சா எனக் கென்ன? நா என்னவோ இங்கே சாப்பிடப் போறதில்லே. இன் னிக்கு ஐயாவுக்கு அமர்க்களமான கல்யாணச் சாப்பாடு. பத்ரி தெரியு மில்லே. அவன் அப்பாவுக்கு சஷ்டி யப்தபூர்த்தி. இன்னிக்கு சாப்பாடு உபயம் பத்ரி. என்னைத் தொந்தரவு பண்ணாதே'' என்று கூறித் தூங்கியவன் தான். மீண்டும் எழுந்த போது மணி ஒன் பதை நெருங்கியிருந்தது. மனைவிக்காக நான் குரல் கொடுக்க, வீட்டு வேலைக்காரி முனியம்மா முன்வந்து நின்றாள்.

''அம்மா எங்கே?''

''ஐயா, வூட்ல சோறு தின்னப் போவலையாம். அம்மா அவுக வூட் டுக்குப் போயி...''

சே! நாம இலேசாகக் கோடி காட்டினால் போதுமே? துப்பாக்கி யிலிருந்து புறப்பட்ட தோட்டாவாகப் போயிடறாங்க பிறந்த வீட் டுக்கு. தூங்கி எழுந்தவுடன் முனியம்மா கொடுத்த முதல் சேதி எரிச் சலை ஏற்படுத்த அவள் மீது பாய்ந்தேன்.

''சரி. நீ எதுக்கு நிக்கறே? வீட்டுக்குப் போக வேண்டியதுதானே.''

''நீ சரியா வூட்டப் பூட்டாம போயிடுவியாம். நீ போனதுக்கப்பால என்னைய செக் பண்ணிட்டு போவச் சொல்லிச்சு அம்மா.''

சே! நாம சம்பளம் கொடுக்கிற வேலைக்காரிக்கு இருக்கிற மதிப்பு எனக்கில்லையே என்று நொந்து கொண்டே காப்பிக்காகச் சமைய லறைக்குள் நுழைய யத்தனிக்கையில், ''சாமி உள்ளாற போவாத. அங்கே ஒண்ணுமில்ல. நீ பாட்டுக்குக் காப்பி போடறேன்னு 'காஸ்' ஸைத் தொறந்து கலாட்டா பண்ணாதே!''

''என்னம்மா உன் மனசுல நினைச்சிக்கிட்டிருக்கே? இந்த வீட்ல நீதான் எஜமானியா?''

''அய்யய்யோ! ஐயா பெரிய்ய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க. அம்மா என்னாண்ட சொல்லச் சொன்னாங்க. அம்புட்டுத்தான்.''

இனி பேசிப் பிரயோஜன மில்லை என்று தீர்மானித்து பத்ரி வீட்டுக் கல்யாணத்திற்குக் கிளம்பத் தயாரானேன். பஸ்ஸுக்காகக் காத் திருக்க, 'அகோர பசி' எனக்கு இடம் கொடுக்காததால் ஆட்டோ பிடித்துச் சென்றேன்.

சத்திரத்தின் வாயிலில், ஆட் டோவிலிருந்து நான் இறங்கியது தான் தாமதம், ஒரு வெற்றிலை குதப்பிய மனு ஷன் கல்யாணத்திற்கென்றே பிரத்யேகமாக உபயோகப்படுத்தப்படும் ஜிப்பா சகிதமாக, 'அடடே, வாடா மௌலி'' என்று என் கைத் தலம் பற்றினார். பற்றிய என் கையை விடாமல், ''என்னைத் தெரி யறதா?'' என்றார்.

''உங்களைத் தெரியாமலா,'' என்று நழுவப் பார்த்தேன். மனுஷன் என்னை விடுவதாயில்லை.

''நான் யார்னு சொல்லு!''

''நீங்கதானே...'' - முழித்தேன்.

''என்ன முழிக்கற? இன்னும் அந்தத் திருட்டு முழி மாறவே இல்லே...''



இப்போது இருக்கிற பசியில் இந்தக் கிழவனிடமிருந்து தப்பித்தால் போது மென்று, என் தோல்வியை ஒப்புக் கொள்ள முடிவு செய்தேன்.

''சாரி மாமா! எனக்கு ஞாபகத்துக்கு வரலே.''

''அப்படிச் சொல்லிட்டா விட்டுடு வேன்னு நினைக்கிறியா? யாருன்னு யோசிச்சுப் பாரு. பத்து நிமிஷம் டயம் கொடுக்கறேன்.''

''ஒரு நிமிஷம்,'' என்று கையை விடு வித்துக் கொண்டு அவரிடமிருந்து தப்பி னேன்.

உள்ளே சென்று, நான் வந்ததற்கு அத்தாட்சியாக மொய்ப் பணமான பத்து ரூபாயைப் பத்ரி வீட்டாரிடம் கொடுத்து விட்டு, உடன் நாம் வந்த சாப்பாட்டு வேலையை முடித்துக் கொண்டால் நன்றாக இருக்காது என்று மரியாதை நிமித்தம் காலியாக இருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந் தேன்.

சுற்றம் சூழ இருந்தவர்கள் பந்தி போட ஆரம்பித்ததை எனக்கு உணர்த்த, நான் ரிலே ரேஸ் கணக்காக, ஓடினேன். பெரிய அளவி லான 'மியூசிகல் சேர்' விளையாட்டு, சாப் பாட்டிற்காக இடம் பிடிக்க நடந்து கொண்டிருக்க, ஒரு காலியான நாற்காலி என் கண்ணில் பட, ஒரே தாவாகத் தாவி நாற்காலி முன் நின்றேன்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டு வெற்றிப் பெருமிதத்தோடு சட்டைக் கால ரைத் தூக்கி விட்டு உட்கார்ந்தபோது, ''அய்யோ'', என்ற அலறல்.

என்ன அநியாயம்! நான் உட்காரு



வதற்குள் ஒரு பகாசுரன் புகுந்து விட்டான். எல்லாம் சனியன் நான் நின்றிருந்த நொடிப் பொழுதில் நடந்து விட்டது. ஒரு கணம் என்னையறியாது அவன் மடி மீது தவழ்ந்து விட்டேனாம்!

முதல் பந்தியில் விட்ட இடத்தை இரண்டாவது பந்தியிலாவது பிடித்து விட வேண்டும் என்று தீர்மானித்தவனாய்க் கடன் வசூல் பண்ணக் காத்திருக்கும் சேட்டுக் காரன் போல் பகாசுரன் பின்னாலேயே நின்றிருந்தேன். இம்முறை துரதிர்ஷ்டம் பத்ரியின் மாமா மூலமாக எனக்கு வந்தது. பந்தியைக் கவனிக்க வந்தவர் சும்மா இல்லாமல், ''என்ன மௌலி பந்தியைக் கவனிக்கிறீங்களா? வெரி குட். இனி பந்தியை நான் கவனித்துக் கொள்கிறேன். உரிமையா உன்னிடம்தான் நான் கேட்டுக் கொள்ள முடியும். அவசரமா நூறு நுனி இலை தேவை. போய் வாங்கிட்டு வந்துடேன்,'' என்று செல்லமாக முதுகில் தட்டி அனுப்பினார்.

''பாவி! என்னுடைய வயிற்றில் அடித்து விட்டு, முதுகில் என்ன அன்புத் தட்டு வாழ்கிறது'' - முனகிக் கொண்டே சென்றேன். காய்ந்த வயிறு, சோர்ந்த முகத்துடன் நுனி இலைக்காக நாயாய் அலைந்து, இலையுடன் திரும்பிய போது பலர் தாம்பூலப் பையுடன் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

அடுத்த பந்திக்கு ஆயத்தமான நிலையில் பலர் நின்று கொண்டிருக்க, நான் வாங்கி வந்த நுனி இலையைப் பத்ரியின் மாமாவிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பிய போது...

அய்யகோ! ஓர் இடம் கூடக் காலி இல்லை. போதாக்குறைக்கு உட்கார்ந்திருந்தவர்கள் ஏதோ பெரிதாகச் சாதித்த மாதிரி வெற்றிக் களிப்புடன் இருந்தது என்னை நிலைகுலையச் செய்தது. தோல்வியில் துவண்ட வேதாளமாய் மீண்டும் காத்திருந்தேன் - அடுத்த பந்தி எதிர்நோக்கி.



''காதல் வசனங்களை அருமையா எழுதறீங்களே, எப்படி?''

''கொஞ்ச நாள் மெரினா பீச்சல கண்டல் வித்துக்கிட்டிருந்த போது கிடைச்ச அனுபவம்தான்!''

- புனிதவல்லி இளங்கோ.

கடைசியில் அதிர்ஷ்டம் எனக்குக் கதவைத் திறந்த போதுதான், அந்தக் கொடுமை நிகழ்ந்தது. எனக்குப் போடப் பட்ட லட்டுவை நான் வாயில் போட்டுக் கொள்ளும் தருணத்தில், ''ஒரு நிமிஷம்'' என்ற குரல் வந்த திசையை நோக்கினேன்.

அரக்க பறக்க ஓடி வந்தான் பத்ரி ''மௌலி! சீக்கிரம் எழுந்திரு,'' என்றான்.

ஒன்றும் புரியாது நான் எழுந்து நகர, பத்ரி அன்பொழுக, ''வாங்க சார். உங்களுக்காகவே இவன் இடம் பிடித்து வைத்திருக்கிறான்,'' என்று தன் உயரதிகாரியை உட்கார வைத்தான்.

பின் என்னைத் தனியே அழைத்துச் சென்று, ''உனக்குத் தெரியுமில்ல... இப்ப உட்கார வைத்தேனே, அவர்தான் என்னோட பாஸ். சாதாரணமா எந்தக் கல்யாணங்களிலும் அவர் சாப்பிடவே மாட்டார்.''

''அப்படியா?''

''என்ன! விட்டேத்தியாப் பேசறே? சாப்பிட 'உட்கார்ந்தவனை எழுப்பிட்டேன்'னு கோபமா?''

''சே.. சே... அதெல்லாம் ஒன்றுமில்லை.''

''அதானே பார்த்தேன். நீயே சொல்லு. உரிமையா உன்னை எழுப்பறாப்பல வேற யாரையாவது எழுப்ப முடியுமா? உன்னை விருந்தாளியா நினைச்சிருந்தா விஷயமே வேறே. நீ நம்ம வீட்டு மனுஷங்கள்ல ஒருத்தன். என்ன, நான் சொல்றது சரி தானே?''

''ஆமாம்! ஆமாம்!'' - வேறு வழியில்லாது தலையாட்டினேன்.

பத்ரி இத்தோடு என்னை விடுவதாக இல்லை. மௌலி! தயவு செய்து அவசரப்பட்டு அடுத்த பந்தியில உட்கார்ந்து விடாதே. நம்ம வீட்டு மனுஷங்கள் எல்லாரும் கடைசிப் பந்திலதான் சாப்பிடப் போறோம். அப்ப நீதான் எனக்குக் கம்பெனி கொடுக்கணும்'' என்று போகிற போக்கில் பெரிய குண்டாகப் போட்டு விட்டுப் போனான்.

'இனி பொறுப்பதற்கில்லை' - இனியும் நான் காத்திருந்தால் 'பட்டினிக் கவிஞனாக' மாறி ''வயிறு பொறுக்குதில்லையே'' என்று பாட ஆரம்பித்து விடுவேன்.

யாருக்கும் தெரியாமல் சத்திரத்தை விட்டு வெளிவந்து தெருக் கோடியில் இருக்கும் சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்தேன்.



சொன்னார்கள்...

● என்னைப் பதவியிலிருந்து நீக்கி விட்டு ஆட்சியைப் பிடிக்க அதிருப்தியாளர்கள் திட்டமிடுகிறார்கள். என்னைக் கொலை செய்ய எந்நேரமும் முயற்சி நடக்கலாம்.

- இலங்கை அதிபர் பிரேமதாசா

● வர்த்தக ரகசியம் அதிக பிரச்னைகளை ஏற்படுத்தவில்லை என்றால், போஃபர்ஸ் ஆவணங்களை இந்தியப் புலனாய்வுக் குழுவினர் பார்க்கலாம்.

- ஸ்விடிஷ் வெளியுறவு அமைச்சர் ஸ்டென் ஆண்டர்சன்

● கே. கே. நகர் பஸ் நிலையம், கே. கே. நகர் டிப்போ ஆகியவை எம்.ஜி.ஆர். நகரில் அமைந்திருப்பதால், எம். ஜி. ஆர். நகர் பஸ் நிலையம், எம். ஜி. ஆர். நகர் பஸ் டிப்போ என்று பெயர் மாற்றப்பட வேண்டும்.

- எஸ். அண்ணாமலை, அ. இ. அ. தி. மு. க. எம். எல். ஏ.

● கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பற்றிய விவரங்களை, காவல் நிலையத்தில் தெரிவிக்கக் கிராம நிர்வாக அதிகாரிகள் சென்றால் அதை வாங்க மறுக்கும் நிலை சில இடங்களில் இருக்கிறது. பதிவுத் தபாலில் அனுப்பினால் அவை திருப்பி அனுப்பப்படுகின்றன.

- தனபால், அ. இ. அ. தி. மு. க. எம். எல். ஏ.

● தமிழகத்தில் நிலத்தடி நீர் நிர்வாகம் சரியாக இல்லை. இது தமிழகத்தில் பெரும் தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ளதற்கு ஒரு காரணமாகும்.

- மத்திய நீர்வள அமைச்சர் வி. சி. சுக்லா

● அரசாங்கப் போக்குவரத்துத் துறை நிறுவனங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்க, புதிய வழித் தடங்களில் தனியார் பஸ்கள் ஓடுவதற்குத் தமிழக அரசு அனுமதிக்க வேண்டும்.

- வி. என். சுப்பிரமணியம், அ. இ. அ. தி. மு. க. எம். எல். ஏ.

● வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் நல்ல வளர்ச்சி இருக்கும் போது, கடுமையான பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்குவது என்பது விந்தையான ஒன்று.

- குடியரசுத் தலைவர் ஆர். வெங்கடராமன்.

● சர்ச்சில், ஹிட்லர், ட்ரூமன் முதல் ரேகன் வரை சோவியத் ஒன்றியத்தை உடைக்க முயன்றார்கள். அவர்களால் முடியாததை கோர்பசேவ் சாதித்து விட்டார்.

- ஈ. எம். எஸ். நம்பூதிரிப்பாடு.

● சட்டப் பேரவை என்பது சொந்தக் கதை பேசும் இடம் இல்லை.

- பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா.

● கள்ளச் சாராயப் பேர்வழிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும்.

- பீட்டர் அல்ஃபோன்ஸ், இ. காங்கிரஸ் எம். எல். ஏ.

● காஷ்மீரில் அரசு அதிகாரிகள் பாகிஸ்தானுக்குச் சென்று பயிற்சி பெற்று வந்து மீண்டும் பணியில் சேர்ந்து கொள்ளுவது ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அதிகரித்து விட்டது.

- பா. ஜ. க. தலைவர் முரளி மனோகர் ஜோஷி

● சோவியத் யூனியனில், வரப் போகும் குளிர்காலத்தில் ஏற்படப் போகும் உணவுப் பிரச்னையைச் சமாளிக்கவும், சந்தைப் பொருளாதாரத்துக்குச் சுமுகமாக மாறவும் மேற்கு நாடுகள் மனிதாபிமான மற்றும் நிதியுதவி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சோவியத் யூனியனில் மற்றொரு அதிரடிப் புரட்சி ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

- ரஷ்யக் குடியரசுத் தலைவர் யெல்ட்சின்.

●○ ந. இராமசாமி, கோவை.

? சுப மங்களாவில் பாலகுமாரன் பேட்டி படித்தீர்களா? துணிச்சலாக இல்லை?

! ஒரு கருத்து அல்லது காரியம் துணிச்சலாக இருப்பதாலேயே சிறப்பானதாக ஆகி விடாது. பலதார மணம், ஃப்ரீ செக்ஸ் போன்ற கருத்துக்களை அவர் வெளியிட்டால் பாப்புலராகலாம்; கௌரவமும் சிறப்பும் பெற முடியாது.

●○ கே. எம். ரவிச்சந்திரன், மதுரை.

? சிவகுமார் டி.வி. தொடரில் நடிக்க ஆரம்பித்து விட்டாரே?

●○ டி. ரவீந்திரன், கடலூர்.

? அமைச்சர் செங்கோட்டையன் பேருந்துகளில் திடீர்ப் பிரவேசம் செய்து பயணிகளிடம் குறைகளைக் கேட்டிருக்கிறாரே, பாராட்டுவீர்களா?

! குறைகளைக் கேட்டதற்காக நன்றி சொல்லலாம்; குறைகள் நிவர்த்திக்கப்பட்டால் பாராட்டலாம்.


●○ கே. வேல்சாமி, மதுரை.

? சுஜாதாவின் எழுத்து நடை இன்னமும் இளமையாய் இருக்கக் காரணம்?


கே.பி.ராமலிங்கத்தைக் கைது செய்தது...?



☛ தவறான அணுகுமுறை



☛ சின்னத் திரையில்...



☛ எழுத்தில் இளமை



☛ சும்மா இருந்த சங்கு...

! சினிமாவுக்கும் மேலாக இப்போது சின்னத் திரை மக்களின் வாழ்க்கையோடு இணைந்து விட்ட பிறகு அதை விட்டு வைப்பது சரியில்லையே! கவனிக்க வேண்டிய விஷயம், சின்னத் திரைதானே என்று சிவகுமார் அலட்சியமாயிராமல் அதே அளவு நடிப்புத் திறனைக் காட்டியிருக்கிறார், என்பதுதான்.

●○ எஸ். வைத்தியநாதன், திருவெண்ணெய்நல்லூர்.

? தங்களைக் கவர்ந்த டி.வி. தொடர்?

! ஒன்பது மணிக்குப் பிறகு என்றால், 'ரிஷ்தே'. ரிஷிகேஷ் முகர்ஜியின் இயக்கத்தில்.


! இளமை எண்ணத்தில் இருந்தால் எழுத்திலும் வெளிப்படும்.

●○ எம். ரஃபி, புரசைவாக்கம்.

? பிரதமரின் முதல் மேல்நாட்டுப் பயணம் எப்படி?

! கணிசமான அளவு நிதி உதவி செய்வதாக திட்டவட்டமாக ஜெர்மனி ஒப்புக் கொண்டது முக்கிய வெற்றி. இதனால் இந்தியப் பொருளாதாரத்திடம் மற்ற நாடுகளுக்கும் நம்பிக்கை பிறக்கும். உதவ முன்வரும். உலக வங்கி போன்றவை இந்தியாவுக்கு உதவுவது பற்றி யோசிக்கும் போது இந்தியா சார்பாகப் பேசுவதாக ஜெர்மானிய அதிபர் வாக்களித்தது மற்றுமொரு லாபம். நமது

பொருளாதார - தொழில் கொள்கைகளை ஜெர்மனி வரவேற்றிருப்பது திருப்தி. ஜெர்மனியில் நடக்கும் இந்திய விழா அந்நாட்டு மக்களைக் குதூகலிக்கச் செய்திருப்பது மகிழ்ச்சி.



☛ [illegible]



☛ பெருந்தப் பிரவேசம்



☛ ஜெர்மனி விஜயம்



☛ கிளாப் அடித்தார்

●○ குயில் குமார், காரைக்குடி.

? விஜயசாந்தி படத்துக்கு மேனகா கிளாப் அடித்தது பற்றி?

! பெண் அரசியல்வாதி பற்றிய படம் என்பதால் கிளாப் அடிக்கச் சம்மதித்திருப்பார். படம் வெற்றி பெற்று விடுவது நல்லது. இல்லையென்றால் நமது சென்டிமெண்ட் மிக்க திரை உலகு பழியை மேனகா மேல் போட்டு விடும்!

●○ எம். கே. சக்திவேல், சேலம்.

? வன்முறை வேண்டாம் என்று கல்லூரி மாணவர்களுக்கு முதல்வர் வேண்டுகோள் விடுக்க நேரும் அளவில் கல்லூரி மாணவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்?

! அதானே, ஒருவேளை சட்டமன்றம் கற்றுத் தரும் பாடமோ? வன்முறை வேண்டாம் என்று எம். எல். ஏக்களுக்கும் 'ஜெ' அறிவுரை வழங்கிப் பார்க்கலாமே!

●○ ஏ. எம். பழனிச்சாமி, கோவை. ❑

? மது பானக் கடைகளை ஒழிக்கப் போகும் சமயத்தில் அதன் விலையை அதிகப் படுத்தியது கடையை மூடப் போவதற்கு அடையாளமா? தொடரப் போவதற்கு அடையாளமா?

! மதுக் கடைகள் எல்லாம் ரகசிய 'பார்'களாக மாறப் போவதற்கு அடையாளம்! பெக்கு விஸ்கிக்கு ஊற்றிக் கொள்ள நீரோ, சோடாவோ கூட சப்ளை செய்கிறார்கள் பல ஒயின் ஷாப்களில்!

●○ ப. விஜயபாலன், சென்னை - 18.

? மூன்று ஆண்டுகள் கழித்து ராமலிங்கத்தைக் கைது செய்தது...?

! பழிவாங்கும் படலம் என்றால், இல்லை, உறங்கிக் கிடந்த சட்டத்தை உசுப்பி விட்ட காரியம் என்று வாதாடலாம். ஆனால் இந்த நடவடிக்கையால் நிகர லாபம் ராமலிங்கத்துக்கும் தி. மு. க. வுக்குமே. அனுதாபம் அவர் பக்கமும் அவர் விடுகின்ற அறிக்கைகளால் அபகீர்த்தி ஜெ பக்கமும் சரிகின்றன. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த கதைதான்!

●○ ஆர். ஸ்ரீதரன், குடந்தை.

? இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்ற பிறகு தி. மு. க. வின் நிலை என்ன?

! ஆபத்தான அபரிமித மெஜாரிட்டியின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். பரிதி இளம் வழுதியின் பேச்சில், பத்திரிகையில் பிரசுரமான அளவில் புதிய விஷயமோ தவறான கருத்தோ ஏதுமில்லை. விடுதலைப் புலிகளுக்கு யார், யார் எந்தக் கட்டத்தில் உதவினார்கள் என்று அனைவரும் அறிந்த பழைய கதையைத்தான் பட்டியலிட்டுப் பேசியிருக்கிறார். ஆனால் உண்மையைச் சந்திக்கிற சகிப்புத் தன்மை தங்களிடம் சிறிதும் இல்லை என்பதைக் காங்கிரஸ்காரர்கள் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இளம்வழுதிக்கு தி.மு.க. ஆட்சி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூற சரியான வாய்ப்புத் தரப்படாதது துரதிர்ஷ்டமே.

●○ பிரபாகரன், குடியாத்தம்.


? உங்கள் மனத்தை வருத்தும் விஷயம்?

! முதல்வரைக் காண வெகு தூரத்திலிருந்து சிரமப்பட்டு வந்த ஓர் ஏழைப் பெண் அவரைக் காண அனுமதிக்கப்படவில்லை என்பதே வருத்தம்தான். காண முடியவில்லை என்பதற்காக அவர் - தற்கொலைக்குத் துணிந்தது அதை விட வருத்தம். இப்படிச் செய்வது தவறு, தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறிவுறுத்தாமல் அவருக்கு முதல்வர் பரிசுகள் அளித்து அனுப்பியது மேலும் வருத்தமளிப்பது. மூன்று கட்டங்களிலுமே முதல்வரது அணுகுமுறையும் தவறாக உள்ளது.

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஏ. எம். பழனிச்சாமி,
ராயல் பேக்கரி,
கோவை - 18.

"உங்கள் மதச்சார்பின்மை போலித்தனமானது!"

கல்கி, வட்டமேஜை பகுதியில் இடம் பெற இன்றைய அரசியல், சமுதாயப் பிரச்னைகள் பற்றிய வாசகர்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் வரவேற்கிறோம். தபால் கார்டின் ஒரு பக்கத்தில் அடங்குவது போல, சுருக்கமாகப் 'பளிச்'சென்று ஒரு கருத்தை மட்டும் கூறினாலே போதும். பிரசுரமாகும் சிந்தனைகளுக்குப் பரிசு உண்டு.



◆ ''விரோதமின்றி வழிபடுவோம்'' தலையங்கம் படித்தேன்.

''எங்கள் தலைவர் அத்வானியின் கார் டிரைவர் ஓர் இஸ்லாமியர், நாங்கள் இஸ்லாமின் விரோதிகளல்ல, இஸ்லாமை சகித்துக் கொள்வதால்தான் இன்னும் பொறுமையோடிருக்கின்றோம்'' என்றெல்லாம் பி.ஜே.பியினர், தம்பட்டமடிப்பதுமாக ஒருபுறமும் - அரசைக் கவிழ்ப்போம் என்று மறைமுகமாக மறுபுறமும் ''டபுள் ஆக்டிங்'' செய்வது சென்ற தேர்தலில் 'பிஜேபி'க்கு வோட்டுப் போட்ட அனைத்து மக்களின் முகத்திலும் கரி பூசுவதாயுள்ளது. இவர்கள் இந்து மதத்திற்குப் பெருமை சேர்க்க எண்ணினால் இந்து மதத்திற்குள் உள்ள எண்ணற்ற சாதிப்பூசல்களையும், தீண்டாமையையும், ஒழிக்கக் கங்கணம் கட்டலாமே; அண்மையில் நடந்த கொடுமைகளில் இத்தீவிரத்தைக் காட்டலாமே!

சென்னை - 88, கபில வேங்கடேசன்.

◆ சோமநாதபுரத்தில் படேல் அவர்கள், சிவன் கோயில் இடிக்கப்பட்டு அங்கு கட்டப்பட்ட மசூதியை அகற்றி விட்டு அதே இடத்தில் சிவன் ஆலயத்தை மீண்டும் கட்டினார். அப்போது கூட உங்களைப் போன்ற போலி மதச்சார்பின்மை கூறுகிற பெரிய தலைவர்கள் எதிர்த்தார்கள்.



மதுரா, வாரணாசி, அயோத்தி மசூதிகள் இஸ்லாமியரின் முக்கிய ஸ்தலம் அல்ல. ஏன் உங்களைப் போன்ற ''செகுலரிசம்'' பேசுகிறவர்கள் இஸ்லாமியர்களுக்கு அறிவுரை கூறக் கூடாது?

இந்தச் சட்டத்தை எதிர்த்து இந்து மக்கள் போராடுவார்கள் - வெற்றி பெறுவார்கள். இதனை உங்களைப் போன்ற போலி மதச்சார்பின்மை பேசுவோர் பார்க்கத்தான் போகிறீர்கள்.

சென்னை - 31, ஸ்ரீகிருஷ்ணா.

◆ வழிபடும் இடங்களை மாற்றியமைக்க, மாற்று மதவாதிகள் செய்யும் முயற்சிகளுக்குத் தடை விதிக்கும் வண்ணம் வந்துள்ள சட்டம் வரவேற்கப்பட வேண்டியதொன்றுதான். பிரச்னை எல்லாம் இச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள வெட்டுத் தேதி பற்றியதுதான். அத்தேதிக்குப் பிறகுதான் சோம நாதபுரம் ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே, சட்டப்படி, மாற்றி அமைக்கப்பட்ட இவ்வாலயத்தை மீண்டும் சுதந்திரத்துக்கு முன்பிருந்த பழைய நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டுமல்லவா? அப்படிச் செய்வது துக்ளக்தனமாகவல்லவா இருக்கும்?

சோமநாதபுரம் ஆலயத்துக்கும் ராமஜன்ம பூமிக்கு அளித்துள்ள விதிவிலக்கைச் சட்டத் திருத்தம் மூலம் அளிக்கலாம்தான். அப்படித் திருத்த ஒருப்பட்டால் அது, அது போன்ற பல திருத்தக் கோரிக்கைகளுக்கு மடைதிறந்துவிடும் செயலாகவல்லவா முடியும்? முடிவில் சட்டம் நீர்த்துப் போகுமே.

மதமாச்சர்யமே மிகுதியும் உடைய பி.ஜே.பி.யின் வளர்ச்சியை மறிக்க வேண்டும் என்ற கருத்துக்கு நடுநிலையாளரிடையே, எதிர்ப்பு இருக்க வாய்ப்பில்லை. ஆனால், இவ்வளர்ச்சி, மறிப்புக்கு ஜனதா தளம் காங்கிரசோடு இணைவது ஒரு பெரிய வழி என்ற தங்கள் கருத்தை என்னால் ஏற்க இயலவில்லை.

காங்கிரஸில் பாரம்பரிய ஆட்சி இனி இருக்காது என்று எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்? பதவியை சோனியா வசம் ஒப்புவிக்கப் பல காங்கிரஸ் தலைவர்கள் இன்னும் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டுதானே இருக்கிறார்கள்?

சென்னை - 14, பொ. வஜ்ரவேலு.

◆ சென்ற வார கல்கி இதழ் இலவச வெளியீடாக இருக்குமோ என எண்ணி ஏமாந்ததுதான் மிச்சம். அட்டையில் விலையைப் பிரசுரிக்காவிட்டாலும், கடைக்காரர் மூன்று ரூபாய் வாங்கி விட்டார்!

சென்னை - 61, வி. பிரசாந்த்.

◆ பேராசிரியர் கல்கி அவர்களின் பிறந்த தினமான 9.9.91 அன்று அவருடைய ரசிகன் என்ற முறையில் அவருடைய நல்லாசியை 'கல்கி' ஏடு மூலம் வேண்டுகிறேன்.

எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், கவிஞராகவும், நிர்வாகியாகவும், தேசியவாதியாகவும் புகழ் பெற்ற பேராசிரியர் கல்கி அவர்கள், தொட்டது எதுவும் துலங்காமல் போனதில்லை. வாழ்க கல்கி நாமம்! ஓங்குக கல்கி புகழ்!

ஆலடிபூர், வெள்ளகால் இரா. கந்தையா



◆ தராசு பதில்கள் பகுதியில் ''கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவது நிரூபிக்கப்படுமானால் சப்-இன்ஸ்பெக்டர் வேலை நீக்கம்'' என்ற முதல்வரின் அறிவிப்பைக் கிண்டல் செய்துள்ளீர்கள். கள்ளச் சாராய அரக்கன் காலூன்ற மூன்று காரணங்கள். 1) குடிக்கு அடிமையானவர்கள். 2) குடியடிமைகளை மூலதனமாய்க் கொண்டு கொள்ளையடிக்கும் கள்ளச் சாராயப் பேர்வழிகள். 3) கண்டும் காணாமல் கையூட்டுப் பெற்று வாழும் காவல்துறையினர். இதில் மூன்றாவது காரணத்தைச் சரிப்படுத்தினாலே, முதலிரண்டையும் மெல்ல மெல்லச் சரிப்படுத்திக் கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழித்து விடலாமென்பதால் முதல்வரின் அறிவிப்பை நான் மனமார வரவேற்கிறேன். ஆனால் இது மட்டும் போதாது. கண்ணுக்குத் தெரியாத, ஆனால் மிகவும் வீரியமான ''அரசியல் தலையீடு'' என்ற மிக மிக முக்கிய காரணத்தைத் தவிர்க்கும் வகையில் இதய சுத்தியுடன் முதல்வர் செயல்பட வேண்டும்.

முசிறி, முக.தி.க. பாலசுப்பிரமணியன்.

◆ 'வாடகை வீடுகளும், வேதனைக் கோடுகளும்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரையில் ''சொந்தக்காரர் வீட்டைப் பழுது பார்க்கவில்லை யானால் வாடகைதாரரே பழுது பார்த்து விட்டுச் செலவை வாடகைப் பணத்திலிருந்து கழித்துக் கொள்ளலாம்'' என்று கண்டிருப்பது தமிழ்நாடு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் பிரிவு 22 க்கு முரணானது.

வாடகைதாரர் அறிவிப்புக் கொடுத்து போதிய காலம் கடந்த பின்பும் சொந்தக்காரர் ரிப்பேர் செய்யவில்லையானால் வாடகைதாரர் வாடகைக் கட்டுப்பாட்டு அலுவலர் முன்பு மனு கொடுத்து அவரிடமிருந்து பழுது பார்க்கும் செலவை வாடகையிலிருந்து கழிக்கவும் அனுமதி பெற வேண்டும். மேலும் ரிப்பேர் செலவு ஒரு வருடத்திற்கு ஒரு மாத வாடகைக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும்.

திருநெல்வேலி, டி.வி. ஹெளரி. (வழக்கறிஞர்)

◆ வெற்றி நிச்சயமாகிவிட்டது ஓட்டு வித்தியாசம்தான் பார்க்கணும் என்று சொல்பவர்களுக்கிடையில் ஓட்டுக்காக காலில் செருப்பில்லாமல் உயர் ஜாதியினரிடம் எல்லாம் ஓட்டுக் கேட்டேன் என்று சொல்வது அமைச்சரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

மாப்பிள்ளைக் குப்பம், பி. முருகேசன்.

◆ 'உயர் ஜாதியினர் உள்ள பகுதியில் செருப்புப் போடாமல்தான் பிரசாரம் செய்தேன். ஏனெனில் வோட்டு விழ வேண்டுமே!' என்று கூறியுள்ளார் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் ஆனந்தன். வோட்டுக்காக அரசியல்வாதிகள் எதையும் செய்வார்கள் என்பதை நிரூபித்து விட்டார்!

வேலூர், கே.பி. சாரதி.



◆ 'ஆண்மை' என்ற சிறுகதை அற்புதமாய் இருந்தது. வெகு நாளைக்குப் பிறகு நல்ல சிறுகதை படித்த நிறைவு கொடுத்தது. ஆசிரியர் வையவனுக்கு என் பாராட்டும் நமஸ்காரங்களும்.

சென்னை - 4, பாலகுமாரன்.

◆ 'அம்சவல்லி இன்னும் வர வில்லை!' என்ன ஓர் அற்புதக் கதை.... பஸ்கள் ஓடவில்லை என்றால் எப்படியெல்லாம் நடக்கும் என்பதைத் தமிழினியன் அதில் நன்கு உணர்த்தியிருக்கிறார்.

தென்பாதி, பி. ரமேஷ்குமார்.

◆ தமிழ் மண்ணின் வாசனையைத் தமிழறியாதவரையும் தமது ஆங்கில எழுத்துப் பணி மூலம் நுகரச் செய்தவர் திரு கே.எஸ். வேங்கடரமணி அவர்கள். 'MURUGAN THE TILLER' (முருகன் ஓர் உழவன்) என்ற ஆங்கில நாவல் அவரது படைப்பிலேயே சிறந்ததாகும். காவிரிக் கரையின் ஆழ்வாத்தி கிராம எழில் விவரணையும், நையாண்டிப் பூச்சு வரிகளும், வார்த்தை அணிவகுப்பு நேர்த்தியும் கொண்ட அற்புதப் படைப்பு இது. இந்த ஆங்கில நாவலைப் படித்து முடித்ததும் கதா பாத்திரங்களைப் பிரியும் ஆதங்கம் ஏற்படாமல் இருப்பின் அவர்கள் கல் நெஞ்சினர் என்று கூறுபவரும் உண்டு.

இதற்கு சிறப்புப் பெற்ற இலக்கிய மேதையை, 'கல்கி'யின் எழுத்தில் நினைவு கூர்ந்தது பொருத்தமே.

ஈரோடு, பி. நாச்சிமுத்து.

◆ ''நம் கட்சி வேட்பாளர்கள் தோற்றாலும் பரவாயில்லை; நம்மை நம்பி வந்த காங்கிரஸ் வேட்பாளர்கள் தோற்கக் கூடாது'' என்ற பெருந்தன்மையுடன் எம்.ஜி.ஆர். நடந்து கொண்டதை நினைவு கூறும் யசோதா, 'தன் எதிராளி வென்றாலும் பரவாயில்லை; எதிர்க் கோஷ்டி தோற்க வேண்டும்' என காங்கிரஸ் கட்சியினர் கட்சிக்குள்ளேயே வளர்த்துள்ள பூசலை ஏன் பூகம்பமாக நினைக்கவில்லை? இரு தொகுதிகளிலும் இ. காங்கிரஸ் தோற்றால் வாழப்பாடியாரின் பதவி பறி போகும் என்ற எண்ணத்தில் மூப்பனார் கோஷ்டி மிதக்க, காங்கிரஸ் தோற்றால்தான் மூப்பனார் கோஷ்டி தன் வழிக்கு வரும் என அ.தி.மு.க.வும் வாழப்பாடி கோஷ்டியும் நினைக்க, மொத்தத்தில் 'உன்னாலே நான் கெட்டேன்; என்னாலே நீ கெட்டாய்' என்ற கதையே அரங்கேறியுள்ளது!

கோவை சிவானந்தபுரம், கே.ஆர். விஜயா.

சுயவேலை வாய்ப்பு :

எளிதாகப் புகைப்படங்கள் எடுக்க, நாற்பது நாள் பயிற்சி முகாமில் 32 சிறுவர் சிறுமியருக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார், பார்த்திவ் ஷா.



பாமரச் சிறுவரும் படம் எடுக்கலாம்

பயிற்சி பெற்ற குழந்தைகளின் வயது எட்டிலிருந்து பதினைந்துக்குள்தான். அத்தனை பேரும் மேற்கு தில்லி மங்களபுரி தொழிலாளர் குடியிருப்பு வாசிகளான அடித்தட்டு மக்களின் குழந்தைகள்.

வீதிநாடகக் கலைஞர், காலம் சென்ற சஃப்தர் ஹஷ்மி நினைவு அறக்கட்டளை தான் இந்தப் பயிற்சி முகாமை நடத்தும்படி பார்த்திவ்வைக் கேட்டுக் கொண்டது.

கேமராவைக் கையாள எடுத்த எடுப்பில் இவர் கற்றுத்தர ஆரம்பித்து விடவில்லை. முன்னால் அந்தச் சிறுவர், சிறுமியருடன் நிறையப் பேசி, அவர்களுடைய உணர்வுகளை, எண்ணங்களை, அனுபவங்களை அறிந்து கொண்டார்.

பிறகு அவரவர் வீட்டில் இருக்கும் புகைப்படம் எதுவானாலும் எடுத்துக் கொண்டு வரச் சொல்லி, அதனுடன் அவர்களுக்குள்ள தொடர்பை விளக்கினார். தாமும் சில புகைப்படங்களை எடுத்து வந்து காண்பித்து, ''இவற்றில் என்ன தெரிகிறது உங்களுக்கு? இந்தப் புகைப்படத்தை வேறு விதமாக எடுத்திருக்க முடியுமா?'' என்று கேட்டுப் பயிற்சியை ஆரம்பித்தார். கேமராவில் பிலிம் போடுவது முதல், டார்க் ரூமில் புகைப்படத்தைக் கழுவி எடுப்பது வரை பயிற்சி கொடுத்தார்.

ஏழு சாதாரண கேமராக்களுடன், அவை இயங்குகிற முறை, அவற்றின் பாகங்கள் இயங்கும் விதம் எல்லாவற்றையும் பொறுமையாகச் சொல்லிக் கொடுத்தார் பார்த்திவ்.

தாங்கள் வசிக்கும் மங்களபுரி குடியிருப்பின் இயற்கையான சூழலையே ஒரு பையன் புகைப்படம் எடுத்தான். கயிற்றுக் கட்டிலில் பெரியவர் படுத்திருக்க, மாடும் மரமும் அருகே இருக்க, படம் இயற்கையாக அமைந்திருந்தது.

ருக்சனா என்ற பதினோரு வயதுப் பெண், மசூதி ஒன்றின் வாயிலில் பல வடிவங்களில் கழற்றி விடப்பட்டிருக்கும் காலணிகளைக் கலை நயத்துடன் எடுத்திருந்தாள். தலைப்பு : 'அமைதி'.

இன்னொரு சிறுவன் எடுத்த படத்தில், பரபரப்பான சாலையின் குறுக்கே, முப்பரிமாணத் தோற்றம் தருகிற மாதிரி ஒரு சைக்கிள் விழுந்து கிடந்தது.

படங்களை வைத்து ஒரு கண்காட்சியே நடந்து ஏகப்பட்ட பாராட்டு!

சுயவேலை வாய்ப்புக்குக் கேமரா ஒரு சிறந்த சாதனம் அல்லவா!

- சித்தார்த்
சண்டே டைம்ஸ்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு இல்லையேல், உங்கள் குழந்தை சுறுசுறுப்பாக விளங்கத்தேவையான 'சரி'யான கலோரிகளைப் பெறமுடியாது.

'ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்.'

இலவசம் செரிலாக் பேபி கேர் புத்தகம்





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

Registered as Newspaper in Srilanka

